முத்தானந்தர்

# ஞானக்குறவஞ்சி



தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையம்

# முத்தானந்தர் ஞானக் குறவஞ்சி

பதிப்பாசிரியர்
மு. அருணாசலம்

பொறுப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981

First Edition: 1981
T. N. D. A. Pub. No. 73

© Tamilnadu State Department of Archaeology

# MUTHANANDAR NANAK KURAVANJI

Editor
M. ARUNACHALAM

General Editor
DR. R. NAGASWAMY

Price Rs. 4-50

Printed and Published by the State Department of Archaeology
on behalf of
Oriental Manuscripts Library, Madras.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங் களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**
*27-12-1980*

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

The *Muttānandar Kuravañji* is one more *kuravañji* poem on the lines of a classical kuravanji. This is a complete poem in 144 verses, in the usual *kalippa*, *kalitturai*, *viruttam*, *ahaval*, *venba*, and *taru* metres; of these *taru* is the name given for the *kīrttanai* form in dramas and operas. There are also a few prose passages interwoven in the text.

The prefatory part of the poem consists of eight verses of which the first five deal with salutation to the Supreme Being, to Vinayaka and to the other deities. The substance of the poem and the name of the book are mentioned in the usual *viruttam* metre; of these, the sixth is a long *toḍaiyam* offering salutation to the earlier preceptors in the Siddha line; the seventh is a salutation to Sakti, while the last is a *maṅgalam* verse, a song of benediction.

Then follows the next proper. The next is the *kaṭṭiyak-kāran's* part (stage manager) and it is quite elaborate here. Then the disciple appears. In the role of the heroine for the poem, his love-lorn utterances find detailed mention. The usual heroine's maid is here replaced by *Sitary* (mother's younger sister) who plays the same role. She goes out and fetches the *kuratti*, so that she may tell the hand of the heroine and say if she would get the love of the hero (here the guru). Then the songs of the kuratti in the traditional fashion-the glory of the place, of her own hills, the wonder's therein, the herbs found there, her own country and her tribe, and lastly she describes the rewards she had obtained elsewhere by telling the hands of different persons. Then she makes arrangements for invoking her favourite deities to help her in prophesying. She tells the hand of the heroine, gets appropriate rewards and goes to Atrur.

The Kurava or Singan now arrives on the scene, describing his own greatness. There is rain, all places are flooded, and the

birds have no place to settle down and rest. Sinnan, the friend of Singan arrives and the two spread their nets for ensnaring the birds. The birds get caught but Singan releases them as they remind him of his wife, the Singi.

Singan grieves for his absent wife and Sinnan brings her to him after a search. There is the usual duet between them where he asks her about the various things on her person and she replies that they were all presents she had obtained for her hand-reading. Then she in turn asks him about the birds he had caught. He gives an account of the birds he had caught but says he had distributed them all to the earlier preceptors. Then the kuratti utters a few verses of benediction. The Siddhar blesses the kuratti. She returns home with the kuravan and the two live happily.

This poem, the Muttanandar kuravanji is a *Jñānakkuravañji*. But it is strange that a small book of kuravanji has been published by the Tanjavur Maharajah Serfoji Sarasvati Mahal Manuscripts Library with the title, *Jñānak-kuravañji*; it is not a kuravanji at all, but a collection of three shorter poems, which are more of the nature of a *kuḷuva nāṭakam*. All the three separate poems are called here *Jñānakkuravañji*. The subject matter of the three are as follows :

The first is called in its invocatory verses, *Kumāra Saravanak-kuravañji* on Kumara enshrined in Tiruchendur. The Kurava appears, sings his own praises, and sets about laying the net for trapping the bird of True wisdom (*Mey-Jñānappāl*). There is a duet between the kuravan and the kuratti and the poem ends with the kuravan's success in trapping *wisdom*. The second is a very short poem on the same subject, There is no second character here; the kuravan ends up by grasping the Siva-bird and himself attaining the Brahman-hood. The third one printed in this booklet is a shorter version of the mystic Pir Muhammed's *Jñānak-kuravañji* which is just a duet between the kuravan and kuratti (Singan and Singi), in mystic language. This cast poem has been printed a score of times as part of the Siddha songs-the 18 Siddha *Jñānakkōvai* and one fails to understand why an imperfectly got up version is printed here.

The *Jñānakkuravañji* which is being printed now is vastly different from all the foregoing. This is a full kuravanji of the classical type complete with all the three sections-the appearance of the heroine, the appearance of the kuratti and her soothsaying and lastly the union of the kuratti and the kuravan.

This poem is called the Muttānandar Jñānak-kuravanji, where Muttānandar is the disciple (the heroine of traditional kuravanji poems) at Atrur. He goes out in search of his guru, Sadasiva guru (who represents the hero or *talaivan* of the other poems). All other activities in the search of the disciple are depicted as the various activities in the story of the kuravannji poem. The author has written the poem in the Siddha pattern of philosophy and in this respect we may consider it as a valuable addition to the Siddha literature.

Apart from this aspect, the poem gives us many deviations from the usual kuravanji pattern. A few are the following:

In verse 10, offering salutation to the great, the author gives the dasāngam (ten insignia of royalty). Here he mentions the traditional hill, state, garland, banner, horse and then ignoring the other traditional four such as the elephant, drum, city and river, has substituted five new elements such as *jñāna-education*, *gati-kula* (the dynasty which is the goal of soul), penance and truth as character. We learn here that Sadasiva guru hailed from Nagai (Nagappattinam). The kuravanji who appears here is the kuravanji of Kailas.

In the place of the usual *pāngi* (friend or maid) of the heroine, we have here a *sitray*, an aunt who fetches the kuratti. The Kuratti who appears is not the usual handsome woman but one who has mastered Siva-yoga. Her *vaasal taru* describing the presence of the guru is very elaborate. Equally elaborate is her description of her hills and the herbs found there; twelve hills are mentioned. Then a fantastic description of the people (siddhar) inhabiting the different areas.

The kuravan who appears is the kuravan of Atrur. The introduction of rains here is a novelty. When the birds are caught in the net, they lament their folly in settling on the nets. Singan

(kuravan) distributes to the sages, the birds caught by him! Evidently these sages are non-vegetarians! While taking out the birds from the nets, he finds a couple, male and female, and this probably reminds him of his wife. He releases the birds! Singi questions him regarding the birds caught by him and he replies that he had given them away. This is a feature not found elsewhere.

The benediction of Singan and Singi at the end is very elaborate, consisting of six verses. Here the names of all the 18 siddhars are mentioned.

This is a fine kuravanji poem in the traditional pattern but striking out a new path. I am happy that this work now sees the light of print.

**M. ARUNACHALAM**

# குறிப்பு

இந்நூல் ஓலைச்சுவடியாக திரு. எஸ். வையாபுரி பிள்ளை அவர்களிடம் இருந்தது. அதிலிருந்து இந்நூலின் பதிப்பாசிரியர் காகிதப்படி எடுத்து வைத்திருந்தார். இப்பதிப்பு அக்காகிதப்படி கொண்டு அச்சிடப்படுகிறது.

(kuravan) distributes to the sages, the birds caught by him! Evidently these sages are non-vegetarians! While taking out the birds from the nets, he finds a couple, male and female, and this probably reminds him of his wife. He releases the birds! Singi questions him regarding the birds caught by him and he replies that he had given them away. This is a feature not found elsewhere.

The benediction of Singan and Singi at the end is very elaborate, consisting of six verses. Here the names of all the 18 siddhars are mentioned.

This is a fine kuravanji poem in the traditional pattern but striking out a new path. I am happy that this work now sees the light of print.

**M. ARUNACHALAM**

# குறிப்பு

இந்நூல் ஓலைச்சுவடியாக திரு. எஸ். வையாபுரி பிள்ளை அவர்களிடம் இருந்தது. அதிலிருந்து இந்நூலின் பதிப்பாசிரியர் காகிதப்படி எடுத்து வைத்திருந்தார். இப்பதிப்பு அக்காகிதப்படி கொண்டு அச்சிடப்படுகிறது.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | ஆராய்ச்சி குறிப்புரை | 10 |
| 3. | பொருள் அகராதி | 13 |
| 4. | நூல் | 15 |
| 5. | செய்யுள் முதல் குறிப்பு அகராதி | 87 |

# முகவுரை

குறவஞ்சிப் பிரபந்தம் 17-ஆம் நூற்றாண்டில் தொடங்கி, மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு புதுவகைப் பிரபந்தம் ஆகும். இது நாடகத் தமிழ் இலக்கியம்; நூல் தொடங்குவதிலிருந்து இறுதிவரை தோன்றுகின்ற எல்லாப் பாத்திரங்களும், பாடி ஆடுவதற்கு என்றே அமைக்கப்பட்டது.

முதலில் இவ்வகைப் பிரபந்தம் இறைவனுடைய புகழைப் பாடுவதாக எழுந்து, காலகதியில் தனிமனிதரைப் பாடுவதாக அமைந்து விட்டது.

இக்கால ஆராய்ச்சியாளர் குறவஞ்சி நாடகம், தொல் காப்பியத்தில் கூறப்பட்டுள்ள எட்டுவகை வனப்புக்களுள் ஒன்றாகிய புலன் என்ற வனப்பிற்கு உரியதாகக் கருதுவார்கள். இது பொருத்தமில்லை; ஏனெனில் உரையாசிரியர்கள், பெயருக்கு ஓர் அர்த்தம் கூறுகிறார்களே தவிர, அவர்கள் காலத்திலேயே வனப்பு என்ற கருத்தெல்லாம் மறைந்து விட்டது. ஆகவே தொல்காப்பியர் கூறும் வனப்பை இரண்டாயிரம் ஆண்டுகட்குப்பின் தோன்றிய நூலில் பொருத்திப் பார்ப்பது வேண்டாத ஆய்வு.

இது போலவே குறத்திப்பாட்டு என்பதற்கு இலக்கணம் பன்னிருபாட்டியலில் சொல்லப்பட்டிருந்த போதிலும் கூட, அப்படி ஒரு நூல் பன்னிருபாட்டியலின் காலத்து இல்லை. 'நூல் செய்வோர் இந்நெறியில் செய்க' என்று அதன் ஆசிரியர் வழி காட்டினார் என்றே கருதவேண்டும். குறவஞ்சி நாடகம் அந்த வழியில் செல்லவில்லை. இது மூன்று அங்கங்களோடு தனி நெறியில் அமைந்தது. பிற்காலத்தில் தோன்றிய குளுவ நாடகம் என்பது நாம் காட்டிய குறவஞ்சி நாடகத்தின் மூன்று அங்கங்களில் மூன்றாவது அங்கம் மட்டுமே ஆகும்.

## பொது இயல்புகள்

திருக்குற்றலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி என்ற கருத்து நிலவுகிறது. பொருள் பொலிவால் அது சிறந்தது. இருந்த

போதிலும் கூட, பாவவிநாசமுதலியார் பாடிய கும்பேசர் குறவஞ்சியே முதலாவது தோன்றிய குறவஞ்சி என்று கருத இடம் உண்டு.

குறவஞ்சி பெயர்பெறும் முறைகள் பல. இறைவன் பெயராலும், தலத்தின் பெயராலும், தலைவன் பெயராலும், பொருள் அமைப்பாலும், சாதிப் பெயராலும் பெயர்பெறு கின்றன. காப்பு, அவையடக்கம், நூற்பயன், மங்கலம் என்ற பகுதிகள் எல்லா நூற்களின் பாயிரத்திலும் உண்டு. கட்டியக் காரன் வருகை என்ற பகுதி, சிலவற்றில் மட்டுமே காணப் படுகிறது. இது நூல் அமைப்பிற்குப் புறம்பானது. இம் முத்தானந்தர் குறவஞ்சியில் இப்பகுதி உண்டு.

குறவஞ்சியாக வருபவள் யார் என்பதில் இக்காலப் புலவர்கள் சில மாறுதல்களைக் காட்டி இருக்கிறார்கள். பண்டைப் பெருநூல்களில் குறவஞ்சி, குறத்தியே தான். ஆனால் தியாகேசர் குறவஞ்சியில் நாரதரும், லட்சணக் குறவஞ்சியில் இலக்குமியும், கிருஷ்ணமாரி குறவஞ்சியில் கிருஷ்ணனும் குறத்தியாக வருகிறார்கள். இவ்வாறு இவர்கள் அமைவதற்கு மூலம், மின்னொளியாள் குறம், வித்துவான் குறம் போன்ற அம்மானைக் கதைப் பாடல்களில் காணப்படும் முன் மாதிரி என்று கருதவேண்டும்.

குறவஞ்சி நாடகங்கள் எல்லா யாப்புக்களையும் பயன் படுத்துகின்றன. விருத்தம், கலிப்பா, கலித்துறை, வெண்பா, ஆசிரியம், தரு, சிந்து (நொண்டிச்சிந்து, ஆனந்தக்களிப்பு) முதலியனவும், சிலவற்றுள் உரை நடையும் காணப்படும். முத் தானந்தர் குறவஞ்சி சிறுபகுதி வசனத்தை உபயோகிக்கிறது. இந்நூலினுள் செந்தமிழும் ஆங்காங்கு சேரிமொழியும் (பேச்சு நடையும்; கொடுந்தமிழ் என்று இதைச் சொல்வது பிழை) காணப்படும். ஆங்காங்கே நாடோடிப் பாடல்களின் தன்மையும், பழமொழியும் அமைவது உண்டு. சரபேந்திர பூபாலக் குறவஞ்சியைப் பாடிய சிவக்கொழுந்துதேசிகர். தாம் அறிந்த பல்வேறு மொழிகளில் சிலசில வார்த்தைகளைச் சமற்காரமாக அமைத்துப் பாடியுள்ளார். குற்றாலக் குறவஞ்சி தோன்றிய பிறகு, பெரும்பாலான குறவஞ்சிகள் அதைப் பின்

பற்றியே எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரின் திறமைக்கு ஏற்ற படி நவரசங்களும் நூலில் அமைவது இயல்பு.

**கச்சபேசர் குறவஞ்சி**

சென்ற நூற்றாண்டில் சந்நிதிமுறை போல ஒரு தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது எளிமையான பிரபந்தப் பாடல் பாடினோர் குறவஞ்சி என்ற பெயரில் குறவஞ்சிப் பிரபந்தத்தின் முக்கியக் காட்சிகளை ஒரு பகுதியாகப் பாடுவதை ஒரு மரபாகக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகிறது. 'சென்னை மாநகரம் கச்சபேசுவரர் மணிப்பிரவாளம்' என்பது 15 பிரபந்தங்கள் கொண்ட ஒரு சிறு தொகுப்பு. இதைப் பாடியவர் 'சங்கீத சாகித்தியத்தில் சிறந்த வித்துவானாய் இருந்த விச்சூர் தாமோதரமுதலியார்.' இது அச்சாகியது 1849 இல். இதில் மூன்றாவது பிரபந்தம், **கச்சபேசுவரர் பேரில் குறவஞ்சி**. இதில் 11 தருக்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் இங்கு ராகமும் தாளமும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனுள் சொல்லப்பட்ட பொருள் ; குறத்தி தலப்பெருமை கூறுதல், தலைவி நினைத்த குறியைச் சொல்லுதல், மூலிகை வளப்பம் சொல்லுதல், குறவன் சிங்கியைத் தேடுதல், குறவனுக்கும் குறத்திக்கும் நடந்த ஏசல், பறவைகள் திரளாக வருதல், பாங்கன் தோன்றிச் சிங்கனிடம் தன் வல்லமை கூறல், சிங்கனான குறவன் பேசாதே என்று அவனை அடக்குதல், பறவைகள் வலையில் அகப்படுதல், சிங்கன் பாங்கனுக்கு நல்ல கறிவகைகள் தருவதாகக் கூறுதல் என்ற பகுதிகள் ஆகும். இங்கு கறி என்பது வேட்டையாடிய பிராணிகளைச் சமைத்த புலால் உணவு. இதனால் அக்காலத்தில் இப்பகுதிகள் குறவஞ்சியில் முக்கிய பாகங்கள் என்று கருதப்பட்டன என்று நாம் யூகிக்கலாம். இதனுள் மூலிகை வளப்பம் கூறுதலும், பறவைகளைப் பிடிப்பதற்கு முன்னமேயே குறவன் குறத்தி ஏசிக் கொள்வதும், பாங்கன் தன் வல்லமை கூறுதலும், குறவன் கறி சமைத்துத் தருவதாகப் பாங்கனுக்குக் கூறுவதும் புதுமைகள்.

**நாட்டியமும் இசையும்**

நாடகத் தமிழ் என்று சொல்லும் போது, இதை மூன்றாகக் கருதலாம். முதலாவது நாட்டியம், நடனம் என்பது; பரத நாட்டியம் என்பது இதுவே. இதில் ஓரே பாத்திரம் தோன்றி

ஆடுகிறது. இரண்டாவது நாட்டிய நாடகம். இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் ஆடுகின்றன. இவை இரண்டிலும் இசை உண்டு. மூன்றாவது நாடகம் மட்டும். இதில் நாட்டியம் இல்லை. இன்று மேடையில் சாதாரணமாய்ப் பார்க்கும் நாடகங்கள் எல்லாம் இம் மூன்றாவது பிரிவினைச் சாரும். குறவஞ்சி நாடகமானது இவற்றுள் இரண்டாம் பிரிவாகிய நாட்டிய நாடகப் பகுதிக்கு உரியது. இதில் பாத்திரங்கள் அரங்கில் தோன்றியதுமுதல் ஆடிக்கொண்டே நடிக்கிறார்கள். ஆட்டம் வரும் போது பாட்டும் தானே உடன் வருகிறது. ஆட்டம் இல்லாமல் குறவஞ்சி நாடகம் இல்லை.

குறவஞ்சி பாடிய புலவர்கள் அனைவரும் சிறந்த இசை வாணர். இது நாட்டிய நாடகம் ஆதலால் புலவர்கள் எல்லாப் பாடல்களையும் இசையுடன்தான் அமைத்திருக்கிறார்கள். சில ஏடுகளில் ராகமும் தாளமும் சொல்லப்பட்டிருப்பது உண்டு. எல்லாக் குறவஞ்சி நாடங்களும் சிறந்த இலக்கியச் சுவை உடையன என்று சொல்லமுடியாது. இலக்கியச் சுவை உடையன சில: கும்பேசர், குற்றாலம், அழகர், வருணாபுரி முதலியன குறிப்பிடத்தக்கவை. தரு என்ற பகுதியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகள் முழுமையோ சிலவோ இருக்கும். (தரு என்பது கீர்த்தனை வடிவம்).

**முதல் அங்கம் :** தலைவியும், தோழியும். நிகழ்ச்சி, சுவாமி உலாவருவது மட்டும். இது தெய்வக் காதல் நிலை. **இரண்டாவது அங்கம் :** தலைவியும் குறத்தியும். குறத்தி குறி சொல்கிறாள், பரிசில் பெறுகிறாள். இது சாமானிய உலகியல் நிலை. **மூன்ருவது அங்கம் :** சிங்கன், சிங்கி, சின்னஜன் பேச்சும் செயலும். இழிசினர் வழக்கு என்று உரையாசிரியர் கூறுகின்ற நிலை. இது கீழ் நிலை. மேற் கூறிய நாடகத்தின் மூன்று அங்கங்களும், மேல் தரத்தில் இருந்து, ஒவ்வொன்றாக இழிந்து வருவதை இங்கு காண்கிறோம்.

குறவஞ்சியின் பொருள் தெய்வக்காதல். நாயகநாயகித் தத்துவம். ஓர் ஆழமான பக்தி நிலையைக் கும்பேசர் குறவஞ்சி, குற்றலக்குறவஞ்சி போன்றவற்றில் காணலாம். ஆனால் அரசியல் தலைவர்கள் மீது குறவஞ்சி பாடத்

தொடங்கிய போது, இங்கு நிலை இழிந்து விட்டது. முத்து மாரிக் குறவஞ்சி போன்றவை ஓர் இழிந்த நிலையைக் காட்டு கின்றன.

### முத்தானந்தர் குறவஞ்சி

இந்நூல் முத்தானந்தர் ஞானக்குறவஞ்சி எனப் பெயர் பெறுகிறது. முத்தானந்தர் என்ற மாணாக்கன் சதாசிவகுரு என்ற தம்முடைய ஞான ஆசிரியரைத் தேடிக் கண்டு, அவருடைய அருள் பெறுகிறான் என்ற செய்தியை இந்நூல் குறவஞ்சி அமைப்பில் முற்றுருவகமாக விரித்துப் பாடுகின்றது. இதில் அமைந்துள்ள பாடல் தொகை 144. இதனுள் விருத்தம், கலிப்பா, கலித்துறை, ஆசிரியம், வெண்பா, தரு என்ற யாப்பு அமைதிகள் உள்ளன. தரு என்பது கீர்த்தனை வடிவமாகும். இது பிற்கால நாடகங்களில் வருகின்ற கீர்த்தனைக்கு வழங்கிய பெயர். இந்நூலின் பொருள், அரி அயன் தனக்கு எட்டாத சிகரப் பொருள். அதனைத் தேடி திளைத்துப் பிறவி அறுக்கும் பனுவல் இது என்கிறார் இந்நூலாசிரியர் முத்தானந்தர் என்பவர். தம்முடைய ஞான தேட்டத்தையே இவர் இந்நூல் ஆக்கிச் சொல்கிறார். இவருடைய குரு சதாசிவ குரு என்பவர். இந்த குருவின் ஊர் நாகை என்று தெரிகிறது. (பாடல் 10 வரி 46) நூலாசிரியர் ஊர் ஆற்றூர்; இந்த ஊரே கதை நிகழுமிடம். நூலின் அமைப்பையும் நடையையும் காணும் போது இந்நூல் 18 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் செய்யப் பெற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது.

### நூற் பொருள்

**தொடக்கப் பகுதி:** முதல் 10 பாடல்கள் பாயிரப் பகுதி. முதல் பாடலில் பரம்பொருள் ஆகிய நிர்மலனுக்கு வணக்கம் கூறுகிறார். அடுத்த பாடலில் விநாயகருக்கு வணக்கம் கூறுகிறார். அடுத்த பாடலில் பிற தேவர்கள் சிலரை வணங்கு கின்றார். நான்காம் பாடலில் நூற்பொருள், பிறப்பை நீக்குவது என்று சொல்லி, ஐந்தாம் பாடலில் நூலின் பெயர் ‘குருவைத் தேடும் தமிழ்க் குறவஞ்சி’ என்று சொல்லுகின்றார். இவ்வைந்து பாடல்களும் அறுசீர் விருத்தங்களாய் உள்ளன.

ஆறாம் பாடல் தோடையம். இது சிவ சிவ என்ற முடிவை உடைய வரிகளாலான 10 கண்ணிகளைக் கொண்டது. இங்கு

சித்த மரபினர் என்று சொல்லத்தக்க பல ஞானியரை வாழ்த்துகின்றார். அடுத்த பாடலில் சத்தி வணக்கம். பின் மங்களம். இங்கு சகளமூர்த்தி, சகள நிஷ்களம் முதலிய மூர்த்தி களுக்கு மங்களம் கூறி ஐந்து கண்ணிகளில் இதை முடிக்கின்றார். பிறகு குருவைச் சீடன் தேடுதல். பத்தாம் பாடல் **பெரியோர் வணக்கம்** என்ற பெயரில் **தசாங்கம்** கூறுவது. இது 86 அடி யையுடைய நீண்ட ஆசிரியப்பா. இங்கு நூலாசிரியர் தாம் அல்லி நகரில் பிறந்து குருவைத் தேடிவந்து, சதாசிவ குருவைக் கண்டமை சொல்லுகின்றார். இவருக்குத் தசாங்கம் சொல்லும் முறையில் மலை, நாடு, தார், பரி, கொடி, ஆனை என்ற ஆறையும் கொண்டு பிறவற்றை நீக்கி கல்விநெறி, கதிகுலம், தவம்,மெய்க்குணம் என்பவற்றைப் புதுமையாகச் சொல்லுகிறார். இவர் வீதியில் உலா வரும்போது முத்தானந்தச்சீடன் இருந்து பார்க்கிறான். ஆசிரியர் ஆகிய இந்தத் தலைவியிடம் கயிலைக் குறவஞ்சியை அழைத்து வருகின்றேன் என்று பாங்கி பேசிய செய்தியைக் கூறுகிறார். இவ்வாறு கூறி, பெரியோர்த் துணைப்பதம் சரண் என்று இப்பகுதியை முடிக்கிறார்.

பின் ஐந்து பாடல்கள் கட்டியக்காரன் வருகை, அவன் வருணனை. சதாசிவ குருவின் புகழைச் சொல்லிப் பராக்குக் கூறுகிறான். பாடல்களில் ஒவ்வொரு பாதி அடியும் பராக்கு என்று முடிகின்றது.

**இனி முதல் அங்கம்:** முத்தானந்தச் சீடன் வருகிறான். வந்த தலைவி விரகதாபத்தால் அரற்றுகின்றாள். இப்பகுதியில் குயில் சிந்து என்பது முதல் பகுதி; இதில் 4 கண்ணிகள். முதல் கண்ணியில் மட்டும் மூன்று அடிகள் உள்ளன. அடுத்த தரு மனத்திற்கு உபதேசம். பாடல் சுவையாக உள்ளது. இதன் பிறகு சம்பிரதாயமான முறையில் சந்திரனைப் பழித்தல், தென்றலைப் பழித்தல் ஆகிய அகப்பொருட் பகுதிகள் உள்ளன.

பின் சிற்றாய் தோன்றுகிறாள். சித்து ஆகிய தாய்; சத்தி என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. இவள் குறவஞ்சி நூல் களில் வரும் தோழிக்குப் பதிலாக வருகிறாள். இவளைச் சொல்லும் தரு 'ஆயிவந்தாள்' என்ற பல்லவியை உடையது. சிற்றாய் ஆவாள் பராசக்தி என்ற கருத்தில் சொல்லப்படுகிறது. அவள் கேட்க முத்தானந்தன் தான் சதாசிவத்தைத் தேடுவதாக்

கூறுகிறான். இப்பகுதி நான்கு நீண்ட கண்ணிகளை உடையது. சிற்றாய் சென்று குறத்தியை அழைத்து வருகிறாள்.

**இனி இரண்டாம் அங்கம்:** வருணனை. 28 அடி கொண்ட ஆசிரியப்பாவில் குறத்தி குறக் கூடையும், ஒரு பிள்ளையை நடத்தியும், இடுப்பில் ஒரு பிள்ளையைக் கொண்டும் அவள் ஆற்றூருக்கு வருவதாகக் கூறுகிறாள். நல்ல சகுனங்கள் காண்கின்றன. அவளுடைய பல கூற்றுக்களில், வாசல்வளம் 11 கண்ணிகள் கொண்டு விரிவானது. மலைவளம்; தங்கள் மலை ஈராறு என்கிறாள். அங்குள்ள அதிசயங்கள் பின்னும் விரிவு. மலைகள், தீர்த்தங்கள், நதிகள், மூலிகைகள் முதலியன விரிவாகச் சொல்லப்படுகின்றன. சொல்லப்பட்ட பன்னிரு மலைகளாவன அறிவின்மலை, மோட்சகிரி, அண்ணாமலை, அத்தகிரி, உதயகிரி, மேருகிரி, சோமகிரி, நாகமலை, தம்பிரான் மலை, அழகர் மலை, மணமுத்து மலை, ஆனை மலை என்பன. பின் தேசவளம் கூறுமிடத்தில் மக்களுடைய வடிவங்கள், செயல்கள், ஆயுள் என்பன விரித்துச் சொல்லப்படும். பின்னர் நாட்டு வளம் என்ற பாடல்கள், குற்றாலக் குறவஞ்சியுடன் ஒத்து நோக்கத்தக்கன. அடுத்து, குலவளம் என்ற இடத்தில் ஏழு வகுப்பு என்று மூலா தாரம்தொடங்கி, துவாதசந்தம் வரையில் உள்ள உடலின் ஏழு ஆதாரங்களையும் சொல்லுகிறார்.

பின்பு குறச்சாதியின் தொழில், பின்னர்உணவு வகைகள்; இங்கு குறத்தி தான் தாவர உணவுவே கொள்வாள், வேறு பிராணிவர்க்க உணவு கொள்ளமாட்டால் என்று கூறுவது சிறப்பாக உள்ளது. அடுத்து அவள் தான் பல சித்தர்கட்குக் குறிசொல்லி அவர்களிடம் பெற்ற பரிசில்களை விரித்துச் சொல் கிறாள். தான் ஏணியின் பழுப்போல இருந்த இடத்திலே இருந்து, பிறரை மேல் நிலைகளுக்கு உயர்த்தி விட்டதாகச் சொல்வது சுவையாக உள்ளது.

இட்டதெய்வங்களை வேண்டுதல் என்ற பகுதியில் முருகன், சிவன், சக்தி ஆகிய தெய்வங்களை வேண்டி, குறி சொல்லத் துணை செய்யுமாறு கேட்கின்றாள். இங்கு வணக்கம் சக்திக்கே.

வழக்கம் போல் குறிக்கான ஏற்பாடுகள் விரிவு. குறத்தி குறி கூறும் பொழுது தொடக்கத்தில் ஒரு நீண்ட வசனப்

பகுதி உள்ளது. இரேகைப் பலன் கூறும்போது ஆனந்தக் களிப்பு மெட்டில் பாடுகிறாள். குறி கூறிப் பரிசில் பெற்று ஆற்றூரில் தங்குகிறாள்.

## இனி மூன்றாம் அங்கம்

இந்நிலையில் சிங்கன் புறப்பட்டு வருகிறான். இவன் 11 ஆம் கண்ணியில், பெண்ணினால் ஆவது என்ன என்று பழிப்பவர்களைக் கண்டிப்பது குறிப்பிடத்தக்கது. இல்லறத்தில் வாழ்பவரை வணங்குகிறுன். ஊரார் சிங்கனைத் தன்குலமும், ஊரும் கூறுமாறு கேட்க, அவன் பெருமையை விரிக்கிறுன். மடாதிபதிகளைத் தூஷிக்கும் வம்பர்களைக் கண்டிக்கிறுன்.

இந்நிலேயில் மழை பெய்கிறது. இது இந்நூலில் உள்ள புதுமை. வெள்ளம் பெருகவே தங்க இடம் இல்லாமல் பறவைகள் தவிக்கின்றன. அப்போது சிங்கனுன குறவன் பாங்கனை அழைத்து இருவருமாகக் கண்ணி வைக்கிறுர்கள். பறவைகள் இரை தேடி வருகின்றன. பறவை வகைகளைப் பாங்கனுக்குக் காட்டுகின்றுன். பறவைகள் மேய்கின்றன. இங்கும் கோட்டாறு சொல்லப்படுகின்றது. இருவருமாகக் கண்ணியைப் (பறவை பிடிக்கும் வலையைப்) பொருத்துகிறுர்கள். ஆங்காங்கு தத்துவப் பொருளை நினைவு ஊட்டுவதுபோல், பறவையாவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய பறவைகள் என்று ஆசிரியர் இங்கு கூறுகின்றுர் (117 ; 3). பறவைகள் வலேயில் சிக்குகின்றன. ‘உரத்துப்பேசாதே’ என்று எச்சரிக்கிறுன். சிக்கின பறவைகள் தப்பிட எண்ணி வலேயை இழுக்கின்றன. “ஐயோ! இவ்வாறு வந்து அகப்பட்டுக் கொண்டோமே” என்று பறவைகள் மனிதர் போலப் பேசித் தங்களுக்குள் வருந்துவதை ஆசிரியர் சுவையாகக் கூறுகிறுர். இங்கு பாங்கன் பெயர் சின்னுன் என்பது.

இரண்டு பறவைகள் ஆணும் பெண்ணுமாகச் சிக்கியதைக் கண்ட சிங்கன் அவற்றை விடுத்துப் போகவிடுகிறுன், என்ற அரிய செய்தியை இங்கு பார்க்கின்றேம். இத்தகைய ஒரு செய்தியைத் திருஈங்கோய்மலை எழுபது என்ற நூலில் நக்கீர தேவர் காட்டுகின்றுர். மானின் கண் தன் காதலியை நினைவூட்டியமையால் வில்லில் அம்பைத் தொடுத்த குறவன், மானை எய்யவில்லே:

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
கையிற் கணைகளைந்து, கன்னிமான்!-'பையப்போ'
என்கின்ற பாவனை செய் ஈங்கோ யே! வெயில்கள்
சென்றன்று வென்றுன் சிலம்பு.

பார்த்த பறவைகள் சிங்கனுக்குச் சிங்கி நினைவைத் தோற்றுவிக்கின்றன. அவளை எண்ணியவாறு வருந்தி நிற்கும் நிலையில், சின்னான் சிங்கியை அழைத்து வருகிறான். கண்ட சிங்கன் மிக மகிழ்ந்து, அவளைப் பலவாறு கொண்டாடுகிறான். பின் அவள் அணிந்துள்ள அணிகளைப் பார்த்து "இவை ஏது?" என்று கேட்கும்போது, இருவர்க்கு மிடையே நிகழ்கின்ற சம்பிரதாயமான உரையாடல் நடைபெறுகின்றது. பின் சிங்கியைச் சிங்கன் அழைக்கிறான்.

அவன் அவளிடம் தான் பட்சிகளைச் சித்தர்கட்குக் கொடுத்தாகச் சொல்லி, அவர்கள் தந்த பரிசில்களையும் சொல்லுகிறான். இவ்வாறு சிங்கி வினவ சிங்கன் கூறுவதான செய்தி பிற நூல்களில் காணப்படவில்லை

**வாழ்த்து**

பிறகு சிங்கி உலகத்தோரையும் சித்தர்களையும் வாழ்த்த, சித்தர் அவளை வாழ்த்தி வெகுமதிகள் ஈந்தார். அவள் குறவனுடன் சென்று சுகமாக வாழ்ந்தாள் என்று நூல் முடிகிறது.

திருச்சிற்றம்பலம் மு. அருணசலம்

# ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

நூலில் சுவையான பொருள்கள் பல சொல்லப்படுகின்றன. சிலவற்றை முறைப்படுத்திக் கீழே கூறுகிறோம்.

**அணிகலன் வகைகள் :** உச்சிச்சுழி, ஓலை, கரியமணி பாச்சி, சிலம்பு, சுருள், செஞ்சிலை, பத்தி நகை, பிறை சுட்டி, பாடகம், பீலி, மணித் தோற்பை, பொற் கண்டம். மணித் தாவடம், மணித்தொங்கல்.

**தமிழ் :** முத்தமிழ் *6-3*, வெண்பா *20, 87, 88, 90*. ஆனந்தக் களிப்பு *96*, நொண்டிச் சிந்து ராகம்—அடாணா *19*.

**தலங்கள் :** அல்லி நகர் *10, 25;* அண்ணாமலை *42, 47;* அழகர் மலை *54;* கூடல் *89-37;* சிதம்பரம் *39-11; 100, 129-3;* தில்லை *91;* நாகை *10-46* (குரு நாடு *10-45*); தோகை மலை (விராலி மலை) *42*.

**தீர்த்தங்கள் :** ஏகாட்சரப் பொய்கை *46*, கமலாலயம் *49*, கயிலைச் சுனை *47*, கண்ணி சுனை *53*, சிவகங்கை *49*, நாக கன்னி தீர்த்தம் *52*, பதினாறு தீர்த்தம் *52*, வயிரவன் தீர்த்தம் *53*.

**தெய்வங்கள் :** **கணபதி** *70, 89, 91-1, 104-5* (சத்தி முகன்) தொந்திநித்தன் *2*, தந்தி *3*, தும்பி முகன் *6-1*. **முருகன்:** கணபதி சகோதரன், குகன், குமரன், குருபரன், கோல கலாபன், அமரர் சிறைமீட்ட சேவகன், களிமுகன், வேலாயுதன், வள்ளி மணாளன். **அரி** *4*. **நான்முகன்** *4, 6-7, 134-13* **மகேசன் :** *6-7, 8-2, 19-1, 91-10, 134-14*. **ருத்திரன் :** *6-7, 8-2, 91-10, 134-14* **கயிலாசபதி :** *8-1, 6-1*, **சதாசிவர்** *8-2*, **பரமேசுவரன்** *6-8* சிவசம்புநாதன், முக்கண்ணன். **சத்தி** (அம்பிகை) காளி, காரணி, குமரி, கௌரி, சூலி, கூளி, சங்காரரூபி, சாம்பவி, சிவவாணி, சித்தாய், திரிபுரைதூளி, நிர்த்தூளி, நீலி, பகவதி, பரமாயி, மனோன்மணி (*10-1, 21-3, 39-3, 89, 101-8*), ஆனந்தி, சதிரூபமாயி, சவுரி, சவுந்தரி முக்கட் பகவதி, பரதிதி, வீரி, மாயி,

நலகோணி, (6-6) பரமே சுவரி (8-1) வாலை (15), பார்வதி, ருத்திரி, (134-14) வாமிமல்லியை (91) வள்ளி 35-6,

**மால் செல்வி :** 134-13; வாணி (39-5) சரஸ்வதி (134-13)

**சித்தர் :** ஆனந்தர் 134-8 இடைக்காடர் 84, 94, 101-17 கமலமுனி 94, 101-17 கவுதமர் 84, கன்னி சித்தர் 94, காக்கை ரிஷி 19-2, காலாங்கி 6-10, 25, 39-1, 101-18; குரு முனி 94, 101-18 கெவுண சித்தர் 76, கைலாச முனி 6-10, 39-3 கொங்கணர் 6-10, 39, 269, 82, 101-18, 115-3, 184-7; கோரக்கர் 83, 94, 101-18, 134-10, சட்டை முனி 6-10, 39-3, 82, 94, 101-17, 134-6; சதாசிவ குரு 6-5, 10-18, 10-61, 12, 14, 16, 17-1, 18, 19-1, 2, 4, 20, 21, 21-3, 26, 28, 29, 30, 31-1, 32, 35-26, 36, 37-1, 38, 57, 65, 69, 71, 72, 91-10, 93, 96-2, 97, 101-2, 101-19, 103, 104-8, 110, 112-3, 113-3, 114-1, 114-2, 114-3, 114-4, 114-5, 120-1, 120-3, 122-2, 124-1, 134-9, 15, 16, 17, 18, சித்தாதி சித்தர் 84, 85; சிவயோக முனி 63, 84; திருமூலர் 6-6, 6-9, 6-10, 8-1-4, 39-1-10, 40, 43, 71, 68, 83, 94; துதிக்கை முனி 56. நந்தீசர் 6-10, 94. நவகோடி சித்தர் 37-7, 39-4. நவநாத சித்தர் 44. பதஞ்சலி 39-11, 63, 73, 134-9. பராசரர் 84. பிடிநாகீசர் 94, 101-17. பிரமமுனி 94, போகர் 6-10, 39-2, 82, 101-3. மச்ச முனி 69, 82, 94, முத்தையர் 134-5 ரோம ரிஷி 101-17. வயிரவர் 39-5. வியாக்கிரர் 63.

**நதிகள் :** கோட்டாறு 10-45, 115-3, கம்ப நதி 48, மஞ்சள் நதி 48.

**மலைகள் :** அத்தகிரி, அறிவின் மலை, அழகர் மலை, ஆறு மலை, ஆனை மலை, இளசயகிரி, உதயகிரி, கண்ட மலை, கயிலை மலை, சோமகிரி, தம்பிரான் மலை, திருமலை, திருவண்ணாமலை, துரகமலை, தோகை மலை, நாகமலை, நீலகிரி, மகாமேரு, மணமுத்தி மலை, மேல மலை, மோட்சகிரி வெள்ளி கிரி.

**மூலிகைகள் :** வியா மூலி, மருசேந்தி, சீமா மூலி (48) கெவுரி, வெள்ளை, சாரை, கல்லாரை(49) ஓரிதழ்த் தாமரை(50)

*சாகாத மூலி (51) திருவாரை, சஞ்சீவி, பாலை, கருவேலி, கொடிவேலி (54) வெண்மிருக மூலி (55)*

**பறவைகள் :** *அக்கு, அகத்தாரா, அன்றில், அன்னம், ஆனைக்காலுள்ளான், உள்ளான், குருகு, கொக்கு, சம்பா நாரை, செங்கால் நாரை, தயிலான், தாரா, நீர்த்தாரா, மணித்தாரா, நீர்க்காக்கை, மாட்டுக் குருகு, வக்கா, வட்டத்தாரா, உள்ளான். (அனைத்தும் நீர்வாழ் புட்கள்.)*

**ரேகை :** *அமர ரேகை, கண்ட ரேகை, மச்ச ரேகை, நீதிபதி ரேகை (94, 95)*

**சமயப் பொருள்கள் சில:** *அசபா மந்திரம், அட்டமா சித்தி, காய சித்தி, ஆறாதாரம் (மணிபூரகம் ஆகியன), ரேகை பூரக கும்பகம், வாசி, பஞ்ச சத்திகள், விந்து நாதம், சிவயோகம், வானைமுத்து, ஆறாறுதத்துவம்.*

**சொற்கள் :** *அக்கவடம், அரகரா, கெம்பாறையே, கோரு, சமுசாரி, கிறுக்கி, சொகுசு, நடதா, தாம்பூலம், திக்ஷ்டி, பராக்கு, பலகாரம், முதாறு, வேர்-மேரு, மேறை, விகடிந்து.*

# பொருள் அகராதி

அகங்கை 84
அசபை 10-33, 11, 25-2, 46, 70,
ஆற்றூர் 3, 5, 10-17, 10-63, 36, 38, 57, 69, 93, 98, 99, 101-19, 102, 104-2-3-4-8-11, 106, 114, 128, 129- 2
ஓரிதழ்த் தாமரை 50
கட்டியக்காரன் 11- 15
கதிகுலம் 10, 42
கற்பம்
கயிலைக்குறவஞ்சி 10, 80
காலனணுகாதபதி 6, 2, 70
குயிலைக் கூவுதல் 18- 19
குலவளம் 71- 79
குவளைத்தார் 10- 47
குறத்தி வருணனை
குறவஞ்சி 5, 6-5, 10-3-10, 80-40
குறிக்கான ஏற்பாடுகள் 91
குறிகள் கூறியது 80- 86
கூலி முந்நாழி 76
குறம் ஏழு 72
சகுனங்கள் 35 3
சங்கு சக்கரம் 39-6
சந்திரனைப் பழித்தல்
சத்தரிஷி 39. 7
சந்தானம் 98. 1
தசகாங்கம் 10, 40 52
திருவாய்மொழி 132- 4
தென்றலைப் பழித்தல் 24- 5
தேசிகனூர் 25-2
தேவரிஷி 83
நாற்பத்து முக்கோணம் 101- 7
நாட்டு வளம் 65, 70

பிள்ளையை இடுக்குதல் 34- 20
பஞ்சாட்சரம் 116, 127- 2
மலை வளம்
முத்தானந்த சிடன் 10-66, 16, 29, 134- 19
வேத சிரோமணி 134- 12

## முத்தானந்தர்

# ஞானக் குறவஞ்சி

### பாயிரப் பகுதி

### காப்பு

### 1. பரம்பொருள் வணக்கம்

*அறுசீர் விருத்தம்*

மதிகதிர் வன்னி மூன்றாய் வளர்ந்துமுச் சுடராய் நின்ற
பதியதி மனமாஞ் சித்தம் பார்புத்தி அறிவுக் கெல்லாம்
அதிபதி யான மூலத் தரசனைப் புகழ்ந்து ஞான
நிதிகுற வஞ்சி பாட நின்மலன் காப்ப தாமே.

### 2. வினாயகர் வணக்கம்

மூலமாம் விந்து நாதம் முனைநடு முடிவில் நின்று
தூலமுஞ் சூக்ம மாகத் தோன்றிய குருவைப் போற்றி
பாலமாம் பரம ஞானம் பகர்குற வஞ்சி பாட
நீலமாங் கிரிபோல் தொந்தி நித்தனுங் காப்புத் தானே.

### 3. பிறதேவர் வணக்கம்

நந்தியைப் பஞ்ச பூத நடுமுகச் சாலைக் கொப்பாய்த்
தந்தியைப் பணிந்து, ஆற்றூர்த் தலைவனைப் பாடி யாட,
உந்தியிற் கமலங் காப்பு, ஒளிர்கதிர் மதியுங் காப்பு,
முந்திய வேத நாதர் முனிவருங் காப்புத் தானே.

### 4. நூற்பொருள்

அவ்வெனு மவ்வா யுந்தி அரிஅயன் தனக்கு மெட்டாச்
சிவ்வெனும் பொருளைத் தேடித் தெளிந்துவே தாந்தம் பார்த்து

---

1. ஞானக் குறவஞ்சி-இந்நூல் ஞானப்பொருளைக் கூறுவதால் இப்பெயர். நூல் செய்தார் முத்தானந்தர் என்ற ஞானி; அவர் பெயரால் முத்தானந்தர் குற வஞ்சி என்றும் இது வழங்கும். மதிகதிர்வன்னி-சந்திரன், சூரியன், அக்கினி. நின்மலன்-மலமில்லாதவனான பரம்பொருள்.

2. தொந்தி நித்தன்-தொந்தி படைத்த நித்தியமான சத்தாயுள்ள ஆனை முகன். குரு-இந்த நூலில் கூறப்படுகின்ற பரம குரு. நீலமாங்கிரி-கருநிறமலை யொத்த.

3. ஆற்றூர்த் தலைவன்-ஆற்றூர் ஆசிரியருடைய ஊர். இவ்வூரில் அவருக்கு அருள்புரிந்த குரு; தந்தி-யானைமுகன்.

யவ்வெனுங் கமலத் துள்ளே அமுதங்கள் விளைந்தாற் போலே
பவ்வெனும் பிறப்பை நீங்கும் பனுவலைப் புகழ்ந்த தன்றே.

### 5. நூற் பெயர்

அத்தியே றுற்ற சிங்க மறிலய மரையா வைந்தும்
பத்தியாய்க் கூடி வாழும் பதிமதி யாத்தூர் காதி
முத்திவா னருளுஞ் சோதி முக்கணன் பாதம் நாடி
சத்தியாங் குருவைத் தேடுந் தமிழ்க்குற வஞ்சி யாமே.

### 6. குருமார் வணக்கம்

தோடையம்

அதி கொண்டு நின்றாடும் சிவவிந்து நடுமூலம்
அடை வித்து நான் முந்தவே—சிவா சிவா
துதி கொண்டு நின்றாடும் குறவஞ்சி கொண்டாடத்
தும்பி முகனை நம்பு மனமே—சிவா சிவா. 1

நாலுமறை நாலு தளம் நாலுபத மானகுரு
நாதவடி வான முதலும்—சிவாசிவா
காலன் முறை காலநிதி காலனணு காதபதி
காணுமது தோணும் நினைவே—சிவாசிவா. 2

அத்தர்பதம் நித்தம்நினை யுற்றதலை யுற்றமதி
சித்தர் தொழி லாகுமதுவே—சிவாசிவா
முத்தமிழி லுற்றபொருள் நித்தமறி சித்தமது
பெற்ற வரம் மத்திய வெளிய—சிவாசிவா. 3

---

4. அவ்-பிராசாத மந்திரத்துக்கு மூலமான ஒலி; சிவ-திரு ஐந்தெழுத்தில் சிகரமாகிய பரம்பொருள்; யவ்-ஆன்மா; இதிற் கமலம்-இதய கமலம்; பவ்-பவும் ஆகிய பிறப்பு; பனுவலைப் புகழ்ந்தது-பனுவலாகச் சொல்லியது.

5. ஐந்து-அத்தி (யானை), சிங்கம், ஆடு (மறிலயம்), மரை (மான்), ஆ (பசு) இவ்வைந்தும் தம்முட் பகையின்றிக் கூடி வாழுந்தன்மை பெற்ற பதி; மதி-மதிக்கத்தக்க; நூலில் ஆற்றூர் என்றும் ஆத்தூர் என்றும் காணப்படும். முத்திவான்-மோட்சமாகிய வீடு; முக்கணன்-சிவன்; சக்தி-சைவ மரபில் சக்தியும் பஞ்ச குருமாருள் ஒன்று.

6-1. தோடையம் - நாடகத்தின் தொடக்கத்தில் தெய்வத்தைப் பரவும் பாட்டு; தும்பி முகன்-யானை முகன்.

6-2. நாலுமறை-இருக்கு, யசுஸ், சாமம், அதரிவம்; நாலு தளம்-நால்வகைப் பூ (தளம்-பூவிதழ்) அல்லது சரியை, கிரியை, யோகம், ஞானம்; நாலு பதம்-சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுக்கியம்; காலநிதி-காலனுடைய நியதி; காலன் அணுகாத பதி-கயிலை.

நவகோடி தவமுனிவர் தவகோடி சிவசொருபர்
நவகோடி நாதர்க்கருளும்—சிவாசிவா
நவகோடி சதுர்யுகம் நவகோடி யுக பஞ்சம்
நவகோடி நாள் வழியே—சிவாசிவா. 4

அன்னையே எனையீன்ற சதாசிவ குருவினடி
தொழுதடியேன் புகழ்பெறவே—சிவாசிவா
பின்னையும் பிறவாத நெறியருளும் மெய்ஞ்ஞான
போதகம் வாழ்துணையே—சிவாசிவா. 5

கால் கொண்டு வன்னிமுக் கோணத்தி லங்கியின்
தலைநின்ற தறு கோணமே—சிவாசிவா
செயல் கொண்டு நின்றார்க்கு நவதோணி சிவ வாணி
திருமூலர் பதம் வாழ்கவே—சிவாசிவா. 6

அண்டபதி ரண்டபுவ னங்களும் வேதம் நா
லானசிவ மானபொருளும்—சிவாசிவா
கண்டமதில் நின்ற மயேசர்ருத் திரன்கண்
ணானநான் முகன் வாழ்கவே—சிவாசிவா. 7

ஆதிகுரு ஆதிபரம் ஆதிபர மேசுவரன்
அடிபணிந் தாளாகவே—சிவாசிவா
நீதிதரு மாதிபதி சாதிகுரு வாசிமுறை
நித்தமுமா ராதமனஞ் சுத்த வெளியானதே—சிவாசிவா. 8

சந்திர வட்டமுறை மந்திரம் விட்ட குறை
தாக்கு மனம் போதமதுவே—சிவாசிவா
முந்திர வட்டவரை தந்த்ரத்தால் கட்டுமுறை
மூலமாங் குரு வாழ்கவே—சிவாசிவா. 9

நந்தி குரு மூலரும் போகருங் காலாங்கி
நாதனும் வேத முடிவில் - சிவா சிவா
முந்தி வரு கைலாச சட்டை முனி கொங்கண
மூர்த்தி எந் நாளும் வாழ்கவே - சிவாசிவா. 10

---

6-4. நவகோடி சித்தர் என்பது மரபு.

6-10. நந்தி, மூலர், காலாங்கி, போகர், ஆகியோர் திருமந்திரம் பாயிரப் பகுதியில் (68,69,102) சொல்லப் பெறுகின்றனர். கைலாச சட்டைமுனி கொங்கணர் என்போர் மிகவும் பிற்பட்ட காலத்தோர்: 16-ஆம் நூற்றாண்டினர். இவர்கள் சித்த மரபினர் என்பது வழக்கு.

## 7. சத்தி வணக்கம்

கலித்துறை

அரும்புஞ் சிவந்த பதமுஞ் சிறந்த வரிபுருவம்
விரும்பும் பதத்தியைப் போற்றிஎந் நாளும் மிகப்பணிந்து
சுரும்புங் கனல்வெள்ளை ஞானத்தை வஞ்சியில் சூட்டுதற்குத்
திரும்புங் கருணைப் பதஞ்சூட்டுஞ் சென்னியில் தெள்ளமுதே.

## 8. மங்களம்

ஆதிகயி லாசருக்கு மங்களம் - என்னை
ஆண்டபர மேச்வரிக்கு மங்களம்
சோதிமணி மூலருக்கும் மங்களம் - தொழில்
தோற்றுமுறை வேதனுக்கு மங்களம் 1

விண்ணுமதி கண்ணருக்கு மங்களம் - சிவ
மெய்ப்பொருளாம் ருத்திரர்க்கு மங்களம்
எண்ணுமயேச் வரருக்கு மங்களம் - என்னை
ஈன்றசதாசிவர்க்கு மங்களம் 2

சாத்துமுரை பார்த்தவர்க்கு மங்களம் - சிவ
தவமுனி நாதருக்கு மங்களம்
காத்து முரை பார்த்தவர்க்கு மங்களம் - கரு
கண்டமுதம் உண்டவர்க்கு மங்களம் 3

முத்தி பெற்ற சித்தருக்கு மங்களம் - திரு
மூலவர்க்க மானவர்க்கு மங்களம்
பத்திபதம் பெற்றவர்க்கு மங்களம் - கலை
அறுபத்து நாலுளோர்க்கு மங்களம் 4

சித்தாதி சித்தருக்கு மங்களம் - தேகச்
சித்தி பெற்ற முத்தருக்கு மங்களம்
பத்தாதி பத்தருக்கு மங்களம் - பல
வாசிகுரு தேசிகர்க்கு மங்களம் 5

---

7. பதத்தி - பதத்தையுடைய சத்தி; ஞானத்தை வஞ்சியில் சூட்டுதற்கு- இந்த ஞானக் குறவஞ்சி பாடுவதற்கு.

8-1. வேதன் - பிரமன்.

8-2. கண்ணர் - திருமால்; இங்கு முறையே பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன் என்ற சகள மூர்த்திகளையும், சதாசிவர் என்ற சகள-நிஷ்கள வடிவத்தையும் குறிப்பிடுகிறார். மூலவர்க்கம்-திருமூலர் மரபு. தேகச்சித்தி-சீவன் முத்தி.

## 9. குருவைத் தேடிய சீடன் நெறி

விருத்தம்

நாதமும் விந்துங் கூடி
நானுமோ ருருவாய்த் தோன்றி
வேதனா முறையும் பார்த்து
மேவிய ஞானத் துள்ளே
பாதமும் முடியுந் தேடிப்
பானுந்தி குருவைக் காண
நீதமும் அறிந்து சீடன்
நெறிதனை விளம்பி னோமே.

## 10. தசாங்கம்—பெரியோர் வணக்கம்

அகவல்

மன்னிய குருவும் மனோன் மணி யருளால்
உன்னிய ஞானத் துறுபொரு ளதனைக்
கூட்டி யெடுத்துக் குறவஞ்சி யாகச்
சூட்டினேன் அடியேன் சூக்ஷ்மத்தின் மோக்ஷம்
காட்டின குருவின் கழலினைத் துதிக்கும்
பாட்டினில் விரித்துப் பயனது கூறச்
சிறியேன் அறியாச் செயலது வென்று
குறிப்பாய்ப் பொருப்பிற் குவலயத் துள்ள
சித்தர்கள் முனிவர்கள் சீரியர் சூரியர்
வித்தகர் பாவலர் மெய்ஞ்ஞான ரூபிகள்
ஏழையேன் புன்சொல் இது வெனக் குறித்துக்
கோழையேன் மொழியிற் குற்றம துள்ளதைக்
கண்டு மடிக்கினும் கருவிறந் திசைபொருள்
சென்று பிடிக்கினுஞ் சிவமது வாகக்
கூறுவார் விட்ட குறைத்தவ முனிவர்
ஏறுநா ளிட்ட தின்பம தெனவே
சூட்டிய ஞானச் சுடர்மணி யாற்றூர்த்
தாட்டிஎன் சற்குரு சதாசிவ மூர்த்தியை
வான்வெளி தன்னில் மலர்ப்பதந் தேடத்
தான்வெளி யான தலைவனைப் புகழ்து
ஞானப் பதவியை நன்றாய்ப் பணிந்து
வானத் திருவொளி மலர்ப்பதம் போற்றி

நற்குரு பாதம் நான்காண வேண்டி
சொற்பரி முறைகள் சொல்லவுங் கேட்டு
அல்லி நகரில் அவதரித் துருவாய்ச்
சொல்லிய ஞானத் தொழிலது பார்த்துக்
கைமுறை தப்பிக் கருவி லுதித்துச்
செய்முறை வீழ்வ தேகமு மாதி
நாரியர் மயக்காய் நான்திரிந் தலைந்து
வீரியந் தன்னை விடாத படிக்குக்
கட்டவும் வேண்டிக் கருத்துங் குறித்து
எட்டுவிண் டிசைக்கும் எழுத்தறிந் தொக்கக்
கட்டுற் றசபைக் கமல மறிந்து
ஒட்டு படிக்கு, உறுதியாய்ப் போற்றி
தீட்சா குருவைத் தெண்டனிட் டென்றும்
மோட்ச குருவின் முறையிது வென்று
காட்டுங் குருவைக் கருத்துள் நினைந்து
நாட்டு முறைதான் நான்காண வேண்டி
மகாதவஞ் செய்து மகாராச னென்னுஞ்
சுகாதீத ஞானத் தொழில்கல்வி நெறியான்
மூலக் கருத்துக்கு முத்திக்கு சித்தி
காலைந் துதிக்குங் கதிகுலத் தரசன்
அட்ட கிரிகள் அசையாமல் சுற்றிக்
கட்டிய நாகங் காத்திடு மலையான்
கோட்டாறு செம்பொற் குருநா டுடையான்
நாட்டோர்க் கருள்புரி நாகையம் பதியில்
புனைந்திடு குவளைப் போதக மார்பன்
நினைந்திடு முன்னே நிற்குமப் பரியான்
கார்மத முறையுங் கரிதிருக் கொடியான்
சீர்முதன் முரசொலி செலித்திடு மாணையான்
பூமகள் திருமகள் பொருந்துந் தவத்தான்
சீர்மகிழ் மந்திரஞ் செவிக்குமெய்க் குணத்தான்
சித்திர கிரீடஞ் சென்னியில் தரித்துப்
பத்திரந் தரள பதுமமுன் கட்டுங்
குண்டலங் காதில் குருவட்ட வழகியுந்
தொண்டொடு மாத்திரைக் கோலுஞ் செங்கையில்
பவுந்திரந் திருநீற்றுப் பையும் பிரம்பும்

கவுத்திர ஞானக் கமல புத்தகமும்
சிவமா லிகையும் சீர்பெறத் தரித்துத்
தவமா முனிவர் தண்ணருள் போன்று
சதாசிவப் பிரமந் தான்பரி ஏறிப்
பசாசுகள் சூழப் பல்கீதம் பாடக்
கட்டியங் கூறக் கடிதுற்கி யாற்றூர்
ஒட்டிய முனிவ ரொளிவிடு செம்பொன்
வீதியி லாடி விரைந்து வருகையில்
சதியில் முத்தா னந்த சீடன்
அய்யாதான் வருகிற அமளிகள் கண்டு,
மெய்யரைப் போற்றி மெல்லடி பணிய
வேணுமென் றுன்னி மிதவங் கிருக்கையில்
ஊணுமக் குகையி லொளித்திட் டசபைத்
தானதனை யுன்னித் தானங் கிருக்கையில்
வேளெனுங் கமல மலர்வுற் றிருக்கக்
கருத்தி லுதித்துக் கழலினை நாடி
வருத்தம தெண்ணா மனமது கண்ணாய்ப்
பார்த்துப் பதைத்துப் பலகாலுந் தேடி
ஏற்றும் படிக்கு இருதயந் தனிலே
மாற்றும் பிறவி மயக்க மற்றுச்
சாற்று முறைகள் தமைநினைந் திருக்கையில்
பாங்கிவந் ததுவும் பலகுறி சொல்ல
ஓங்கிய கயிலைக் குறுகுற வஞ்சியை
அழைத்து வருகிறேன் அவள்குறி பார்த்துப்
பிழைத்திட வகைகள் பேசுவா ளென்று
வஞ்சியைக் கூட்டி மாதுவந் ததுவும்
மிஞ்சிய சிங்கன் விரைந்துவந் ததுவும்
எல்லாப் பொருளும் எடுத்துயா னியம்ப
சொல்லாப் பெரியோர் துணைப்பதஞ் சரணே.

## 11. கட்டியக்காரன் வருகை

விருத்தம்

அய்யர்தம் பாதம் போற்றி அறிவட்ட மிட்டுக் காட்டி
மெய்யரைத் தொழுது வாழ்த்தி மேல்வட்டந் துரியம் பாடி

அடி 1: மனோன்மணி-சதாசிவத்தின் சக்தி. சூரியர்-கூர்த்த மதியுடையோர். 21. இங்கு சொல்லியது பரமகுரு. 35. இங்கு கூறியது தீட்சா குருவாகிய

மையரை யசபை கட்டி மாத்திரை மணமுற் றூதிக்
கையரைப் புகழும் வேதக் கட்டியக் காரன் வந்தான்.

### 12. கட்டியக்காரன் தரு

ஆதி குரு வேதம் சிவாயா - பராக்கு
அண்ட பேரண்டத் தரசே - பராக்கு
சோதி மணி மூல வருட் பேறா - பராக்கு
சூக்ஷ்மத்தில் மோக்ஷ மருள்வாய் - பராக்கு
நீதி வெளியே ஒளியே - பராக்கு
நித்தமுஞ் சித்தாகி நின்றாய் - பராக்கு
சாதி தவிர முறை தந்தாய் - பராக்கு
சதா சிவ குருமூர்த்தி தானே - பராக்கு

### 13. இதுவுமது

விந்துற்ற நாதத்தில் நின்றாய் - பராக்கு
வெளியுற்ற சிவ யோக வாழ்வே - பராக்கு
முந்துற்ற சந்தானந் தந்தாய் - பராக்கு
மும்மண்ட லத்திலும் நின்றாய் - பராக்கு
அந்துற்ற மூலவர்க்க மானாய் - பராக்கு
ஆறாறு தத்துவஞ் சித் தானாய் - பராக்கு
சிந்திக்கும் வட்டத்தில் நின்றாய் - பராக்கு
திசைபெற்ற வேதப் பொருளே - பராக்கு

### 14. இதுவுமது

முன்னாறு திங்கள் மொழிந்தாய் - பராக்கு
முத்திக்கும் பேரண்ட முனிந்தாய் - பராக்கு

---

உபதேச குரு. 42. அரசன்: குரு. 43-44. அட்டக் கிரிகளையும் அசையாமல் சுற்றிக் கட்டிய நாகத்தால் காக்கப் பெறும் மலையுடையான். 45. கோட்டாற்றைத் தன்னகத்தே கொண்ட நாடு - நாடாகவுடையான்: இது குரு நாடு. கோட்டாறு ஒரு பாடல் பெற்ற தலம். சோழ நாட்டில் திருநள்ளாற்றின் பக்கமாக வுள்ளது கோட்டாறு, ஆறுமாம். 46 நாகை: அங்கிருந்து சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ள பெரு நகரம்; பாடல் பெற்ற தலம். 47. குவளைப்போது-தார். 48. பரி - பாசி. 50. முரசொலிக்கின்ற யானையயுடையான். இங்குச் சொல்லப் பட்டது சதாசிவப் பிரமத்துக் குரியது. (61) 51-65 சதாசிவப் பிரம்மம் வீதியில் குரு வடிவாய் வருந்தோற்றம். 70. அசபை. அசவா மந்திரம்- 66-78 சீடன் இவ்வாறு இருக்கையில் சீடனை ஒரு பெண்ணுகப் பாவித்து மேல் நிகழ்ச்சியை நடத்துகிருர். 79. பாங்கி- அந்தப் பெண்ணின் பாங்கி.

இப்பாடல் பொது வகையில் பெரியோர் வணக்கமும் அவையடக்கமும். இவர் பாடுகின்ற முறை புதியது.

அந்நாளில் பெண்ணைவிடச் சொன்னாய் - பராக்கு
அடியார்க்குப் பகைசுற்ற மழித்தாய் - பராக்கு
இந்நாளில் என்னை முற்றுங் காத்தாய் - பராக்கு
எளியேனை யாண்டு கொண்ட இறையே - பராக்கு
நன்னாளில் மூன்று பொருள் தந்தாய் - பராக்கு
நாதசிவ யோக சதா சிவமே - பராக்கு

## 15. இதுவுமது

வாலைஎழுத் துண்டுபர மென்றாய் - பராக்கு
மந்திரவிதி சந்திர மலை யென்றாய் - பராக்கு
காலையிழுத் தோதுமன மென்றாய் - பராக்கு
கதிர்முனையி லொருபீட மென்றாய் - பராக்கு
சேலைப் பொருது சிவ மென்றாய் - பராக்கு
சிறியேனை ஆட்கொண்ட தேவா - பராக்கு
ஏலச் சிறந்த முக் கண்ணா - பராக்கு
இன்பமணி நெஞ்சத் திருந்தாய் - பராக்கு

## 16. முத்துச் சீடன் வருகை

விருத்தம்

சந்ததம் பரிமே லேறிச்
சதாசிவப் பொருள்தான் வீதி
சுற்றவும் சீடன் கண்டு
தொந்தமும் பார்த்து நின்று
மெத்தவும் மனம கிழ்ந்து
மெல்லடி தன்னைப் போற்றிச்
சித்தரா னந்த முத்துச்
சீடனுந் தோன்றினனே

---

14. பகை சுற்றம் - அடியாரான ஞானிகளுக்கு வேண்டுவோர் வேண்டார் என்ற வேற்றுமை இல்லை. மூன்று பொருள் - அறம் பொருள் இன்பம்.

15. வாலை - பாலை; பத்து வயதுப் பெண்ணாகிச் சித்தர் வழிபடும் சக்தி வடிவம்.

16. சதாசிவப் பொருள்-பாட்டுடைத்தலைவன். முத்துச் சீடன்-முத்தானந் தனுகிய சீடன்.

## 17. சீடன் தரு

பந்துவராளி ராகம்

பல்லவி

சித்தாதி சீடனும் வந்தான் - வித்தாரம் பாடிச்
சித்தாதி சீடனும் வந்தான்

அனுபல்லவி

வித்தார மாகவே தான்
முத்தார மாலை பூண்டு
சித்தானை குட்டியைப் போல் (சித்தாதி)

சரணம்

மந்திர மதியை யுண்டு
மவுனப் பரியைக் கொண்டு
தந்திரப் பணிகள் பூண்டு
சதாசிவ சிசு வென்று (சித்தாதி) 1

இந்திர மணியி னின்று
ஏக கலைகள் கொண்டு
சுந்திரப் பதமி தென்று
துறையாறு பதி சென்ற (சித்தாதி) 2

உரியிட் டொழுக்கு மிட்டு
ஓங்கார வட்ட மிட்டு
அரியிட்டு மக்கு மிட்டு
ஆனந்த பதந் தொட்டு (சித்தாதி) 3

நாலாறு கோண சத்தி
நாதாந்த வீடு முத்தி
மேலாறு தாண்டு புத்தி
மெய்ப்பத மென்று சுத்தி (சித்தாதி) 4

## 18. கலிப்பா

தன்னை யறிந்து சதாசிவத்தைப் போற்றிசெய்து
அன்னை பிதாகுருமேல் ஆசைவைத்துப் பூசைசெய்ய

---

17. சித்தானை - சிற்றானை. (1) சதா சிவசிசு - தான் சதா சிவ குருவின் சீடன் (4) சுத்தி-சுற்றி

பின்னை வனக்குயிலும் பேய்மனமும் மாமதியும்
என்னை யுகந்துவிந்து யேற்றுவகை சொல்வானே.

## 19. குயில் சிந்து

அடாணா ராகம்

நீங்காப் புனக் குயிலே நீ கூவுஞ் சத்தம்
நேருற்ற செவிக்கேறா ததுவெகு குத்தம்
தூங்காக் கனாக்கண்டு இருக்குமேனி சித்தம்
தோற்றும் மயேசுரன்தாள் துணைபரி சுத்தம் (நீங்கா)
தேங்காப் பரிசமதை யறியுமே யுத்தம்
சித்தஞ் சதாசிவத்தில் சேருமே நித்தம் (நீங்கா) 1

உண்ணாக்குத் தொனிசத்தம் விண்ணாக்கு மோதான்
ஒக்குமோ காக்கைரிஷி தக்குமுன்னாகான்
அண்ணாக்கு வாசமென்றால் லொண்ணாக்கு நீதான்
அடுத்துச் சதாசிவத்தைப் பிடித்துக் கோவாள்தான் (நீங்கா)

எந்தாயெனக் கமுதந் தந்தாள் நானுண்டு
இருந்தேன் குருபதத்தி னியல்பது கண்டு
உன்தா யுனக்கமுதந் தந்தாளே யன்று
ஓ கோகோ கூவுது உனக்கல்ல நன்று (நீங்கா) 3

ஆசைக் குருபதத்தை யான்காண வென்று
ஆடித் திரிந்தலைந்து யான்வந்து நின்று
ஓசைக் குதலையென்று ஓராறு தாண்டு
ஒக்குஞ் சதாசிவன்தா னுயிரெனத் தூண்டு (நீங்கா) 4

## 20. மனத்துக்கு அறிவுரை

வெண்பா

ஆசை யுறுங்காட்டி லடர்ந்து குயில்கூவப்
பாசை யுறுமனமே பற்றினாய் - பூசை
கொண்டு சதாசிவமாங் கோவி னடிபோற்றின்
நன்றுகுவிந் தொன்றுவெளி நாடு

---

18. பின்னை வனம்-புன்னை வனம்

19. குத்தம் - குற்றம். 2. காக்கை ரிஷி - காகபுசுண்டர் போலும். வாள் - ஞானவாள்.

20. பாசை - பாசம்

## 21. மனம் தெளிய உரை

பல்லவி

மனமே உனக்கிது குணமல்ல - சும்மா
மயங்காதே விடு மனமே (மனமே)

அனுபல்லவி

இனமென்ன சனமென்ன இதுவென்ன சதமோ
தனமென்ன தவமென்ன சதா சிவன் தருவோன் (மனமே)

சரணம்

ஆசைக் கடலிற் சென்றலையாதே பின்னும்
அப்பாலே உப்பை உண்டுவை யாதே
வாசக் குணத்தே நின்று மலையாதே - காம
வெள்ளத்தைச் சத மென்று நிலையாதே (மனமே) 1

சற்குரு தேசிகனார் நன்தாளைத் தலைபூணு
தன்மையி னால்வெகு நன்மை யாகுமதனால்
சொற்குரு வில்லை வாசித் தோற்றம தனால்
துன்ப வினைகள் தீரும் இன்பமதனால் (மனமே) 2

புக்கு மனமே யினி தக்குமோ வேறு
புலம்பித் திரிய வேண்டாஞ் சினஞ் சித்தப்பாரு
தக்கு மினமாஞ் சதா சிவத்துடன் சாரு முத்தி
மனோன் மணி யாள் தான் காணும் பேறு (மனமே) 3

## 22. சந்திரனுக்கு உரை

வெண்பா

மனமாயைநீக்கி மாமதியைத் தன்பாற்
குணமாகச் சீடன்வகை கூறுவான் - இனமாயை
விட்டுக் குயில்கூவ மின்ப மனந்தெளியக்
கட்டுங் கலையோதுங் காண்.

---

21. உப்பு என்பது உலக போகம்

22. மதி - புத்தி. கலை - இங்கு சந்திரன்.

## 23. சந்திரனைப் பழித்தல்

தரு

மதியே முன் வீதி யெட்டுங் கலை மந்திரப்
பதியெட்டுங் கூட்டுஞ் சம்மதியே (மதியே)

அதியே குருவினருள்
நிதியே பெருகமனந்
துதியே சிவமதாகக்
கதியே பெறுகநிலை (மதியே)

நித்தமுஞ் சத்து மலைத்தாயே-முந்த
நேரொத்த புத்தியாய்ப் பிழைத்தாயே
சித்தமு மாலையி லுதித்தாயே-இந்தச்
சிறுக்கி என்றே பேர் படைத்தாயே (மதியே) 1

எந்தையின் மேலாசை பிடித்தால்-பின்
னிருக்கையே சடையினீர் தரித்தால்
உந்தையும் பாதத்தில் வீழ்ந்தத்தால்-நீயும்
உயர்ந்து தணிந்தாயே தென்றலால் (மதியே) 2

நானென்றும் நீயென்றும் வேறோதான்-நீண்ட
நாதமும் பின்சுழி கூறோதான்
பாணன்றும் மதியென்றும் வேறோதான்-உண்ணப்
பாக்கியம் நான் செய்த பேறோதான் (மதியே) 3

கதிர் கண்டு நீசென்று ஒளித்தாயே-நல்ல
காலத்தி லேகண்ணை விழித்தாயே
சதிர் கண்டு லோகத்தைக் கழித்தாயே-அது
தான் கண்டு பின்னைப் பழித்தாயே (மதியே) 4

## 24. தென்றல்

கலிப்பா

குருவாங் குயில்கூவக் கூர்ந்து மனங்கெட்டுத்
திருவா மதிமேயுந் திசைநாலு மேபார்த்து
கருவாக்குந் தென்றல்தனைக் கடிற்றிற்றே பிடிக்க
உருவாங் கலைபதினு றென்றெனவுஞ் சொல்வானே

## 25. தென்றலைப் பழித்தல்

வேறுதரு ஆனந்தபைரவி

பல்லவி

தென்றலே நாளையும்
விண்டலை யாமலே நீ நில்லு தென்றலே

அனுபல்லவி

மண்டலம் புகழ்கயி லாசகிரியின் மேவும்
தொண்ட ரடியார் மனம் நின்று குருவாய் வளர் (தென்றலே)

சரணம்

உண்டில்லை என்று நீ பார்த்துக்கோ-வட்டத்
தோமென்று நாதத்தைக் காத்துக் கோண்
டலையாமலே ஏற்றுக்கோ-மேறை
காரண முண்டதை சேர்த்துக்கோ (தென்றலே) 1

அசன பயைக் கண்டு நீ முடித்துக்கோ—மந்திர
மாமென்று தாள்தனைப் பிடித்துக்கோ
திசை பத்து வாசியைத் தொடுத்துக்கோ-அது
செயமென்று ஆனையைத் தடுத்துக்கோ (தென்றலே) 2

எட்டுடன் நாலையுங் கூட்டிக்கோ-பின்
இறவாத முடிதனைச் சூட்டிக்கோ
ஒட்டது ஆறென்று கேட்டுக்கோ-கூட்டி
ஓங்கார வாசலில் போட்டுக்கோ (தென்றலே) 3

எங்கெங்கும் நீயா யிருந்தாயே-பர
தேச வழியில் பிறந்தாயே
அங்கங்கு மூல முறைந்தாயே-சிவ
மானது என்னுயிர் கண்டாயே (தென்றலே) 4

## 26. சிற்றாய் வருகை

கலிப்பா

பொருந்துந் தவமுடையாந் பூங்கா வனத்திருக்க
வருந்துங் குயில்மனமு மாமதியும் மாருதமும்

---

25. மேறை-மேலை, உயர்வான.

திருந்தவகை பார்த்துச் சதாசிவத்தைத் தேடுகையில்
அருந்தவத்துக் காதரவாய் சித்தாய் வந்து தோன்றினளே.

## 27. சிற்றாய் வருகைத் தரு :

பல்லவி

ஆயி வந்தாள் - சிவபோக
மாயி வந்தாள்.

அனுபல்லவி

புருவத் தசபை எழுத்துள்ளாடுஞ்
சோதி வேடங்கள் பூண்டு
தோதி மித் தொந் தோமென்று (ஆயி)

சரணம்

செந்தூரப் பொட்டு மிட்டுச்
சிவயோக மணியிட்டு
முந்தூரை விட்டு விட்டு
முன்கை முதாறிட்டு (ஆயி) 1

சத்தப் பரிசரூ பதான
ரசகெந்தங் கட்டுஞ்
சித்தஞ் சதா சிவனார்
சீமானார் வளர் நாட்டில் (ஆயி) 2

காலிற் சிலம்பு வங்கி
கதிர் வளி தாக வித்து
மேலிற் பணியி லங்க
மெய்ஞ்ஞானமே துலங்க (ஆயி) 3

அத்த ரடியாரை நாடி
ஆற்றூர்ப் பதியைத் தேடிச்
சித்த ரடிமுடி தேடிச்
சிவ சிவா வெனப் பாடி (ஆயி) 4

---

26. சித்தாய்-சித்து ஆகிய அன்னை: பின்னே சிற்றாய் எனவும் கொள்ள இடமுண்டு.

27. ஆயி என்பது உலக வழக்கு - ஆயி இங்கு அருட் சக்தி; முதாறு - முதாரி; முன்கை வளையல்; சத்தப் பரிசரூப; ரச கெந்தங் - பஞ்ச தன் மாத்திரைகள்; ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம்.

## 28. சீடன் போற்றுதல்

கொச்சகம்

அண்டர் புகழ்ந்தேத்தும் ஆதிகுரு நன் னாட்டில்
தொண்டர் சதாசிவன்றான் தோற்றும் வரைமீதிற்
பண்டுபர மாயிவரப் பார்த்தா னந்தசீடன்
கண்டு தொழுது கழலிணைகள் போற்றினனே

## 29. ஆயிவினவுதல்

விருத்தம்

அப்பனே முத்தா னந்தா அகத்திரிவுள்ள சீடா இப்போ
ஒப்பனை முகந்தான் வாடி யுருகுகின்ற தேதோ என்ன
செப்பவே கேளா யெங்கள் சதாசிவன் வாழும் நாட்டில்
வப்பனை நான்தான் கொண்ட வருத்தமென் சொல்லுவேனே

## 30. சீடன் கூறுதல்

அறுசீர் விருத்தம்

சொல்லுகிறேன் கேளாய் எங்கள்
துரைசதா சிவன்றான் இப்போ
வெல்லுறேன் விதியை யென்று
வீதியி லாடக் கண்டு
அல்லிருள் நீக்கிப் பாதம்
அடுத்துநான் பிழைக்க வென்று
நல்லூற வடியே னிந்த
நாட்டமுற் றிருந்த தன்றே

## 31. இதுவுமது

வேறுதரு

கத்தர் சதா சிவத்தை ஆயியாரே-நித்தம்
காண வென்று தேடினேன் காண் ஆயியாரே
சித்தமிரங்க விலையா ஆயியாரே - பாதந்
தெரிசிக்க வேணுங்காண் ஆயியாரே

---

28. பரமாயி-பரம அருட்சத்தி

29. அகத்திரிபு-அகத்திலே மாறுதல்; நடன நட்டம் என்னவென்று ஆயி கேட்க.

சத்தப் பரிசரூபம் ஆயியாரே - ரசந்
தான கெந்தம் மீறுது காண் ஆயியாரே
உத்தமர் தானிங்கு வந்து ஆயியாரே - இதற்
குற் பனந்தான் சொல்லுவாரோ ஆயியாரே 1

தத்தும் பரியிலோ ஆயியாரே - மனந்
தானாசை கொண்டது காண் ஆயியாரே
நித்த முறக்க மிலையே ஆயியாரே - சிவன்
நேசம் வைத்துப் பாசமுற்றேன் ஆயியாரே
சுத்தக் குயில்கள் மனம் ஆயியாரே - மதி
தோற்று முயிர்க் காற்று தேச மாயியாரே
குற்றமென்று பாராமல் நான் ஆயியாரே - சிவ
கோணமதில் வீற்றிருந்தேன் ஆயியாரே 2

வித்தகரை நித்தந்தேடி ஆயியாரே - அன்ன
மீதிறங்கா தேயிருந்தேன் ஆயியாரே
சித்தவர்தா னிங்குவந்து ஆயியாரே - கற்பந்
தின்னவகை செப்புவாரோ ஆயியாரே
பெற்ற வரைப் பிள்ளை தேட ஆயியாரே - இந்தப்
பேயுலக மேசுதுகாண் ஆயியாரே
கற்றவரைப் பெரியோரை ஆயியாரே
கண்டேசக் கண்டிருந்தேன் ஆயியாரே 3

மெத்தப் பழிப்பதாச்சு ஆயியாரே - இனி
மேலுமென்ன காரியமோ ஆயியாரே
சுத்தர்பரி சுத்தர்களை ஆயியாரே - வது
தூஷித்தால் ஏது செய்வோம் ஆயியாரே-வைது
பெத்த சிவன் கொடுப்பார் ஆயியாரே-உன்றன்
மெய்ப்பத மெனக்குத் துணை ஆயியாரே
அத்தர் சிவன்ருன் ஆயியாரே - எனக்
கருள் தருவாரோ சொல்லும் ஆயியாரே, 4

---

1. கத்தர் - கர்த்தரான பொருள், மீறுது - இவற்றுள் வலிமை அதிகமாயுள்ளது.. உற்பனம் - தோற்றம்

2. அறியும்படி, தத்தும் பரி - வாசி

3. கற்பகம் - காயகற்பம்; ஆயுள் நீடிக்கச் செய்யும் மருந்து. பெற்றவர் பிள்ளையைத் தேடுவாரேயன்றி பெற்றவரைப் பிள்ளை தேடுதல் உலக இயல்பன்று.

4. மெய்ப்பதம் எனக்குத் துணை - சிவத்தையணுகச் சக்தி துணை வேண்டுதலால்; தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி' என்பர் பட்டினத்தார்.

## 32. சிற்ருய் கூற்று

விருத்தம்

சத்தமு முரையும் பெற்ற சதாசிவன் சிசுவே கேளாய்
நித்தமும் நினைந்த புத்தி நிலவர மாகப் பார்த்துச்
சித்தான குறத்தி சொல்வாள் தீர்க்கமாய்க் குறிதான் பார்த்து
உற்றமா மலைகள் சென்று ஓடி நானழைத்து வாறேன்.

## 33. குறத்தியை அழைத்து வருதல்

அழைத்து நான் வாறே னென்று
அன்னைதா னோடிச் சென்று
முளைத்திடும் மலைகள் தேடி
முனிவர் தம் குகைகள் தேடிக்
களைத்துரு வான வெள்ளிக்
கமல மாங் கிரியில் சென்று
தழைத்திடுங் குறத்தி தன்னைத்
தானவள் கூட்டி வந்தாள்.

## 34. குறத்தி வருணனை

அகவல்

மாமணிக் குழலாள் மதியணி நுதலால்
பூமருக் கொழுந்து பொருந்து மேனியாள்
வாழ் மணிச் சங்கோ மணியணி மார்பினாள்
கோமளக் கொங்கையாள் கொடியிடை பிடியது
வாமெனப் பொருந்தும் வடிவுள கன்னிக்
கரமெனு மேகக் கலையவ ளிடைசேர்
சந்திர வட்டந் தானது போலச்
சிந்துர பொட்டுந் திலகமு மிலங்கச்
சுந்தரத் தழகோ சோதிமா முகமோ
இந்திர சிலையோ என்னவே புருவம்
மந்திரக் கோடோ மலைபோல் தனமோ
தந்திர நடைகள் தானன்ன மயிலோ

---

32. சீடனாகிய தலைவிக்கு ஆயி இங்கு தோழியாகிக், குறத்தியை யழைத்து வருகிறேன் என்கிறாள்.

சிகமதை யுடையாள் சித்திரக் கடையாள்
மகமதொப் புடையாள் மணிச்சிலம் பொலியாள்
சிறக்கு நவமணித் திரளாயி பதிக்கும்
நற்குறக் கூடையும் நாகமணிப் பிரம்பும்
செங்கையி லேந்திச் சிவசிவா வெனவே
மங்கை புதல்வரை வாவென் றழைத்து
முன்னனை யாக முதல்வனை நடத்திப்
பின்னனை யாயொரு பிள்ளையை இடுக்கிப்
பூங்கா வனமும் புனலுங் கடந்து
பாங்காய்ச் சிவனை பலகால் நினைந்து
அட்டமா சித்திக ளாடத் துணிந்து
சட்டமாய்க் குருவின் தன்னருள் கொண்டு
அண்டர் புகழும் ஆற்றா ரதனிலே
சென்று புகுந்து சிவசதா சிவத்தைப்
பாடியுந் தேடியும் பலபல வாழ்த்தியும்
கோடித் திருமலைக் குறத்திவந் தாளே.

## 35. குறவஞ்சி வருகை

வேறுதரு

பல்லவி

வஞ்சி வந்தாள் - சிவயோகங் கற்ற
வஞ்சி வந்தாள் - புருவ மின்சித்தருள வென்று (வஞ்சி)

அனுபல்லவி

கொஞ்சிக் குயில்கள் குற
வஞ்சிக் கவிகள் பாட (வஞ்சி)

சரணம்

ஓட்டிட்டு மூலமிட்டு உருவாகிக் குருவிட்டு
எட்டெட்டுக் கலைதொட்டு ஏகாந்தப் பொருள் கூற
(வஞ்சி) 1

ஏற்றமதாக சத்தி குருவாசி கையில் பற்றித்
தோற்றம தாக முத்தி சொல்லுகிற முறைகூற (வஞ்சி) 2

அடி. 13. சிகமதம் - அரத்தை, மருந்துச் சரக்கு 14. சிகம். ஒளி 19-20 இவளுக்கு இரண்டு பிள்ளைகள்; ஒருவன் முன்னே; மற்றவன் இடுப்பில், 28. கோடித் திருமலை - பல கோடி மக்களுக்குரியவளான.

அக்குமணி தன்னைப் பூண்டு அருந்தினை மாவையுண்டு
ஒக்குங்குறக் கூடைகொண்டு ஒருமித்து வாசிகொண்டு
(வஞ்சி) 3

விண்ணில் கலைகள் நாடி வேதாந்தந் தன்னைப் பாடி
மண்ணில் துருவி யூடி மாமதியாற் றூரைத் தேடி
(வஞ்சி) 4

## 36. குறத்தி எதிர்ப்படுதல்

கலிப்பா

அண்டர்பதி சென்றுவிரிந் தாடிக் குறம்பாடித்
தொண்டர் பணிந்தேத்தும் தோற்ற மணிபூண்டு
தண்டமதி யாற்றூர்ச் சதாசிவத்தைக் கொண்டாடிக்
கண்டமதி குறத்திசீடன் கண்ணில் வந்து தோன்றினளே.

## 37. சிந்து

உண்மை வருகுது வண்மை பெருகுது
உண்மையிதைப் பாராயி - மெத்த
ஊக்கமாகவே

செம்மை தரும் பொருள் ஞானயோக மின்
சதாசிவ குரு சீடனே (உண்மை) 1

தேச தேசங்கள் சுற்றி வந்தேனிந்தச்
செம்மை எங்குங் காணேன்
வாசனே சமுசாரி போலச் சித்து
வசமா மானி அய்யே (உண்மை) 2

வ்ாற வழிதனில் காடைதானிடம்
வாசிவழி வல மானதும்
தேற மண்டநன்கு கருடன் தானிடம்
சென்று பாய்ந்தும் நன்றுகாண் (உண்மை) 3

சிங்க மென்ற மக ராசியில் வந்த
திருவிளஞ் செல்வம் வருகுது
பொங்க மாமினி கற்ப காலங்கள்
பொருது போயினிப் பெருகி (உண்மை) 4

---

37, காடை - இடம் கருடன் வலம் - நற் சகுனங்கள்

ஏம வித்தைகள் கைக்குள் வருஞ்சித்
தீசனாருட சீஷா கேள்உன்
நாமம் நீயதிகந் துதிக்குஞ் சந்தான
நாத விந்தினைப் பெறுவாயே (உண்மை) 5

பக்குவத்தினில் ஆசான் வந்துனக்குப்
பாலிப்பான் மெத்த பவுசு
ஒக்கும் ஒக்கும் என்மேல் வள்ளிவந்
துறக்கி விருக்கிட்டுக் கொண்டிருக்குது (உண்மை) 6

பத்தி முத்தி யறியா வுனது
பங்கில் தெய்வமாய்க் காணுது
புத்தி சித்தர் நவகோடி தேவர் பதம்
போற்றும் உனக்கருள் புகலுவார் (உண்மை) 7

## 38. குறத்தி வாசல்வளம் கூறுதல்

கலிப்பா

சாற்றுமுறை யாற்றூர்ச் சதாசிவனார் தம்சீடன்
ஏத்துங் குருபதத்தில் இச்சைகொண்டு தானிருக்க
பார்த்து மலைக் குறத்தி பண்புளதெல்லா முரைத்து
வாய்த்தே னுறையுமணி வாசல்வளஞ் சொல்வாளே.

## 39. வாசல் வளப்பம் தரு

வாசலிது வாசலிது - சித்தர்
வாழுமணி வாசலிது
முத்தருறை சமாதி பதிதிரு
மூலருட வாசலிது
சித்துரைக்குங் காலங்கி
சென்றோதும் வாசலிது. 1

போற்று மதி தோற்று சிவ
போகருட வாசலிது
கூற்றுமறை தானொளிக்கும் எங்கள்
கொங்கணர் தம் வாசலிது. 2

---

36-5 ஏம வித்தை - பொன்னாக்கும் வித்தை
36-6 பவுசு - பெருமை. வள்ளி - ஆவேசிக்கும் தெய்வம். உறக்கி-வலிவாகப் பற்றி. விருக்கிட்டு - ஆவேசித்து

ஆதிகயி லாச சட்டை
யானமுனி வாசலிது
சோதி மனோன்மணி பாதம்
தோற்று கின்ற வாசலிது 3

அண்டர்களும் தேவர்களும் - தேடி
ஆராய்ந்த வாசலிது
தொண்டர் நவ கோடி சித்தர் - ஆயியைத்
தோற்று மணி வாசலிது. 4

வாணிகுடி காத்திருக்கும் - ஆதி
வயிரவனார் வாசலிது
ஆணி சுழி கதிர் மறையும்
அங்கரமே வாசலிது. 5

துத்தி யொடு நாக சின்னம்
சேர்ந்தூதும் வாசலிது
மற்றி சங்கு சக்கரமும் - அய்யே
பதித்திருக்கும் வாசலிது. 6

சத்த ரிஷி முனிவரொடு - தேவர்
தவம் புரியும் வாசலிது
சித்தரருள் பெற்ற மிர்தம் - அய்யே
செபித்துண்ணும் வாசலிது. 7

முக்கோண வாசலிது
முத்தி தரும் வாசலிது
சற்கோண வாசலிது
சந்தான வாசலிது. 8

தோற்று மனம் பூரணத்தில்
சேர்க்கு மணி வாசலிது
ஏற்று மணி சுந்தரன் தான்
எனைக் கூட்டும் வாசலிது. 9

---

39 : 1, 2, 3 திருமூலர், காலங்கி, போகர், கொங்கணர், சட்டை முனி 39 : 6-10 சொல்லப்பட்ட சித்தர்கள், 5. வாணி - சரசுவதி, வயிரவனார் - சிவ சொரூபங்களில் ஒன்று, 6. துத்தி முதலாயின வாத்தியங்கள்.

சுற்று முற்று ஆூது காணம் - அய்யே
    சதாசிவனார் சீடர்களை
நித்த முத்தி ஆனந்தமாய் - அய்யே
    நின்றாடும் வாசலிது. 10

சித்தர் பதஞ் சலிபோற்றும் - அய்யே
    சிதம்பரத்தின் வாசலிது
அத்தருடன் தேனமுதம்
    உண்டழியா வாசலிது. 11

## 40. மலைவளம் கேட்டல்

கொச்சகம்

தாசர்புகழ்ந் தேத்தும் சதாசிவனார் தம்முடைய
வாசல்வளங் கேட்டு மனமகிழ்ச்சி யாச்சுதம்மே
பேசும் பெருமைபுகழ் பெற்றகுற வஞ்சியுங்கள்
தேசமலை வளந்தான் நீஎனக்கே சொல்வாயே.

## 41. மலை வளப்பம்

வசனம்

ஆனால் சொல்லுகிறேன் கேளடா அய்யே. நாட்டுக் குறைச் சாரி வெகுவாய்ச் சொல்லக் கேட்டிருப்போம் நாங்கள். ஆனால் வேதாந்தக் குறைச் சாரி எங்கள் மலையுந் தேசமுங் குலமும் சொல்லுகிறேன் கேளடா அய்யே.

எங்கள்மலை வளங்களிப்போ பொங்கமுதாய்ச் சொல்வேன்
    இசையகிரி முத்தியென்னும் இறைவர்மண மலைகாண்
தங்கமணி பூரகத்தில் ரெத்தின மணிபோல்
    தானழகு போன்றமலை தம்பிரான் மலைகாண்.
வங்கமுறு துரகமலை சோம கிரியும்
    வரையாறு தலைமுறையில் வந்ததிந் தக்காணி
பொங்கமினி யாறுமலை எங்களம்மைக் கேதான்
    பொருத்தமுடன் சீதனங்கள் கொடுத்தது காணம்மே.

---

**41.** குறைச் சாரி - குறச்சாதி என்பதன் மரூஉ,

41. இசையகிரி - சையகிரி, காவிரி நதி உற்பத்தியாகும் சாறிய பர்வதம் என்பது ; குடகுமலை, மணி பூரகம். ஆருதாரணத்தில் மூன்ருவது தாளம்.

## 42.

கொடுத்தமலைப் பேருதன்னைக் குறிப்பாகக் கேளு
கோடுமகா மேருதய கிரியத்த கிரிதான்
அடுத்தசிற்றூர் திருவண்ணாமலை யெங்கள் மலைகாண்
அருகோடி முறியன்மலை அறிவின் மலையோடு
தொடுத்தமலை யீராறு நாங்கள் சென்று வருவோம்
தோகைமலை யாகமத்தைச் சொல்ல இனிக்கேளு
கடுத்தமுறு நாதாந்தம் எடுத்த சதகன்னி
கருவாக வாழ்ந்திருக்கும் துருவ மிதுதானே

## 43. மலையதிசயங் கேட்டல்

கொச்சகம்

சத்தம்புகழ்பெரிய சதாசிவனார் நன்னாட்டில்
சித்தமுறுந் தபசு செய்யுங் குறமானே
உற்றமலை யுங்கள்தமக் குள்ளதெல்லாம் நீயுரைத்தாய்
யத்தர்மலை யுற்ற அதிசயத்தைச் சொல்வாயே

## 44. மலையதிசயங் கூறல்

குறம்

சொல்லுகிறேன் எங்கள் மலையதி சயங்களையே
சொற்பெரிய தோகை மலைக்குற்பன மீதெல்லாம்
வெல்லுகுற கொம்மையதில் ஆயிரத் தெட்டாகும்
மேலமலை மேலோர் சுனைதான் விரிவாக்காணும்
அல்லுகிறே னதிலூறும் அமுதகங்கை அய்யன்
நவநாத சித்தர்மனம் நாடிவந்து பொசிப்பர்
மல்லுகிற மனம்போக்கும் சிவமாக்குந் தேகம்
மதியொளியுங் கதிரங்கி வடிவதென்ன லாமே.

---

42. தோகைமலை - விராலி மலையாகலாம்.

கொம்மை - சிகரங்கள். நவநாத சித்தர் மாடி என்பது வட நாட்டு மொழி கோரக்கநாதர், மச்சேந்திர நாதர் என்றெல்லாம் சொல்லப்படுவோர். இவர்கள் ஒன்பது பேர். சக்திய நாதர், சட்தாக நாதர், ஆதி நாதர், அநாதி நாதர், பகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், கோரக்க நாதர் என்பர். மனத்தைச் சிவமாக்கித் தேகத்தை முச்சுடர் போல் ஒளி தாக்கும் என்க.

## 45

வடிவாகு மறிவின்மலை மகுத்துவத்தைக் கேளு
    மாதாந்தம் வேதாந்தம் மருவுவிந்து நாதம்
குடியாக வாழ்ந்திருக்கு மதுகாணும் போதங்
    குருபதமுந் திருவருளுங் கூடியதில் வாழும்
முடியாகும் பஞ்சகலை என்ற சுனையுண்டு
    முத்திபெறு முனிவர் சித்தர்மெத்த அதில்உண்டு.
அடியாகுங் கற்பகத்தின் விருட்சமங்கே யுண்டு
    ஆனந்தத் தேனுமுண்டு அசவையுண்டு தானே.

## 46

அசவை மந்த்ரமோட்ச கிரியென்றுதித்த கொம்மைக்
    கடிவாரந் தனிலேமுறி மலையுண்டு கேளும்
நிசவையுறு சங்கநிதி மற்றும் நிதி செம்மை
    செலுத்து குறு முனியுண்டு சிவாயமர முண்டு
இசவைநறு கற்பகத்தி லொடுங்கினபே ருண்டு
    ஏகாட்சரப் பொய்கையெனுந் தீர்த்தமதி லுண்டு
விசைவையுறு வினைபாசக் கிணறுமங்கே உண்டு
    வெளியொளியும் மதிமேயும் விட்டமிந்த மலைகாண்

## 47.

காணுமிந்த மலைக்கருகே அண்ணாமலை என்றும்
    கருநீல கிரியென்றும் கருதுவார் பெரியோர்
தோணு மங்கே கயிலைசுனை சுத்தசயி தன்னியம்
    சுனைநீரில் குளித்தக்கால் தோணுமே மெய்ஞ்ஞானம்
ஊணுமென்ற மவுனிகர்த்தர் ஒருகோடி மலைமேல்
    உற்ற சித்தர் பொற்சிலைபோல் மெத்த அங்கே உண்டு
ஆணுமில்லை பெண்ணுமில்லை என்றவனைக் கண்டால்
    அடங்கு மனமதிசயங்கள் அனேகமுண்டு அம்மே

---

45. பஞ்சகலை - பிரதிஷ்டாகலை, நிவிர்த்திகலை, வித்தியாகலை, சாந்தி கலை, காந்தியதீத கலை, கற்பகம் - நினைத்தது தரும் தெய்வ விருட்சம் அசவை - அசபா மந்திரம்.

46. குறுமுனி-அகத்தியர்: சிவாயமரம் - சிவாயமலை என்பது இரத்தன கிரியாகிய திருவாட்போக்கி மலையின் பெயர். ஏகாட்சரம்-பிரணவம்.

47. சைதன்னியம்-அறிவு மயமான நிலை

48.

அதிகமென்ற அத்தகிரி தனிலேமா வுண்டு
ஆடுசுனை மஞ்சள்நதி அம்பநதி யுண்டு
மதிகமென்ற புருடராக மிருகமதி லுண்டு
வாழசுரவி யாமூலி மருசேந்தி யுண்டு
துதிகமென்ற மந்திர மலமூலி யுண்டு
தோற்று கருவாழை தும்பை துற்கமலி யுண்டு
புதிகமென்ற சந்திரனுஞ் சூரியனும் மிடம்போய்க்
புகுமிந்தக் குவடுதன்னில் நிற்குமது அம்மே.

49.

சயமான உதயகிரி தனிலே சிவகங்கை
தேறுகம லாலயங்கள் சிலகோடி உண்டு
நயமான மயரூப நற்கெவுரி யுண்டு
நல்ல வெள்ளை சாரைசல் லாரையதி லுண்டு
பயமான தொன்றுமில்லை யப்பதியில் வாழ்ந்தால்
பலபலவாங் குகைதோணும் திசைநாலுங் காணும்
மயமான இரவியிந்து நயமாக உதித்து
வளர்ந்தோங்குங் கிரியிலுள்ள வண்மையிது தானே.

50.

தானென்ற உதயகிரி அத்தகிரி நடுவே
தகுமேரு கிரியீசன் தான்வாழுங் கிரிகாண்
வானென்ற நவநீத முனிகள்பல கோடி
மகிமையுள்ள சிவயோக புனிதர் சிலகோடி
கோனென்ற தேவர்கயி லாசபதிச் சுனையில்
கோடு சுழி யோரிதழ்த்தா மரையதனி லுண்டு
கானென்ற கலைக்கியானம் பிரித்து அசையாமல்
காற்றடிக்கு மேல்துரியம் கருதுமலை யாமே.

---

48. புருடராக மிருகம்-புருட முகம் கொண்ட ஓர் ஐதிக விலங்கு. வியா மூலி மரு சேந்தி, - மூலிகை வகைகள்.

49. சிவ கங்கை-சிதம்பரத்தின் தீர்த்தம், கமலாலயம்-திருவாரூரின் தீர்த்தம் இரவி இந்து - சூரிய சந்திரர்.

**51.**

ஆமென்ற சோமகிரி அதிசயத்தைக் கேளும்
அதிரூப குமரிகன்னி மதிசூடி வாழ்வாள்
பூமென்ற பாரிசாத புஷ்பமாரி சொரியும்
புகழ்பெரிய அமுதசுனை கொம்மையதில் ரெண்டு
தாமென்ற அந்தர சொர்க்க பாதாள முண்டு
தாண்டி வரு முனிவர் குகை சதகோடி யுண்டு
நாமென்றும் சாகாத மூலியதில் உண்டு
நாட்டுக் குரு வரிகுமரி நாடுமலை தானே.

**52.**

தானான நாகமலை தன்னிலொரு கணவாய்
தாண்டு வார்க்கு மனவலுக்குந் தப்பாது முப்பாழ்
வானான நாககன்னி தீர்த்தமஞ்சள் நீர்போல்
வழிந்தொழுகிச் சுனைகளெல்லாம் தெளிந்தோடிப் பாயும்
தேனான கண்டமலை யுண்டகத்தில் நஞ்சு
சிறந்தெடுத்துப் பொட்டுவரை பிறந்திடத்தைப் பாரு
வேனான கொம்மையதில் பதினாறு தீர்த்தம்
விரைந்து சித்தநாடு நடம்புரிந்த சித்தர் மலையே.

**53.**

தானவனா யுதிக்குமந்தத் தம்பிரான் மலையில்
தருசெவ்வாய்ச் சுனைமுனிவர் சதகோடி யுண்டு
வானான தேவசிவ மங்கையிடப் பாகர்
வளர்கூகை போற்றியா மாவிருட்ச முண்டு
தேனனங் கன்னிசுனை தேவநதி யுண்டு
சிலைமதனன் வயிரவள்தன் தீர்த்த மதிலுண்டு
வானவனாங் கதிரொளிபோல் கொம்மைபன்னி ரெண்டில்
வளருமிந்தக் கிரியிலுள்ள மகிமையது அய்யே.

**54.**

அய்யா கூறக் கேளுமிந்த அழகர்மலை தனிலே
அருவியொரு ஆயிரங்காண் ஆண்டவர்கள் கோடி

---

52. முப்பாழ் : யோக நெறியில் செல்பவர்களுக்கு, பிராசாத நிலைகளில் மூன்றிடங்களில் சூனியம் அல்லது பாழ் சொல்லப்படும்.
இங்கு மூலிகைகள் பல சொல்லப்படுகின்றன.

துய்யசுனை கேள்பதி னாயிரந்தா னுண்டு
　　சோதியொடு ரோமவிருட்ச கணங்கமர முண்டு
வெய்யதிரு வாரையுண்டு சஞ்சீவி யுண்டு
　　விரிந்தாடும் பாலைகரு வேலிகொடி வேலி
உய்யசேங் கொட்டைக் கடுக்காய் பலாமுன்றில்
　　ஊக்கமொடு கொம்மையதில் உதித்தவதி செயங்கேள்.

## 55.

செயமான மணமுத்தி சேருமலை தனிலே
　　தேவர்முனிவர் வாழும்பொய்கைத் தீர்த்தமதி லுண்டு
நயமான வெண்மிருக மூலியதி லுண்டு
　　நவநீதம் பூண்ட சிவனாட்டமதி லுண்டு
பயமான மனந்தேற்றப் பஞ்சாட்சர முண்டு
　　பலபலவாஞ் சிறுயோகப் பச்சிலைக ளுண்டு
அயமான னருபதமாங் கிசபேதி கொம்மை
　　ஆறுதிரு வாணிமண மலையினதி சயமே.

## 56.

மேலான ஆனைமலை நாலான கொம்மை
　　வேட்டவெளிச் செடிமூல மிட்டவன மிதுமேல்க்
காலானால்க் கட்டுதற்கு அஞ்சிலையி னொச்சி
　　கருநொச்சி பெருநொச்சி காட்டுநொச்சி யுண்டு
சேலான துதிகை முனியிதில் வாழ்வதுண்டு
　　திறமான மலையிலுள்ள சேதிஎல்லாம் சொன்னேன்
கோலான பனிரெண்டு வரையிலுள்ள மகிமை
　　கூறினேன் குருவருளைக் கொடுக்குமிது அம்மே.

---

42-ஆம் பாடலில் தங்கள் மலைகள் ஈராறு என்று சொன்ன குறத்தி, 44-இல் மலையதிசயங்கூறத் தொடங்கி 45-56 பாடல்களில், அறிவின்மலை, மோட்சகிரி, அண்ணாமலை, அத்தகிரி, உதயகிரி, மேருகிரி, சோமகிரி, நாகமலை, தம்பிரான் மலை, அழகர்மலை, மணமுத்துமலை, ஆனை மலை என்ற பன்னிருமலைகளிலுமுள்ள சித்தர் அதிசயங்களைச் சொல்லி முடிக்கிறாள். இவையாவும் யோக நெறியாலும் தந்திரவாத நெறியிலும் சொல்லப்படுபவை. சிலபகுதி இங்கு பிற குறவஞ்சி நூல்களைப் பார்க்கிலும் மிகவும் விரிவாக உள்ளது. -13 பாடல்கள்,

## 57. தேசவளங் கேட்டல்

கலிப்பா

அட்டசதா சிவனார் ஆற்றூர் வளநாட்டில்
இட்டமுடன் மலையி லிருக்கு மதிசயங்கள்
திட்டமுடன் கேட்டுத் தெளிவாச்சுதென் பனந்தான்
சிட்டர் பதியறிந்த தேசமது சொல் குறத்தி.

## 58. தேசவளங்கூறுதல்

தெனதெந்தினா தெனதெந்தினா தெனதெந்தினா தினனா.

நண்மைசிவ ஞானம் பெற்ற சற்குருவைப் போற்றித்
　　தவம் புரிந்து யோகநிலை தாக்குமுத்தர் கேளாய்
உண்மை தரித்துத் தெற்கு மேற்கு நான் சென்றேன்
　　உத்தமனே அவ்விடத்தி லுள்ளகரு சொல்வேன்
வண்மைதரு தேசமதில் வாழும் சித்தர்க் கெல்லாம்
　　வயது ரொம்ப லெக்கமில்லை வண்பனைபோ லுயரம்
நன்மையுடன் பொசிப்பவற்கு செல்பான மாக்கும்
　　நாதாக்கள் போதமதை நாடுவார்க ளம்மே.

## 59.

தானவனாய் மவுனமுற்று வாழுஞ்சித்த மணிதான்
　　தப்பாது சொரு சித்தி சரிமாத்துப் பாரு
ஆனவண்ண மாயிரத்தெட் டாகுமதில் வேதை
　　யரிதரிய பூரணத்தி லலைத்தாடு வார்கள்
தேனவன மாயியுரு வாதிக்குந் தேசம்
　　சென்றவர்களுண்ட முற்றந் தேவனிதி யவரால்
பானவன்ம ஞானநிதி பரமசெய மெல்லாம்
　　பார்க்கவென்றால் காயசித்தி பண்ணுமடா ஐயே.

## 60.

ஐய மற்ற மேருவுக்குக் கீழ்ப்புறத்தில் சென்றேன்
　　அத்தேசத் துள்ளவர்க்கு ஐந்நூறு வயது

---

58. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சித்தர் வடிவ வருணனை தெற்கு மேற்கு நாட்டில் சித்தர் வயது அதிகமில்லை, பனை போல் உயரம், லெக்கம்-எண்ணிக்கை.

60. மேருவுக்கு கீழ்ப்புறமுள்ள சித்தர் வடிவம்: வயது ஐந்நூறு; பனையில் பாதி உயரம், இவர்கள் ஆகாய கமனம் உடையவர்கள்-

வெய்யசித்த ருயரமது பனைமரத்திற் பாதி
யின்ப மணி மாற்றதுதான் ஐந்நூற்றி யெட்டு
கைசுற்று பூமிக்கும் வானுக்கு மேதான்
காலொன்றுந் தட்டாது கமனத்தில் செல்வார்
துய்யருட அறிவையெட்டு மவர்களாரு மில்லை
தொந்தமுட னாலாகச் சேர்ந்தார்கா ணம்மே.

61.

சேர்ந்தவர்கள் பொசிப்பதுதான் செண்பகப் பூவையே
சென்றநான் மேருவுக்குத் தென்புறத்தி லேதான்
வாழ்ந்தவர்கள் வயதவர்க்கு நூறுண்டு கேளு
மகிமையுள்ள சிவலோக மணிக்கட்டி யேதான்
சேர்ந்தவர்கள் காயசித்தி பண்ணினால் சிவமாந்
தின்பதென்ன பாரிசாத புஷ்பமிரு யுகமாந்
தேர்ந்தகயி லாசபதி யண்டபே ரண்டத்
தொட்டாடி மீளுவர்காண் திட்டமிது ஐயே.

62.

தானென்ற மேருவுக்கு மேல்புறத்திற் சென்றேன்
தண்பனையில் காலாகுந் தானவர்கள் யாம
வானென்ற வயதவர்க்கு முந்நூற்று அஞ்சு
வாழுவார் கேசரத்தை வன்தரையில் மெதியார்
ஆனென்ற தவருடனே பேசவேணு மென்றால்
அந்தரத்தில் நின்றாலே அவர்களுடன் பேச்சு
கானெற்ற தவர்குளிகை யானது பூரணமே
கருவாகுந் தேசமெல்லாங் கனிமிளகு பொசிப்பே.

63.

அய்யென்ற அட்சரத்தில் நாலான தேசம்
அம்மம்மா ஆசானை யான்சொல்லக் கேளும்

62. இவர்கள் உயரம் பனையில் கால் பங்கு. வயது 305

63. இப்பாடலில் மூன்றும் அடியின் பிற்பாதி விடுபட்டுள்ளது. இங்கு குறிப்பிட்ட பதஞ்சலி. சிவயோக மாமுனி, வியாக்கிர பாதர் என்ற மூவரும் திருமந்திரம் பாயிரத்தில் குரு பரம்பரை என்ற தலைப்பின் முதற்பாடலில் குறிக்கப்பட்டுள்ளனர். இக்குறவஞ்சி செய்த ஆசிரியர் சித்தர் ஞானத்தைப் பாடிய போதிலுங்கூட, முறையாகச் சாத்திர தோத்திரங்களைப் பயின்றவர் என்று தெரிகிறது.

மெய்யென்ற வடபக்கம் பதஞ்சலி தானிருப்பார்
மேவுசிவ யோகமுனி கீழ்ப்புறத்தில் நிற்பார்
செய்மேற்கு வியாக்கிரர் தெளிந்தங்கே நிற்பார்
... ... ... ...
கொய்யயென்ற தேசமிந்த நாலுக்குள் ளான
குருநெறியு மவர்கள் செய்யுங் குறியிது தானய்யே

## 64. நாட்டுவளங் கேட்டல்

கலிப்பா

வேதம் பொருந்துகுற மெல்லியரே நால்தேசம்
நீதம் அறிந்து நீஎனக்கு சொன்னதனால்
பாத மறிந்தேன் பரந்தமனந் தெளிந்தேன்
நாதமுடன் விந்துமணி நாட்டுவளஞ் சொல்வாயே.

## 65. குறத்தி நாட்டுவளங் கூறுதல்

பத்திசிவ யோகத்தைப் பார்க்கின்ற சீடனான்
சுற்றிவந்த தேசநெறி சொன்னே னறிந்தமட்டும்
சத்திசதா சிவத்தைத்தான் வணங்கி நாட்டுவளம்
எத்திசையும் கொண்டாட இயம்புகிறேன் கேளம்மே.

## 66. நாட்டு வளப்பம்

அஞ்சுமலை மிஞ்சுமணி வஞ்சிகுரு நாடு
ஆறுதெரு மூன்றுவகுப் பாகுமெங்கள் நாடு
பஞ்சகலை நெஞ்சுதனில் மிஞ்சிவளர் நாடு
பலகாலுஞ் சிவயோகம் பார்க்குமெங்கள் நாடு
கொஞ்சுகரி பாரதரு மிஞ்சுவளர் நாடு
கூடுசுழி யாறுகும்பி குணமுள்ள நாடு
தஞ்சமென்றே அடைந்தவரைத் தற்காக்கும் நாடு
தானவனாய் வீற்றிருக்கும் தகைமையுள்ள நாடு.

## 67.

திங்கள்மும் மாரிபெய்யும் எங்கள்மலை நாடு
தேவர்முனி ரிஷிதவங்கள் செய்யுமெங்கள் நாடு
பங்கமில்லை ஒருநாளும் தங்கம்விளை நாடு
பரமகுரு பதம்போற்றிப் பணியுமெங்கள் நாடு

சிங்கமுடன் ஆளியுமே தங்கிவளர் நாடு
சீறு புலி பசுக்களுடன் திரியுமெங்கள் நாடு
பொங்கமுடன் மாநாகம் புகழ்சக்ர வாளப்
புள்ளுடனே கூடியிரை புசிக்குமெங்கள் நாடு.

68.

ஆராய்ந்து இரவிமதிக் கப்பாலே சென்று
அடங்காத பூரணத்தில் வளைந்தாடி நின்று
பாரார்ந்து மூலகுரு பதம்போற்றி நின்று
பரமரக சியவேதம் பார்க்குமெங்கள் நாடு
சீரார்ந்து கொண்டக்கால் சேர்மூல வழியில்
சென்றோடி ஆடுநினைக் கொண்டாடும் நாடு
ஊரைந்து என்றாலும் ஈரைந்து காவல்
ஓங்கான வாசல்கண்ட பாங்கான நாடே.

69.

அச்சமில்லா மச்சமுனி மெச்சும் வளநாடு
ஆற்றூரில் ஈசர்பதம் போற்றிவளர் நாடு
பச்சமுடன் பருவாச மிச்சமுள்ள நாடு
பாங்கான போகருடன் பதம்போற்றும் நாடு
உச்சமொழி தற்சமய மச்சவள நாடு
மன்றுசதா சிவகுருவை வாழ்த்துமெங்கள் நாடு.

70.

மருவுற்ற கண்டமும் செகனோடு ருத்திரன்
மாலயனைப் போற்றிவாழ் மகிமையுள்ள நாடு
குருபத்தி யாகவே வேதாந்தம் பார்த்துக்
கோடுசுழி கணபதியைக் கொண்டாடும் நாடு
உருவுற்ற மதியமுத முண்டுகளித் தோங்கி
உடல்சித்தி யாகவரு முண்மையுள்ள நாடு
கருவுற்ற கற்பகத் தருவான நாடு
காலனணு காதபதி காணுமெங்கள் நாடே.

## 71. குலவளம் கேட்டல்

கொச்சகம்

ரஞ்சிதமே மிஞ்சுகலை நாதாக்கள் மெச்சுகுற
வஞ்சியே நாட்டுவளங் கேட்டுநான் மகிழ்ந்தேன்
தஞ்சுறுபா ராதிசதா சிவத்தைக்கொண் டாடும்
கொஞ்சுகிளி மொழியேஉன் குலவளங்கள் சொல்வாயே.

## 72 குலவளங் கூறுதல்.

ஆனால் சொல்லுகிறேன் கேளம்மே.

சாற்றுமுறை பார்த்துவெளி சேர்த்தறிவி னாலே
சதாசிவத்தைப் போற்று முத்தர் தன்மையிது கேளாய்
ஏற்று முறை எங்கள்குலம் ஏழு வகுப்புண்டு
இதுவழி எங்கள்குலம் ஏற்றமுள்ள சாதி
தோற்றுமுறை யறிவுதங்குஞ் சுக்குலக்குறச் சாதி
துலங்குகின்ற எங்களுக்கு இலங்கு மணி பூரம்
பார்த்து முறை மூணுகண்டம் சேர்ந்தகுற மேழில்
பட்சமுட னெங்கள்குல மிச்சங் காணையே

## 73.

பொய்யுரைக ளெந்நாளும் பொருந்தாத சாதி
புருமையப் பதஞ்சலியைப் போற்று மெங்கள் சாதி
கையணைந்த கரைதனைக் கருப்பேற்றுஞ் சாதி
காரணமாய் விட்டதிசை கண்டதெங்கள் சாதி
மெய்யான சொரூபமணி விளைவிக்குஞ் சாதி
விசுவமென்ற குருவடிவை வேண்டியதோர் சாதி
வையமதில் வாதமதை மகிந்து கண்ட சாதி
வண்மையுள்ள அட்டாங்க மணிக்குகந் தம்மே

72. குறத்தி குலவளம் கூறுமிடம் எல்லாமே புதுமையாயிருக்கக் காணலாம். அம்மே என்று தலைவியை விளித்துச் சொல்வதாயிருப்பினும், இங்கு தலைவி முத்தானந்தச் சிட்டனைமையால், அம்மே என்றும் அய்யே என்றும் விளிகள் மாறி வரவும் காண்கிறோம். ஏழு வகுப்பு என்பது ஆறாதாரங்களையும் அப்பாலுள்ள துவாத காந்தத்தையும் சேர்த்து ஏழாகச் சொல்லியதாகத் தெரிகிறது.

73. புரு மையம்-புருவ மையம், வாதம்-இரச வாதம்.

74.

எங்களுட குலத்திலென்றும் இணங்குவோர்க்கு நன்மை
இருளகற்றி அருள் கொடுக்கும் ஏற்றமுள்ள சாதி
தங்கள்குல மிங்கேயில்லை அங்கேயுண்டு என்றால்
சமயமென்ற மாடதென்று சாற்றுமெங்கள் சாதி
பொங்கமுடன் நஞ்சென்ற வஞ்சகத்தை நீக்கி
போக்குவரத் தற்றிடத்தில் போதமுள்ள சாதி
சங்கமுடன் விகடித்துக் கணிகையில்லை என்று
சார்ந்தோரை யாதரிக்குந் தகைமையுள்ள தம்மே.

75.

ஆண்டவருக் கிணங்காத பெண்களுக்கு மந்த்ரம்
அரகரா மோனத்தை அருளுமெங்கள் சாதி
சேடவர்கள் பெண்மேலே மோகமது உற்றால்
சிவசிவா என்றுசொல்லித் திலகமிடும் சாதி
காடுமலை தேடிநித்தம் ஓடியலை வோரைக்
கைப்பிடித்துக் கற்பமுறைக் காட்டுங்கா ணம்மே.

76.

குறம்பாடி தேசமெங்கும் கூடைபோற்றி வருவோம்
கூலியது முந்நாழி குறைந்தக்கால் பிறிவோம்
சறம்பாடி லோகமதில் நின்றமதி யூறல்
தயவாகப் பாலகற்குத் தானீந்து திரிவோம்
செகம்பாடி அட்டதிசை லோகாதி லோகம்
செழித்துண்ண வல்லாரைத் தீனியினா லறிவோம்
உறம்பாடிக் கெவுணசித்தர்க் குள்ளகுறி சொல்வோம்
உண்மையுள்ள குறச்சாதி தன்மையிது அம்மே.

77.

அய்யேஉடல் பொய்யேயிது மெய்யேஎன எண்ணி
அறிவாளர் காயசித்தி அழகாகப் பண்ணி

---

74. போக்குவரத்தற்ற இடம்: 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே' என்பது திருவாசகம்.

75. இப்பாடலில் ஓரடி குறைவாயுள்ளது.

76. குறி சொல்வதற்குக் கூலி முந்நாழி நெல்போலும்.

துய்யார்க னிந்தவிதம் பகராம லுன்னி
... ... ... ...
செய்யமன மெய்யறிவில் சிதறாமல் வன்னி
சேர்ந்த எட்டில் நாலை யொக்கத் திறமாகப் பண்ணி
உய்யவென்று ஐவரையும் அய்யமறச் சண்ணி
உறவாக வாழ்ந்திருப்போம் மறவாத மலையே

78.

சுக்லகுற வங்கிசத்தில் மிக்ககுறஞ் சேர்ப்போம்
சூழுலகிற் சில்லொலியை வாழுலகில் தப்போம்
மிக்ககுலம் ஆந்தை கூகை தவளைபோல கத்தி
மீதுடனே திரிந்தக்கால் வாதுடனே வேர்ப்போம்
அக்கிகுல புத்திரரை ஒக்கஅகம் வைப்போம்
அகமை எங்கள் குறச்சாதி மகிமையிது அம்மே.

79.

பார்க்குறவர் பொசிப்பதென்ன பண்புடனே சொல்வேன்
பால்களியோ டமுதுவகை பலகாரந் தின்போம்
நீர்க்குறமாஞ் சுணங்கன் சோதியோடு ரோம
மதிசெயமாய்ப் பால்கறந்து மிச்சமுடன் புசிப்போம்
சாறுகுற சீவசெந்து ஏழுவகை யதனில்
தவிரவொன்று மற்றதெல் லாம்பொசிக்க ஒப்போம்
தாருவுரு ஆயிரந்தான் இருபதுட னொன்று
தாக்குமறு நூறுகலை தான்பொசிப்போ மம்மே.

80. உரைத்த குறிகளைக் கேட்டல்

கொச்சகம்

சாதி குலவளங்கள் தப்பாம லேயுரைத்தாய்
ஆதிதனி லுன்குலந்தான் அதிகமெனக் கண்டேன்நான்
சோதியாய் முன்னோற்குச் சொன்ன குறியதனில்
பேதியா தேபலித்த பிரபலஞ்சொல் வாய்குறத்தி.

---

77. இதன் இரண்டாம் அடியில் பிற்பாதி இல்லை.

78. இதிலும் ஓரடி குறைவா யுள்ளது.

79. சீவசெந்து ஏழுவகை: தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீரில் வாழ்வன, தாவரம். ஒன்று தவிர - தாவரம் தவிர.

## 81. உரைத்த குறிகளைச் சொல்லுதல்

என்றுசொல்லு முன்னே இருந்த குறமகளும்
நன்றெனவே தான்மகிழ்ந்து நாயகனைப் போற்றிசெய்து
ஒன்றுதவி ராமல் உரைத்த குறியதெல்லாம்
மன்றுலகில் சீடருக்கு வாய்திறந்து சொல்வாளே.

## 82. வசனம்

ஆனால் சொல்லுகிறேன். முன் நாதாக்களிடம் யான் குறி சொல்லி வெகுமதிகள் வாங்கினது சொல்லுகிறேன் கேளடையே.

தரு

மச்சமுனிக் குச்சிதமாய் மெச்சஒரு குறிதான்
வரமாக விளம்பினதால் பரமர்நூ லீந்தார்
பச்ச முள்ள போகருக்கு மிச்சமொரு குறிதான்
பண்புடனே ஈந்ததினா லன்பது நூறீந்தார்
உச்சமுடன் சட்டைமுனிக் கொருகுறி நான் சொன்னேன்
உற்பனமாய்க் கற்பமுறை அற்புதம் நூறீந்தார்
தற்சொருபக் கொங்கணருக் கிச்சையுடன் குறிகள்
தான்சொன்ன தாலவர்தம் வேன்கண்டேன் அய்யே.

## 83.

திருமூல நயினார்க்கு அனுகூல மாக்கித்
தீர்க்கமாகச் சொன்னகுறி யுத்திகள் கண்டு
கருமூல மானமன மொன்றியே நின்றால்
காரணமா மிதுவென்று மாரணமாய் விண்டார்
குருமூல மானகோ ரக்கருக் கன்று
கூசாமல் குறிசொன்னேன் கொப்பொரு சோடீந்தார்
பெருமூல மாகியதோர் தேவரிஷிக் கெல்லாம்
பெருமைசிவ யோகக்குறி பேசினர் காணய்யே.

---

82. வசனம்: நாதாக்கள் - ஞானிகள்.

மச்சமுனி-சம்பிரதாயமான சித்தருள் ஒருவர்; பரமர் நூல்-ஓர் அரிய ஞான நூல். வேன்-வியன் மிகுதி

83. ஆரணமாய்-வேதம் போல; கொப்பு-ஒரு காதணி ; சோடு-சோடி இரண்டு

84.

இடைக்காடன் தன்னிடத்தில் நவக்கிரங்கள் சிக்க
யிருக்குதென்ன உரைத்தேனான் தருக்குழல்குச் சீந்தார்
விடைக்காடன் கவுதமற்கு அகலிவந்து சேர
வேளையிருக்கு தென்றேன் காளைஎனக் கீந்தார்
சடைக்காடன் பராசருக்குப் புத்ரன்வரு மென்று
சாற்றினேனா னடியாட்கு ஏற்றதெல்லா மீந்தார்
கடைக்காடன் வாசகன்தான் காரணரைக் காண
காணுதென உரைத்தேனான் தோணுகுறி அய்யே.

85.

சித்தாதி சித்தருக்குத் திசைதீட்சை மார்க்கம்
செயமென்று சொன்னகுறி நயமென்று சொன்னார்
பத்தாதி பத்தர் கட்கு உத்திரவ தாக
பாலித்தேன் குருபாதம் பண்புடனே கண்டார்
கத்தாதி கத்தர்சிவ யோகிக்கும் பூர்ணங்
காணுமென்று சொன்னேனான் மூணமுறை யீந்தார்
உத்தாதி உத்தமுரை பெற்றவருக் கெல்லாம்
உற்பனமா மென்றகுறி அற்புதங்கா ணய்யே.

86.

பூமிதனில் நான்மிருக பக்ஷிகளுக் கெல்லாம்
பொருந்துகின்ற பூரணம்போ லிருந்துகாண் குறியும்
நேமிஎல்லாம் கண்டவரை நிமிடத்தில் தாண்ட
நிச்சயமாய்க் குறிசொல்வேன் நினைவாகக் கேளும்
காமியமாம் ஆணவத்தைக் கசடெனவே தள்ளிக்
கரைகாணா மும்முறையைக் காணுங்கா ணுண்மை
சாமியென்று சாத்திரத்தைச் சளமாகப் பார்த்துத்
தயங்குவ தென்னதுகுறி நயம்புகலு மய்யே.

84. அகலி-அகலிகை, கௌதமன் மனைவி, கல்லாக ஆனவள் மீண்டு வருவாள் என்ற குறி; பராசரர்-மச்ச சந்தியை மணந்த ரிஷி; புத்ரன்-பிறகு அவள் சந்தனு வை மணக்க, சந்தனுவால் பெற்ற பிள்ளைகள்.

## 87. வெண்பா

பூமகள்போல் நன்றாய்ப் புகழாய்க் குறம்பாடி
நேமங்க ளாயிழைத்த நிட்டைசொன்னேன்—வாமங்கள்
கொண்டுகுறி கேளும் குவலயத் தோரெல்லாம்
நன்றுமுயிர் மெய்யென்று நாடு.

## 88.

மெய்யென் றறிந்து விளங்கும் பொருள்தனை
ஐயமறத் தேடுங்க ளாராய்ந்து—பைய
ஏணிப் பழுவா யிருந்துகுறி விள்ளுகிறேன்
ஊணிப்பார்த் துள்ளே யுணர்.

## 89. குறத்தி தன் இட்டதெய்வங்களை வேண்டல்.

அகவல்

சத்தி கணபதி சகோதர னாகிய
வித்தகா சண்முகா வேலா யுதனே,
பத்தியா யுன்னைப் பலகால் நினைந்திட
முத்தி தரும்பொருள் முருகா குகசரணம்,
வெற்றி தரும்மயில் மீதினி லேறிய

வள்ளி மணாளா வருக வருக,
சித்தி யாகத் தேறி மனந்தான்
எத்திசை போற்ற இருந்தென்னை யாளும்
கோல கலாபா குமரா குருபரா,
சோலை அமரர் சிறைமீட்ட சேவகா,

---

88. ஏணிப் பழுவாய் பிறர் இவள் குறிகேட்டு மேல்நிலைக்கும் போக, இவள் மட்டும் இருந்த நிலையிலேயே இருத்தலால். ஊணி - ஊன்றி.

89. அடி 27. கூளிக்கும் ஆளி - பேய்க் கணங்களை ஆள்பவளே 37. கூடல்: மதுரையில் மீனாட்சி என்பது, 38. பரத்தி-பரமாகியப் பொருள், 49. றீங்கா சனம் - ஹ்றீம் என்பது சக்திக்குரிய பீஜ மந்திரம். மாதங்கி - பார்வதி, சக்தி. 52. பூசகர் - கோயில் குருக்கள். 55. அருளே - அருள் என்று

பிற குறவஞ்சிப் பாடல்களில் குறத்தி பல தெய்வங்களையும் வாழ்த்த, இங்கு நூல் பெயருக்குப் பொருத்தமாக இக்குறத்தி சக்தியை மட்டுமே வேண்டுகிறுள்.

வேலா யுதத்தால் வென்றே அசுரரைக்
காலா யுதத்தால் கணக்கறி வித்து
மேலாக வேவந்த வேலா யுதனார்
கலியுகத் தோரென்னைக் கண்டுமே வணங்க
ஒளிசால் சுத்த வுறுபொருள் கூற

வந்துஎன் முன்னே மலரடி காட்டி
சேர்ந்தென் வெடுகை யுற்று ஆள்வாய்,
சிவசிவா சரணம் சிவசம்பு நாதா,
பவபவா வென்றசொல் பார்க்கவே ஓட்டித்
தவதவ மென்றசொல் தானாக ஈந்து,

பத்தர்கள் சித்தர்கள் பாலர் பெரியோர்கள்
உற்ற தருமம் உரைக்க வேண்டிச்
சொல்திர மாகச் சொல்மனோன் மணியே,
மித்திர மாக விளம்பிய தாயே,
அத்தர்தம் பக்கத் தமர்ந்திருந் தவளே,

காளி பகவதி கங்காள ரூபி,
கூளிக்கு மாளி குமரி மாதங்கி
தூளி நீர்த்தூளி சாம்பவி, என்மேல்
இவ்வேளையில் வந்து இருந்திடு, கைவை,
தூளி திரிபுரை சொற்கடங் காப்பொரு

ளாளியே, எங்கு மமர்ந்த காரணியே,
பூரண மான புருமைய வீதியில்
காரண மாகக் கலந்ததோர் தாயே,
வாரண மா வளர்பார் வதியே,
ஆண்டியா மீசனோ டாடிய நீலி,

தூண்டிய மாயையைத் துரத்திய சூலி,
பாண்டியன் கூடலில் பதித்திருந் தவளே
தூண்டிய நீர்மலந் தானும் பரத்தி
ஆனந்த ரூபி அதிரூப மாயி,
தானந்த வீரி சவுரி சவுந்தரி,

மோனந்த மான முக்கட் பகவதி,
வானந்த மான மாயி மனோன்மணி,

அண்டபே ரண்டத் தடுக்கது கடந்து
தொண்டர் குழாத்தைச் சூழவர வழைத்துத்
தானுற்றி வியந்து தமையுண் டாக்கும்

தேனுர்ந்த வாகி திரிபுரை யானந்தி,
மூதண்ட கோதண்ட முகடாகி நின்ற
பாதண்ட முள்ளபர மானந்த மாகி
றீங்கா சனத்தி லியங்கு மாதங்கி
தூங்காப் பதவி துணையெனக் கீந்து

தேசிகர் ஞானிகள் தித்திக்க இன்பம்
பூசக ருள்ளம் புகைமுற் றிருக்க
வைத்தோர் தேக வரைக்குறி சொல்ல
எத்திசை போற்ற இனிவா ழருளே

## 90. குறத்தி கூற்று

இப்பாடல் - நாடக வெண்பா

அருளுஞ் சிவமா மாதியோ டந்த
வரையிருளும் வெளியொளியா மெல்கைப் - பொருளால்
குறியறிவித் தோதக் குருபர நாதன்
நெறியறிவித் தென்முன்வர நில்.

## 91. குறிக்காண ஏற்பாடுகள் சொல்லச் சொல்லுதல்

தரு

பூமிதனில் நாற்சதுரங் கீறையே - அதில்
பொன்னிறமாம் நாலுவாசல் பாரையே
நேமமுடன் கணபதியைச் சேரையே - என்றும்
நிறை நாழி அவல் கடலை வாரியே. 1

வாமியெனும் வல்லபையுங் கூறையே - நன்றாய்
வணங்கியே பூரணத்தைக் கோரையே
சாமியென்ற நாலு பேருஞ் சிறையே - மெத்த
சதாசிவ பீடமா மேரையே. 2

---

91-1. ஐயே என்பது விளி.

91-2. கோரு - வேண்டிக் கொள். மேரையே - மேருவையே.

சொல்லையிலே யிருகன்று மூடுதே - நல்ல
    சூடன்சாம் பிராணிவாடை தேடுதே
கல்லையி லோசபான மோடுதே - நன்றாய்க்
    கனமாகக் கால் சுழிநின் றாடுதே
தில்லையிலே வந்தோமென்று நாடுதே - மாத்திரை
    திரள மஞ்சள் பொடிதூவ ஆடுதே
எல்லையாம் வட்டத்தில் சூடுதே - நல்ல
    ஏமமொடு நேமமுறை விடியுதே. 3

தற்சொருப தெட்சணையை வையடா - அஞ்சு
    தான பாத்திரை பானுமதிக் கையடா
மெய்ச்சுருப பச்சரிசி கொய்யடா - எங்கும்
    விளங்கு மண்டஞ் சாணி சுற்றி வையடா. 4

சிரசுதனில் அறுகெடுத்து முடியடா - நல்ல
    சீரான வல்லபைமேல் படியடா
அரசுபதி யானனின் வடியடா - இன்று
    ஆணவத்தை நிக்கியொன்று பிடியடா. 5

பொய்யுரை என்றசொல்லை நீக்கிக்கோ - நன்றாய்ப்
    போதமு தித்திடத்தைத் தூக்கிக்கோ.
மெய்யுரைதான் சொல்லுண் டாக்கிக்கோ—என்றும்
    வீணென்று வீரியத்தைப் போக்கிக்கோ. 6

மேரிருக்குந் தானமதைப் பார்த்துக்கோ—அந்த
    வீதியெல்லாம் அட்டாங்கஞ் சேர்த்துக்கோ
ஆரிருக்கும் இந்த்ரதிசை காத்துக்கோ—என்றும்
    அழகாக முச்சுடரைப் போற்றிக்கோ
நேரிருக்கு மிரவிமதி பார்த்துக்கோ—என்றும்
    நிலையாக சுழியதீத மேத்திக்கோ
பாரிருக்கும் அசவைதனைத் தேற்றிக்கோ—இன்னியல்
    பால்பழஞ் சர்க்கரைதே னூற்றிக்கோ. 7

---

91-4. இது முதல் குறத்தி தன்னை மறந்து ஆவேச நிலையில் பேசுகிறாள் அதனால்தான் அடா என்ற சொல் பிரயோகம்.

91-7. மேரு இருக்கும், இந்திர திசை - கிழக்கு

கொண்டுவந்து முன்னே வைத்துக் கும்பிடு - மது
கூட்டியே யடிதனில் பெண்பிடு
பண்டுலர்ந்த என்நீரை கண்விடு - அருள்
பாலிக்குந் தேங்காயை முன்பெடு. 8

தாம்பூலம் மருக்காகக் காட்டிவை - அந்தத்
தானந்தனில் சீனி வகையைக் கூட்டிவை
வீம்பாக அங்க வதன் நாட்டிவை - இந்த
வேளையிலே புட்பாதி சூட்டிவை. 9

வைத்தபின் னவலினுள்ள டாக்கையே - அரி
வட்டத்தில் நான்முகன் சேர்க்கையே
கைத்தலமா மாமாயை யாக்கையே - இதைக்
காணவே மாலென்று நோக்கையே
சுத்தமாஞ் சிவசலம் போக்கையே - இந்த
சூழவேருத் திரனேத்தி யாக்கையே
தக்கதைத் தலத்திலுண் டாக்கையே - யதைத்
தாக்கம யேசுவரன் சேர்க்கையே. 10

பேணியே யவ்வரை யாணிக்கொரு - வருள்
பேரண்டத் தங்கென்று ஊணிக்கோ
காணியே கோடி என் றாணிக்கோ - கரை
கண்டது சதாசிவன் பேணிக்கோ
கேணிபோ லமுதூறுந் தோணிக்கோ - அருள்
கிட்டவே வாசியை யூணிக்கோ
கோணாக நவமோரெழுந் தூணிக்கோ
கோடாறு காணியை யூணிக்கோ 11

கைமுறை தப்பாமல் நில்லையே - கழல்
கண்டது மேலத்தாழப் பல்லையே
செய்ம்முறை யற்பமொன் றல்லையே - செவி
திஷ்டிக்கு நேர்சுழி வில்லையே
ஐம்முறை பூதமும் சொல்லையே - அருள்
ஆனந்த வேதாந்தங் கல்லையே
பொய்ம்முறை யாவது மல்லையே - இது
போக்குடன் காணவும் நல்லையே 12

---

91-12. இங்குள்ள 13 கன்னிகளில் பல இரண்டிரண்டாயுஞ் சில. நான்கடியாலும் இருப்பது நோக்கத்தக்கது.

## 92. பின்குறத்தி கூறுதல்

விருத்தம்

அய்யனே அறிவுள் ளானே யருள்பெறு முத்தா னந்தா
கையதைக் கொண்டு வாணி கனகுறி யறிந்து சொல்வேன்
துய்யமாம் வெளியில் தாண்ட சொகுசுகூட் சுமங்கள் கூட்டி
மெய்யதா எண்ணி வந்தால் வேண்டிய குறிசொல் வேனே.

## 93. குறிகேட்டல்

கொச்சகம்

ஆதி சதாசிவனார்க் கன்புவும் தந்துவளர்
சாதிக் குறமகளுந் தஞ்சமாற் றாரில்வந்து
சோதிக் கருணையுடன் சொற்குரியும் மெய்த்தவமு
மாதிச் சினமதனில் நற்குறியும் சொல்வாயே.

## 94. குறத்திகூறல்

வசனம்

வாடா அய்யே, உன்னுடைய முகக்குறி, வகைக் குறி, நகக்குறி, கைக்குறி, மெய்க்குறி பொருந்திய தேகமாகத் தோணுது. அது வல்லாமல் முப்பத்திரண்டு லட்சணமும் பொருந்திய தேகத்துக்கு ஆதரவாக இச்சா சத்தி கிரியா சக்தி ஞான சத்தி, மாயா சக்தி, பஞ்ச சக்திகளு மல்லாமல் அஷ்ட சக்திகள் பொருந்தின ரேகைகளு மல்லாமல் நகார மகார சிகார வகார யகார அஷ்டாட்சரங்களுக் குள்ளிட்ட சடாட்சரங்களும் திசை தீட்சை மார்க்கங்களும் பொருந்தத் தக்கதாக, இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம், பிரத்தி யாகாரம், தாரணை தியானம் சமாதிகளுள் கொண்ட ஞாதாக்கள் குறு முனி, கோரக்கர், சட்டைமுனி, திருமூலர், பிடி நாகீசர், சன்னி சித்தர், இடைக்கடர், கமலமுனி, பிரம முனி, மச்சமுனி, நந்தீசருள்ளிட்ட தயோ தனர்களையும் முப்பத்து முக்கோடி தேவர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் அஷ்ட வசுக்களும் கின்னரர் கிம்புருஷர் முதலாகிய பெரியோர்களை வணக்கஞ் செய்யதக்கதாக நினைவிலே உன்னிக் கொண்டு வந்து கேட்டதாகத் தோணுது, ஆனால் சொல்லுகிறேன் கேளடய்யே,

---

94. பிடி நாகீசர்: சித்தர் மரபில் சொல்லப்படும் பிண்ணாக்கீசர் என்ற சித்தராய் இருக்கலாம். உன்னிக்கொண்டு - இத்தனையும் நீ மனதில் இருத்தி.

தரு

முத்தென்ற சீடனே நீ என்னிட
    முகத்துக்கு நேராக வந்து நில்
பத்தென்ற சொல்லையென் கண் முன்னே
    பார்ப்பது முன்மூல மென்று கல்
சித்தென்ற சொல்லுக்கு மன்முன்னே மந்ததி
    திரையென்ற ஓங்கார விந்தில் நில்
பித்தென்ற ஆணவஞ் சண்முன்னே - அண்ட
    பேரண்ட மானதைக் கண்டு நில். 1

நின்று முன் கைதன்னைக் கொண்டுவா - அய்யே
    நேர்ந்துக்கோ அஞ்செழுத் துண்டு பார்
பண்டுமே முக்கோணங் கண்டுவா - அதைப்
    பார்க்கச் சிகாரம தென்று கார்
சென்றுல கரிய.........துண்டுவா - வீணே
    சேர்ந்த மலம்போச் சென்று பார்
இன்றுமுன் ரேகை நன்ற தாய் - அன்ன
    மென்றாரையைக் கொண்டுவா. 2

வித்தையாம் ரேகைகள் ரெம்பையே - அந்த
    விரதத்தால் வாசியைக் கும்பையே
பத்தையா மாத்தையில் கொம்பையே - அம்
    பரத்தி லொடித்து வா கம்பையே
சுத்தக்கு ரேகையை நம்பையே - யது
    சூட்சத்தில் மாத்திரை கும்பையே
அத்தை மருமகட் கன்பையே - அரு
    ளானந்த மோனந்த முன்வையே. 3

அம்பதை நாணியில் பூட்டிக்கோ - நூற்ற
    ஐவரைக் காணியில் கூட்டிக்கோ
தும்பையை அங்கியில் மூட்டிக்கோ - நிர்த்
    தூளியில் வாசியை யாட்டிக்கோ
வம்பைரத் துண்டமாய் வெட்டிக்கோ-தங்கம்
    வாயக வுதகத்தைப் பூட்டிக்கோ

---

94-3. ரெம்பையே - ரொம்ப, நிரம்ப ஐயே, பத்தையாம் - பத்தாம், மாத்தையில் - மாதத்தில்.

சம்பதை நீ யென்று நீட்டிக்கோ—ரேகை
தான்செய்யுங் உத்திது காட்டிக்கோ 4

மண்டலந் தன்னில் காய சித்தியாய்
வாய்க்கச் செய்யும் மச்சரேகையே
அண்டர்கள் போலவும் புத்தியுண்டாம்
அதி அறிவுள்ள ரேகையே
குண்டலி யாங்குரு சத்தியால்
கொடுக்கு மிந்த ரேகை வித்தையே
ஒன்ற தொன்றாள் வாசல் பற்றியே
ஒடுங்குமாங் கண்ட ரேகையே. 5

## 95. குறத்தி ரேகையைப் பார்த்தல்

தரு

சொன்னமொழி பொய்யாமல் நிற்கையில்
தொடராகக் காணுது காண்
சூட்ச முள்ள ரேகை
வின்னமொழி பேசுகின்ற வீணரையே
வெட்டியடித் தொடுக்கு மிந்த
விதமாங் கை ரேகை
சின்னமொழி யொருநாளும் இல்லையில்லை என்றுஞ்
சேர்ந்த வரை யாதரிக்கும்
திறமாங் கை ரேகை
கன்னல்மொழி மும்மூன்று வகை ரத்தனஞ் சார்ந்து
கருத்துடனே தரித்திருக்கக்
காதல் வைக்கும் ரேகை. 1

தாரகமாம் ரேகைதனைக் கையில் பாரு
தான் சுயமாந் தருமமது
நெருக்கும் ரேகை
மாறுகுடி கொண்ட தலம் விந்தில் கோசம்
மலஞ்சேரு மமரருட
பதிரேகை அய்யே.
ஆதியென்று சொல்கின்ற பஞ் சாட்சரரேகை
அடைவாகக் காணுதுமா
நீதிபதி ரேகை. 2

## 96. குறத்தி ரேகைப் பலன் கூறுதல்

சிவயோகத்தரு – ஆனந்தக் களிப்பு

தருவிந்து நாத ஒலி தப்பாது பாரு - (தருவிந்து)

சந்தானம் வந்துற்ற தாலே உனக்கு
தாழ்வில்லை வாழ்வுண்டு சகலருக்கு மேலே
முந்தாணு மூலம் வந்ததாலே நாளும்
முத்தி யுண்டென்றும் மோச மில்லை காலே
விந்தான ஓசை கண்டதாலே - இனி
மேன்மேலும் யோகம் மெத்த விளையமுதப் பாலே
தந்தான தானமென்ற தாலே - கற்பத்
தருவே முன்னிற்கும் தண்மையத னாலே. 1

பக்குவந் தன்னிலாசான் வந்து பாலிப்பான்
சூட்சம் நீ பதறாதே அய்யே
தமக்குப் பொருள் தேற என்னில்
சதாசிவன் தாள் தோறும் தப்பாது அய்யே
முக்கலமில்லைஎன் றெண்ணி - அருள்
மோட்சகுருவந்து நன்றாய் முன்நிற்பரையே
அக்கவடந் தான்தரித்த ஈசன் - மணி
யாகிய பூரணம் அருள்வார் காண் அய்யே. 2

## 97. வெகுமதி ஈதல்

கலிப்பா

என்றுபல குறிகள் இதமா யுரைத்த பின்பு
மன்றுமாத் தூரை வாழ்த்திஞள் பூங்குறத்தி
கன்றுசதா சிவனார் களிகூர்ந்து கற்பனாள்
இன்றுபெறு வாயெனவே ஈந்தார் வெகுமதியே.

---

96-1 சந்தானம் - குருவின் உபதேசக் கிரமம்.

96-2 சதாசிவம் - முன் சொன்ன சதாசிவ குரு. அக்க வடம் - உருத்திராக்க மணி. மணிப்பூரகம் என்ற மூன்றாவது ஆதாரத்தை இந்நூல் பல இடங்களிலும் குறிப்பிடுகிறது. மணியாகிய பூரணம் - மணி பூ ராகம்.

97 கற்பனாள் - கற்புடையவளான குறத்தி, வெகுமதி-இன்றே பெறுவாய் என ஈந்தார்.

## 98. குறத்தி ஆற்றூரில் தங்குதல்

விருத்தம்

அன்புடன் குறத்தி தானும் அரிய தோர் குறிகளாகப்
பண்புடன் சூட்ச மோட்சம் பகர்ந்தபின் சித்த ரெல்லாம்
நண்புடன் வாழ்வே னென்று நலமுடன் போற்றி வாழ்த்தி
சம்புவாத் தூரில் வந்து தரித்தனள் தரித்தாள் தானே.

## 99. சிங்கன் சிங்கியைத் தேடுதல்

தரித்ததோ ராத்தூர் தன்னில் தங்கியே இருக்கும் நாளில்
கருத்துளே சிங்கன் தானும் கனகுகை குவடு தோறும்
உருத்தமாஞ் சிங்கி தன்னை உரிமையாய்த் தேடி வாடித்
தரித்துரி யாற்றூர் தன்னில் துயர்ந்தவன் தேடி னானே.

## 100. கண்டோர் வினவ சிங்கன் கூறுதல்

தேடின சிங்கன் தன்னைச் சிதம்பரத் திருந்த பேர்கள்
ஊடின மாகப் பார்த்து உச்சித முறையைக் கண்டு
வாடின மயக்க மேது வந்ததோர் வகைசொல் லென்ன
நாடிப்பின் சொல்வே னென்று நடனம் தானாடினே.

## 101. சிங்கன் தோன்றுதல்

தரு

தெந்தின தின தின்னா-நொண்டிச் சிந்து!

அக்குட னர வணிந்த-தில்லை
அம்பலத் தாடுஞ் சதா சிவன்முன்
தக்கிட தரிகிட தொந்தோ மென்று
தாண்டிய சிங்கனுந் தோன்றி னானே. 1

மைக்குழலார் பாகர்-தாண்டவ
வளம் புரியுஞ் சதா சிவன்மால் (தக்கிட)

---

98. சம்பு-சிவபிரான். தரித்தனள்-தங்கினாள்.

99. துயர்ந்து - தொடர்ந்து

100. சிதம்பரம் - இது ஆற்றூர் முத்தானந்தர் குறவஞ்சியே யாயினும், சிவபரம்பொருள் நாட்டத்தால் சிதம்பரத்தலம் சிறப்பாக இடம்பெறுகிறது.

தொக்குடன் சூட்சமதில் ஓரெழுத்
துருவாய் நிற்குஞ் சதாசிவன்முன் (தக்கிட)
சொக்குடன் பொடி தூவி-ஆடவர்
தொழில்காணப் பரைவெளி காண (தக்கிட) 2

கருவியாயம் பட்சிகளை-ஒரு
கண்ணியி னாலேபிடித் தடக்கி
அருவியாங் குணந் தேசிச்-சித்
தானந்தச் சிங்கனுந் தோன்றினானே. 3

சருவிப் பணம் பறிக்குஞ்-சமய
சண்டாள ரென்ற சவங்களைத்தான்
வெருவிப் பயந்தோடச் சபைவைகும்
வேதாந்தச் சிங்கனுந் தோன்றினானே. 4

சைவங்க ளென்று சொல்லி - உலகத்தைத்
தயக்கு விக்குஞ் சண்டாளர்களை
செய்யு முறைக் கையாலே - சோடு வைக்குஞ்
சிங்காரச் சிங்கனுந் தோன்றினானே. 5

தாய்தமர் தந்தை சுற்றம் - தனைவிட்டுத்
தயங்கியே ஆணவத் தலைகுவாரை
நாயவ ரென்று சொல்லும் விந்து
நாதாந்தச் சிங்கனுந் தோன்றினானே 6

தலைமயிர் சவரஞ் செய்து ருத்ராட்சத்
தாவடம் வெகுவாய்த் தான் தரித்து
உலகினிற் சமையரைத்தான் தெண்டித்து
உதைக்கின்ற சிங்கனுந் தோன்றினானே. 7

ஆணவ காமிய மாமாயையில்
அலைந்தே உலையுஞ் சண்டாளர்களை

101-3. சிங்கன் பெயர் - சித்தானந்த சிங்கன்.

101-4. சமயம் என்றது இங்கே போலிச் சமயம்.

101-6. தாய்தந்தை சுற்றத்தைப் பேண வேண்டும்என்பது சிங்கன் கருத்தாகிறது.

101-7. தரித்து - தரித்தான் சிங்கன். சமைபரை - போலிச் சமயரை.

101-8. மூன்று மலங்களும் இங்கு சொல்லப்பட்டன, அறிவாளால் - அறிவு என்கிற வாளால்.

தானுறும் மரிவாளால் வெட்டித்
    தறிக்கின்ற சிங்கனுந் தோன்றினானே. 8

கல்லதைச் செந்துணியில் - முடித்துக்
    கழுத்தில் கட்டியே கலங்கு வாரைச்
சொல்லதை யென்று சொல்லி வதைக்குஞ்
    சுகக் கரர சிங்கனுந் தோன்றினானே. 9

தன்னையுந் தலைவனையும் அறிந்து
    தணலும் பொறியும் போலிருந்து
மின்னையு மணிந்து கொள்ளும்-பெரியோரை
    வேண்டிய சிங்கனுந் தோன்றினானே. 10

பெண்ணினா லாவதென்ன வென்று
    பேசித் திரிந்த பேர்களுட
கண்ணிலும் விழியாமல்-ஒட்டக்
    கருத்துள்ள சிங்கனுந் தோன்றினானே. 11

அண்ண னகர்தனைப் போலே லேபனம்
    அறுத்தோ மென்கின்ற அசடர்களை
ஒண்ணாக மெங்கேயென்று சொட்டுப் போட்
    டுருக்கிய சிங்கனுந் தோன்றினானே. 12

போகரைப் போலே பெண்மேல்-மோகம்
    புரிந்து புணர்ந்த போதர்களை
மாதரைப் பாலையுண்டு அனுதினம்
    வணங்கிய சிங்கனுந் தோன்றினானே. 13

புளியுட னோடதுபோல் தாளாய்ப்
    பொருந்தியும் பொருந்தாப் புதுமையைப் போல்
வடிவுட னில்லறத்தில் வாழ்வோரை
    வணங்கிய சிங்கனுந் தோன்றினானே. 14

முன்சொன்ன சுகபோகம் பித்தங் கற்பமாம்
    முற்றிலும் அனுபவித் தேயிருந்து
பின் சொன்ன ஏகாந்தம் பெறுமந்தப்
    பேரண்டச் சிங்கனுந் தோன்றினானே. 15

---

**101-11.** இந்தச் சிங்கன் பெண்ணையும் போற்றுவான் என்று தெரிகிறது.
**101-14.** இல்லறத்தில் இருந்து நாலும் பெறலாம் என்ற கருத்து.
''புளியம் பழ மொத்திருந்தேன்' என்பது திருவாசகம்:

மண்ணும் புனல்கனலும் வளியோடு
வான வெளி யொளியில் வணங்கு வாரை
என்னுட கண்ணுதலில் தோன்றச் செய்
யுத்தமச் சிங்கனுந் தோன்றினானே. 16

சட்டை முனி இடைக்காடர் ரோமரிஷி
சார்வாய்ப் பிடிநாக் கீசருடன்
சிட்டையாங் கமலமுனி தீட்சை
செலுத்திய சிங்கனுந் தோன்றினானே. 17

குருமுனி கோரக்கரும் காலாங்கி
கொங்கணர் தாள் பெறுமுறை துய்யரை
உருமுனியாய்ப் போற்றும் நல்ல
உச்சிதச் சிங்கனுந் தோன்றினானே. 18

சதாசிவ மூர்த்தி எனும் எங்கள்
சம்புவள ராற்றூரில்
அதா பித் மில்லாமல் முச்சுட
ராய சிங்கனுந் தோன்றினானே. 19

## 102. சிங்கனை ஊரார் வினவுதல்

விருத்தம்

ஆடின குறவன் தன்னை ஆற்றூரார் மகிழ்ந்து பார்த்து
வூடின மாக நின்று உச்சித நடனம் செய்தாய்
தேடின குறத்தி தானும் செணத்திலே வருவாள் நீயும்
கூடின குலமு மூரும் கூறுவா யென்றா ரன்றே.

## 103. சிங்கன் கூறுதல்

என்றதோர் சொல்லைக் கேட்டு இருந்ததோர் சிங்கன் தானும்
நன்றது வென்றுசொல்லி நலமுட னூரும் பேரும்
சென்றதோ ருலகுக் கெல்லாம் திகிரி கொண்டேகு வாரும்
மன்றினி லுரைக்கக் கேளு வளர்சதா சிவனார் நாட்டில்.

## 104. சிங்கன் தன் பெருமையுரைத்தல் - தரு

தெந்தினத்தின தெந்தினத்தின தெந்தினத்தின
தெந்தினத்தின தினனா

101 - 17 பிடிநாக்கீசர் - 94 பார்க்க

அண்டர் மெச்சிய பூரணக்கக்
காமென வளந் தோருமனத்
தொண்டு செய்தேவர் முனிவர் வாழும்
சோம கிரியில் குறவன் நான். 1

பண்டு பதத்தை யுண்டெந் நாளும்
பற்றியே மனம் உத்தியால்
அண்டர் குருவைக் கண்டு தொழும் நல்
லாற்றூர் வாழும் குறவன் நான். 2

மூல வங்கிச பாலனார் வளர்
முத்தற் குகந்த புத்திரன் - அதுக்
கால வங்கிச மாமணி ஞானங்
காட்டு மாற்றூர் குறவன் நான். 3

அறிவானந்த ஐயர் பதத்தில்
அன்பு உகந்து இன்பமாய்க்
குறியிரு வுரிக் கூட்டிச் சேர்க்கு
முல்லாச ஆற்றூர்க் குறவன் நான். 4

முற்று மானந்த முத்தர் பதத்தில்
முற்றுமே மனம் வைத்த நான்.
அத்தி முகன் பதம் இச்சித் திருந்த
ஆற்றூர் வாழுங் குறவன் நான். 5

சஞ்ச லப்படும் சமய மாண்பரைச்
சார்ந்திருந் தரி வாளினால்
வெஞ்சி னங்கொண் டவரைத் துணிந்து
வெளியொளி காணுங் குறவன் நான். 6

நாற் பத்துமுக் கோண சக்கரம்
நலமாய் வெள்ளைத் தகட்டினில்
ஆற் புத்தியுடன் பூசை செய்கின்ற
அய்யரைப் போற்றுங் குறவன் நான். 7

---

104-7. நாற்பத்து முக்கோண சக்கரம் - சத்தி சக்கரமாகிய ஸ்ரீ சக்கரம்

அட்ட சத்திகள் சூழும் மனோன்மணிக்
கன்பு கூர்ந்து இன்பமாய்ச்
சட்ட முடனாற் றூரினில் வாழுஞ்
சதாசி வனுட குறவன் நான். 8

பத்தாதி சித்தர்கள் முத்தரைப்
பரிகாசஞ் செய்கின்ற பயல்களைப்
பத்திர மதாய்ப் பல்லை யுடைத்துத்
தலையைத் திருகும் குறவன் நான். 9

மடபதி யோரைத் தூஷணித்துப் பொய்
வார்த்தை சொல்கின்ற வம்பர்கள்
பட அவர் பதி நாசமாய் விடப்
பார்க்கு மந்திரக் குறவன் நான். 10

மூன்று மண்டலம் முட்டுந் தூணதில்
முளையில் பாய்ந்து அணுவதாய்த்
தாண்டி மண்டலங் கடந்த சித்தர்மேல்
தயவுள்ள ஆற்றூர்க் குறவன் நான். 11

கடிகைக் குக்கலை மானைப் பிடித்துக்
கருத்துடன் விதித் திருத்தியே
துடிகை யுடைனே பொசிக்கும் மந்திரத்
துறையு மாத்திரக் குறவன் நான். 12

## 105. மழை பெய்தல்

விருத்தம்

இப்படிப் பாடிப் பாடி யிருக்கின்ற நேரந் தன்னில்
நற்படி மேகந் தானும் நயமுடன் குறிகள் மின்னி
சொற்படி தவறாமல்தான் சொரிந்து பூமாரி பெய்து
மெற்படி சிங்கன் கண்டு மேன்மேலும் பூரித் தானே.

---

104-11. மூன்று மண்டலம்-சந்திர சூரிய அக்கினி மண்டலங்கள். முட்டுந்தூண்-முட்டிக் கொண்டு செல்லும் கழு முனை நாடி. இவ்வரிகள் விநாயகர் அகவலிலிருந்து எடுக்கப்பட்டது ''மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின் நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி,'' அடி 39-40.

105. மழை பெய்தல் என்பது குறவஞ்சிப் பாடல்களில் காணாத புதுமை.

### 106. எங்கும் நீர்மூழ்கிப் பட்சிகள் ஏங்குதல்

களங்க மதில்லா மாரி காசினி எங்கும் பெய்ய
குளங்களும் வாவி தோறும் குறையறப் பெருகி மோத
வளந்தரு மாற்றூர் வாவி மறுகாலும் வெட்டி யோட
யௌங்கமிழ் திரண்டாற் போலே ஏங்குதே பட்சி யெல்லாம்.

### 107. சிங்கன் கண்ணி கொண்டு வருதல்

பட்சியைக் கண்டு சிங்கன் பரதவித் தன்ப தாக
நிச்சய மாக எங்கே நிலைக்குது பட்சி என்று
உச்சியின் மேலே பார்த்து உருகியே நிற்கும் போது
தற்செயல் குளங்கள் வாவி தானெலா மிருக்கக் கண்டு
இச்சையாய்க் குறவன் கண்ணி எடுத்தவன் தூக்கித் தானே.

### 108. சிங்கன் பாங்கனை அழைத்தல்

ஒருத்தனா லாகா தென்று உறுபரிச் சின்னன் தன்னை
அறிவினா லழைத்துச் சிங்கன் அன்புடன் மகிழ்ந்து பூரித்
துறுதியாய்க் கண்ணி சேர்த்துக் கையுட னெடுத்து நன்றாய்க்
கருதின பட்சி சிக்கக் கண்ணியை எடுத்திட் டானே.

### 109. கண்ணி வைத்தல்

தரு

திருத்தடையே - கண்ணிகள் சேரத்
திருத் தடையே.

திருத்தடையே சதா சிவன் தன்னுட
சிங்கார வாவிக ளெங்கும் பரந்து
வருத்த மெய்ஞ்ஞான பட்சிக ளெல்லாம்
வளைந்தந்தக் கூட்டக் குளந்தன்னில் (திருத்) 1

106. நீர் வெள்ள மெடுத்த படியால் பறவைகள் தங்க இடமின்றி ஏங்குகின்றன.

107 இவ்வறு சீர் விருத்தத்தில் ஐந்து அடிகள் காணப்படுகின்றன.

109. சிங்கன் தன் பாங்கனுக்குக் கூறுதல். திருத்து அட ஐயே - நன்கு கண்ணியை வை.

முக்கூட்டுக் கண்ணியை முன்னே எடுத்துக்கோ
முன்புள்ளான கண்ணியைப் பின்னே எடுத்துக்கோ
ஒக்கிட்ட கண்ணியை வெவ்வேறு கூறாய்
ஒருமித் தெடுத்துக் குறிவைத்த கண்ணியைத் (திருத்) 2

உள்ளானுக் கங்கே ஆணியை வைக்கின்ற
உற்பனக் கண்ணியைத் தப்பித மில்லாமல்
புள்ளானுக்குப் புறவளக் கண்ணியைப்
போகத்தாய் வையாமல் சாக்ரதையாகத் (திருத்) 3

## 110. சிங்கன் குளங் கண்டு கூறுதல்

விருத்தம்

கண்ணியைத் திருத்தும் போது கருவியாம் பட்சி சேரப்
புண்ணிய வானாம் எங்கள் புகழ்சதா சிவன்தன் நாட்டில்
பண்ணிய நன்மை யோகம் பார்தனில் விளங்க வாவி
தண்ணிகள் பெருக்காய் மூலத் தலைக்குளங் கண்டே னய்யே.

## 111. பறவைகள் இரை தேடி வருதல்

தரு

கண்டேன் நானய்யே - பறவையைக்
கண்டேன் நானய்யே.

கண்டேன் நானய்யே சதாசிவ மூர்த்தி
கருதுய ராகாச வட்டமா மறவியில்
மண்டூகந் தேடிய மண்வேட் டகத்தாரா
மணித்தாரா ரெண்டும் மயங்கித் தியங்கி
முயங்கித் திரிய (கண்) 1

கர்த்தனா மெங்கள் சதாசிவ மூர்த்தி
கருணைச் சிலம்பி னருணைத் தொழில்போல்
அர்த்தமாம் பட்சிகள் சேரவே கத்தி
அருமைப் பசிக்கு ஒருமித் திரை தேடக் (கண்) 2

---

110. உள்ளான், புள்ளான் - பறவை வகைகள்,

111-1. மண்டூகம் - தவளை, அகத்தாரா, மணித்தாரா-தாரா என்கின்ற பறவை வகைகள்.

முப்பத்து முக்கோடி தேவர்கள் போற்றும்
மூலச் சதா சிவன் பாலக் குளத்தினில்
நாற்பத்து நாற்கோடி யுள்ளானுங் கூடி
நடந்து பறந்து தொடர்ந் தவை வரக் (கண்) 3

கொக்குடன் வக்காவும் செங்கால் நாரையும் முக்
கூட்டுத் தயிலானும் மாட்டுக் குருகுடன்
அக்குடன் வட்டத் தாலாவும் புள்ளுடன்
ஆடிப் பறந்தோடி மூலத்திரை தேடக் (கண்) 4

## 112. பறவைகள் திரிதல்

தற்சொருபங் கொண்டே சதாசிவ னார்தம் நாட்டில்
மிச்சுருபப் பட்சி விதம்வித மாய்த்தான் கூடி
தற்சொருபங் கொண்டே தானாடி யிரை தேடி
அச்சொருப மேயெழும்பி ஆடினதைப் பாருமையே

## 113. பறவைகளைப் பார்க்கச் சொல்லுதல்

தரு

பாரு பாரையே பறவையைப்
பாரு பாரையே
பாரு பாரையே சதாசிவ மூர்த்திக்கு
பச்சமதுள்ள யிச்சம பாஷையை
ஆறு புரைந்தாலும் மச்சமும் படராமல்
ஆடிப் பறவைகள் ஆடித் திரியுது (பாரு) 1

பாரு பாரையே பரா பரந் தன்னிலே
பனிரெண்டு மீரெட்டாய்ப் பாய்ந்து பறவைகள்
சீறு பாரென்று தணிந்து உயர்ந்து
சிறகடிக் கொண்டு பறவைக் கடிக்கண்டு (பாரு) 2

---

111-4. கொக்கு, வக்கா, செங்கால் நாரை, தயிலான் மாட்டுக் குருகு, அக்குவட்டத்தாலா - கொக்கின் இனங்களான பறவைகளே. 'செங்கால் நாரை' சத்தி முற்றப் புலவரை நினைவூட்டுகிறது.

113-2. சீறு பாறு - பறவைகள் பறந்து வந்து நெருங்கும் ஓசை

சித்தர்கள் முத்தர்கள் சிந்தையிலே தினம்
வற்றும லெந்நாளும் வாழுஞ் சதாசிவன்
உற்ற மூலக்குள வாவியிலே தினம்
ஓடிப் பறவைக ளாடித் திரியுது. (பாரு) 3

## 114. பறவைகள் மேய்தல்

கலிப்பா

பாரு பாரையே பஞ்சாக் கரமிருந்த
சீராக ஆற்றூர் செழித்தகுளம் வாவியெல்லாம்
நேருகூ ருய்க்கலந்து நெருங்கியிடை பின்சுழியில்
நீறுபா ருகியேகால் நின்றுவெளி மேயுதையே.

## 115. மேய்தலைக் கூறுதல்

தரு

பல்லவி

மேயு தடையே - பறவைகள்
மேயு தடையே (மேயு)

அனுபல்லவி

மேயு தடய்யே சதா சிவமூர்த்தி
மெச்சுங் கால வட்டத்தில் கிச்சுக் கிச்செனவே (மேயு)

சரணம்

மண்டலம் மெச்சும் சதாசிவ மூர்த்தி
மணிக்குளந் தன்னில் கிணிக்கிணி எனவே
தொண்டர் குழாங்கள் வடவரை தாண்டிச்
சுக்கிலப் பட்சிகள் மிக்க மூலத்தினில் (மேயு) 1

சதாசிவ மூர்த்தி விளங்கிய மாவடித்
தாள் வட்டச் செய்யினில்மேல் வட்டஞ் செய்து
உதாசுகள் போற்றும் பனிரெண்டு பட்சிகள்
உச்சித மாகவே யிச்சித் திரை தேடி (மேயு) 2

கொங்கண ருள்ளிட்ட நாதர் சதா சிவன்
　　கோட்டாறு காணியா மேட்டு மடச்செயில்
வங்கண மாகவே ஆனைக்கா லுள்ளானும்
　　வந்து வந்து நிரை சேர்ந்து சேர்ந்து கொண்டு (மேயு) 3

தக்கத் திரிகிட தொந்தோ மெனவே
　　தாண்டுஞ் சதாசிவன் தரணி வட்டந்தனில்
கொக்குடன் நாரைகள் கும்புகும் பாய்க்கூடி
　　குக் கூ வென்றுங் கிக்கீ யென்றும் (மேயு) 4

அம்பர வீதியி லாடுஞ் சதாசிவன்
　　அத்தி நெடுங் கனிலுத்திய தாகவே
இன்ப மெனும் மழு வாங்கியும் நீர்க்காக்கை
　　எக்களித்தே மெள்ளக் கிக்கிக்கி என்று (மேயு) 5

## 116. கண்ணி குத்தச் சொல்லுதல்

கலிப்பா

மேயுங் குளந்தேடி மெய்ஞ்ஞான பட்சிகள் தாம்
பாயும் பராபரத்தில் பஞ்சாட்சரம் நினைந்து
ஆயுங் கலைவேதம் அய்யர்திரு நன்னாட்டில்
தோயுமதி வாவிதன்னைச் சூழ்ந்துகண்ணி குத்தடய்யே.

## 117. கண்ணி குத்துதல்

தரு

**கண்ணி** குத்தடய்யே பறவைக்குக்
**கண்ணி** குத்தடய்யே.

**பண்ணி** யன்னந்தேடிக் காணாச் சதாசிவன்
　　பார்த்து மனமகிழ்ந் தேத்தமாம் வாவியில்
எண்ணிக் குருகன்னந் தொண்ணூற் றாறும்
　　இசைந்தந்தப் பட்சி அசைந்தொன்றும் போகாமல் 1
(கண்ணி)

---

115-3. கோட்டாறு - பக். 22 அடிக்குறிப்பு பார்க்க. மடச்செய் - ஒரு வயல் ஆனைக்கால் உள்ளான்-பறவை விசேடம்,

117. பண்ணி - பன்றி என்பதன் மரூஉ, குத்துதல்-வலையைத் தரையில் முனைகளால் செருகி வைத்தல்.

மூவளக் கண்ணியை முன்னே எடுத்து நீ
முச்சந்தி வீதியி லச்சமில் லாமல்
காவளக் கண்ணியை மேலதா யேற்று
கருவியாய் பட்சி வெருவாமலே சிக்கக் (கண்ணி) 2

ஆணவ காமிய மாயை எனும் பட்சி
அங்கங்கு ஓடியே இங்கெங்கு மீளாமல்
தாணுவாங் கண்ணியைக் கோரைக்குள் ளூன்றித்
தக்கதோர் முக்கண்ணி ஒக்க நிரைத்து (கண்ணி) 3

ஒவ்வொரு கண்ணியை யுள்ளானுக் கூணிக்கோ
உயர்ந்தோர் கண்ணியைப் புள்ளானுக் கூணிக்கோ
அவ்வொரு கண்ணியை அங்கெங்கு ஊணிக்கோ
ஆகாப் பறவைகள் எல்லாம் காணிக்கோ (கண்ணி) 4

### 118. சின்னன் கண்ணி குத்தல்

கண்ணிகுத் தென்று சிங்கன் அமைதாய்ச் சொல்லக் கேட்டு
இண்ணைக்குத் தாவதாச்சு எனப்பரி சின்னன் தானும்
நண்ணியாம் பட்சிக்க நாசமாம் பட்சி போக
எண்ணிக்கை யாகக் கண்ணி எடுத்தவன் குத்தினானே.

### 119. பறவைகள் சிக்குதல்

குத்தின பின்பு சின்னன் குணமுடன் சிங்கன் பின்னே
பத்திரமாக நின்று பார்த்தவன் மனது பூரித்
துத்திரமாக நன்றாய் துலக்கமாய் மறைவில் நிற்க
கத்தின பட்சி சேரக் கண்ணியில் சிக்கிற் றய்யே.

### 120. கெம்பாதே எனல்

தரு

கெம்பாரையே பொறு பொறு
கெம்பா ரையே (கெம்பா)

---

118. சின்னன் - இந்த நூலில் குறவனுடைய பாங்கன் சின்னன் எனப் படுகிறான்.

கெம்பாரையே சதா சிவமூர்த்தி
கிருபை யகாரப் புருமையச் செய்யினில்
கெம்பாய் வந்தெனக் கொருபங்கு
சிங்கிக் கொருபங் குனக்கொரு பங்குவை. (கெம்பா) 1

சத்த ரிஷிகள் தினந்தினம் போற்றும்
சதா சிவன் கூவட்டத் தாபித மில்லாமல்
உற்ற பறவைகள் மென் மேலும் வந்து
உனக் கெனக் கென்று ஊணத் திரியுது (கெம்பா) 2

பத்தர்கள் சித்தர்கள் பணியுஞ் சதாசிவன்
பண்பா யகார விருத்தியாம் வட்டத்தில்
மெத்தப் பறவைகள் கும்பு கும்பாய்
விரைந்து விரைந்து அருந்தியே மேயுது (கெம்பா) 3

அத்தற்கு முக்கண துரியதோர் வட்டத்
தந்தமாஞ் செய்யினில் சொந்தம தாகவே
பித்தர் கடுங்கோரை சத்தப் படாமலே
பேசாமலே நின்று கூசாமல் மேயுது (கெம்பா) 4

## 121. பறவைகள் சிக்குதல்

விருத்தம்

மேயுற பட்சி தன்னை வெகுவித மாகப் பார்த்துக்
காயுற கண்ணிக் குள்ளே கருவுட னொதுக்கிச் சிங்கன்
சீயுறு சிவனைப் போற்றி சிந்தித்தே நிற்கும் போது
பாயுறு பரிசத் துள்ளே பறவைகள் சிக்கிற் றய்யே.

## 122. இதுவுமது - தரு

சிக்கினு மய்யே பறவைகள்
சிக்கினு மய் யே.

சிக்குனுமய்யே சதாசிவ மூர்த்தி
சிந்தை மகிழ்ந்துள தந்தமாஞ் செய்யினில்
பக்க மடைக்கும் பாலத்துக்கு மொன்றாய்ப்
பரந்து தொண்ணூற் றாறு பட்சிகள் (சிக்) 1

---

கெம்பாரையே - கெம்பாதே அட ஐயே. கெம்புதல் - உரத்துப் பேசுதல் உரத்துப் பேசினால் சத்தம் கேட்டுப் பறவைகள் பறந்து விடும்.

122-1. சிக்கினும்-சிக்கின. தொண்ணூற்றாறு பட்சிகள் என்றது-தொண்ணூற்றாறு தலங்களே; மடை - நீர் பாயும் வாய்.

ஆதியோ டந்த மாகுஞ் சதாசிவன்
அன்பு உகந்து இன்பமாம் வட்டத்தில்
சாதிகள் வெவ்வேறே கூறாய்ப் பிரிந்து
சண்டாள பட்சிகள் ஒன்றதிற் போகாமல் (சிக்) 2

சரியை கிரியை எனும் பட்சிகள் ரெண்டும்
சார்ந்த சிவயோகக் கண்ணியில் தப்பாமல்
இருதய மாகவே மாறாது பார்நின்று
எக்களித்தே மெள்ள முக்கனிப் பாலுடன் (சிக்) 3

அந்தத் திருந்திய அன்றிலுந் தாராவும்
அன்னமும் புள்ளும் அறிவுநீர்க் காக்கையும்
சொந்தக் குருகுஞ் சம்பா நாரையும்
சுற்றிப் பறந்தந்த சத்திக் கண்ணிக் குள்ளே (சிக்) 4

## 123. பறவைகள் தப்ப எண்ணி இழுத்தல்

கலிப்பா

அந்தப் புகழ்பெரிய ஆற்றூர் வளநாட்டில்
விந்தைமணிப் பொய்கைதனில் மேயுங்குல பட்சிகள்தாம்
தொந்தம் மிகவாகித் தொட்டகண்ணிக் குள்ளேசிக்கி
இந்தமதி பார்த்துமனம் ஏகஇழுக் குதய்யே

## 124. இதுவுமது

தரு

இழுக்குதய்யே - பட்டுக் கொண்
டிழுக்கு தய்யே (இழு)

இழுக்கு தய்யே சதாசிவன் தன்னுட
இங்கித வாவியில் பொங்கத மாகவே
அழுக்கொன்று மில்லாப் பட்சிகள் சேர
அகப்பட்டுக் கொண்டு யுகப்பட்டோமென்று (இழு) 1

---

122-2. தான் நினைத்தபடி பட்சிகள் சிக்காமையால் சண்டாளப் பட்சிகள் என்கிறார்.

124. பட்டுக் கொண்டு - சிக்கிக் கொண்டு

124. யுகப்பட்டோம் - கட்டுப்பட்டோம்.

பாலத்தில் நில்லாமல் பாய்ந்துதான் போனோமோ
பட்சிகள் யாவுமே மிச்சமாய் மாண்டோமென்
றாலித்து ஒன்றுக்கொன் றுண்மைகள் பேசியே
அச்சப் படாமலே விச்சித்திரம் பேசியே (இழு) 2

ஆட்டுப் பசிக்கு இரைதேடி மாமதி
அந்தமாம் வாவியில் ஓடித் திரியாமல்
ஓட்டுக் குறவன் ஒடுக்கி மடக்கிய
ஓட்டுக்குள் ளேயகப் பட்டுக்கொண் டோமென்று (இழு) 3

பெண்டாட்டி யாசையாலே இரை தேடிப்
பிள்ளை யாசை யாலே குளந்தேடிக்
கொண்டேறி வந்த தினாலே யகப்பட்டுக்
கொண்டோ மெனவே திட்டாட்ட மாய்ப்பட்சி (இழு) 4

## 125. பறவைகளை எடுத்தல்

விருத்தம்

சிக்கிய பட்சி சேரச் சின்னனும் சிங்கன் தானும்
பொக்கிச மாக வோடிப் புளகமுற் றெடுத்து நன்றாய்ப்
பக்கிச முனிவர்க் கெல்லாம் பரந்தவன் கொடுத்து மீளத்
தக்கிய பட்சி சேரச் சமைக்கவென் றெடுத்தா னய்யே.

## 126. சிங்கன் செயலைக் கண்டு சின்னன் வருந்துதல்

எடுத்ததோர் பட்சி தன்னை இணையொக்க அருகே போட்டு
அடுத்ததோர் சின்னன் தன்னை அன்புடன் சிங்கன் பார்த்துக்
கடுத்ததோர் மொழிபே சாமல் காரிய வசம தாக
விடுத்ததோர் சிங்கன் தன்னை வேண்டியே வருந்தி னானே.

---

124-2பேசி - பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொள்ளுதல் விச்சித்திரம் - விசித்திரம்

124-4 மக்கள் இயல்பை பறவைகள் மேலேற்றிச் சொல்கிறார்.

125 குறவனாகிய சிங்கனுக்குத் தோழன் பெயர் குறவன், நூலன், புலையன் என்று வெவ்வேறு விதமாகக் குறவஞ்சிகள் கூறும். இந்நூல் கூறுவது சின்னன் (சின்னான்) என்ற பெயர். இந்த முனிவர்களெல்லாம் மாமிச பட்சணம் செய்வார்கள் போலும்.

126 இணையொக்க - ஆணும் பெண்ணுமாயிருந்த இணைப் பறவைகளைப் பார்த்த அளவில்

ஆணும் பெண்ணுமாயிருந்த பறவைகளைப் பார்த்த அளவில் சிங்கனுக்குத் தன் மனைவி சிங்கி நினைவு வந்துவிட்டதென்பது ஒரு நயமான காதற் செய்தி, இந்த முறையில் இது வேறு நூல்களில் காணப்படவில்லை.

## 127. சிங்கன் சிங்கியை எண்ணி வருந்துதல்

தரு

சிங்கியைக் காணேனே பரிச்சின்னா
சிங்கியைக் காணேனே - என்

சிங்கியைக் கூட்டிவாடா பரிச்சின்னா
தீர்க்க சித்தி தருவேன் - என்
பங்கியைக் கூட்டி வந்தால் - பரிச்சின்னா
பால் பழம் நான் தருவேன். 1

பார்த்துக் கூட்டி வந்தால் - பரிச்சின்னா
பஞ்சாட் சரஞ் சொல்லுவேன்
சேர்த்துக் கூட்டி வந்தால் - பரிச்சின்னா
செகசால வித்தை சொல்லுவேன் 2

கூட்டிக் கொண்டு வாடா - பரிச்சின்னா
கும்பிடுவே னுன்னை நான்
காட்டிக் கொடுத்தை யானால் - பரிச்சின்னா
காயசித்தி சொல்வேன் 3
ஆசைச் சிங்கி யடா - பரிச்சின்னா
அன்பாகக் கண்டாக்கால்
பாசை பயிற்று விப்பேன் பரிச்சின்னா
பட்ச முன்மேல் வைப்பேன் 4

கூசாமல் கூட்டி வந்தால் - பரிச்சின்னா
கோகர்ண வித்தை சொல்வேன்
வாசாம கோச ரத்தை - பரிச்சின்னா
வாழ வெனக் கூட்டி வாடா. 5

யோகம் பெண்ணான தடா - பரிச்சின்னா
ஓர் சுழி சேர்ந்தாக்கால்
ஆகப் பொன் தங்கமடா - பரிச்சின்னா
ஆயிரத் தெட்டு வர்ணம். 6

---

127-1 பரிச்சின்னன் என்பதும் சின்னன் பெயர்.

127-4 பாசை பயிற்று விப்பேன் - பல பாஷை கற்பிப்பேன்.

124-5 கோகர்ணவித்தை - பசுவைப் போலக் காதைமட்டும் அசைக்க வல்லதாகிய வித்தை. வாசாம கோசரம் - சொல்லால் வருணிக்க முடியாதவள்.

மெத்த ரகசிய மாச்சு—பரிச்சின்னா
மென் மேலுஞ் சித்தாச்சு
உற்றதோர் சிங்கி தன்னை—பரிச்சின்னா
உண்மையாய்க் கூட்டிவாடா. 7

## 128. பரிச்சின்னன் சிங்கியைத் தேடிச் செல்லுதல்.

கலிப்பா

என்று பலவார்த்தை இதமாய் எடுத்துரைத்து
நின்றுபரிச் சின்னன்முன்னே நேரொத்துச் சொல்லியபின்
நன்றெனவே தேட நலமான ஆற்றூரில்
இன்றுபரிச் சின்னன் ஏகினான் காணுமய்யே.

## 129. சிங்கன் சிங்கியைத் தேடுதல்

தரு

சிங்கியைத் தேடினேனே பரிச்சின்னா
சிங்கியைத் தேடினேனே.

அங்கியைத் தேடிடி அணுவைப் பிடித்து
ஆதியோ டந்தம தாகியே நின்றதில்
வங்கியைக் காட்டிச் சிங்கியைக் கூட்டி
வருகுற மென்று தருகிற வழியில் (சிங்கி) 1

சொரூப சித்தியாம் மணியினால் லோகம்
சுத்தியே அண்ட முத்தியே பெற
அருவ சித்தி ஆற்றூரை நாடி
ஆடிப் பாடித் தேடி வாடி (சிங்கி) 2

சிதம்பரத் தினிலி ருந்தவசு செய்யும்
சித்தர் முத்தர் களத்தரைப் போற்றி
இதம் பாத்தினிற் கண்டு தொழுது
இணங்கி வணங்கி இருந்துமே சின்னன் (சிங்கி) 3

கண்டு முனிவர் தொண்டு செய்கின்ற
காரண மாந்திருப் பூரணந் தன்னிலே
நின்றுட தத்திலே கண்டு பிடித்து
நேரொத்துப் பாரொத்துச் சீரொத்து நன்றாய் (சிங்கி) 4

---

129 வங்கி - வங்கி என்ற கையணி

## 130. சின்னன் சிங்கியைக் கண்டு அழைத்து வருதல்

விருத்தம்

சிங்கியைக் கண்டு சின்னன் சீக்கிரத் தோடிச் சென்று
தங்கியே வாரு மென்று ... ... ... ... ...
... ... ... ... ... பரிவுடன் சினேகன் கிட்ட
பொங்கியே மனங்கள்தேற புகழ்சொல்லிக் கூட்டி வந்தான்.

## 131. சிங்கன் அவளைக் காணல்.

வந்ததோர் சின்னன் தன்னை மாமணிக் குறவன் பார்த்துக்
கந்தமாம் வனங்கள் தேடிக் கயிலைமா மலைகள் தேடி
விந்தமாற் றூரை நாடி விரைந்துநா னோடி வந்தேன்
எந்தமா லிடத்தில் நின்றாய் எனக்குரை சிங்கி யாரே.

## 132. சிங்கன் அவளைக் கேட்டல்

தரு

எங்கே ஒளித்திருந்தாய் சிங்கியாரே - நான்
எட்டுத் திக்குந் தேடினேன் காண் சிங்கியாரே
கங்கை பிறைசூடி பங்கில் சிங்கியாரே - நான்
காத்திருந்து தேடினேன் காண் சிங்கியாரே. 1

ஆணவ காமியத்தால் சிங்கியாரே - நான்
அலைந்ததுவை விள்ளப் போமோ சிங்கியாரே
தாளும் அனல்பொறியால் சிங்கியாரே - நான்
தயங்கினது சாற்றப் போமோ சிங்கியாரே. 2

என்னை மறந்திருந்தால் சிங்கியாரே - பின்னே
எப்படி நான் தேறுவன் காண் சிங்கியாரே
உன்னை நினைந்திருந்தேன் சிங்கியாரே - எனக்
குற்றதுணை நீயல்லவோ சிங்கியாரே 3

திருவாய் மொழிகள் கேட்டுச் சிங்கியாரே - என்
சிந்தை நன்றாய்த் தேற வேணும் சிங்கியாரே
குருவாய் நினைந்திருந்தேன் சிங்கியாரே - கருக்
கட்டி லென்னை யாட்டி வைத்தாய் சிங்கியாரே 4

---

130 இப்பாடலில் ஓர் அடி காணப்படவில்லை.

132-1சூடி - சூடியவரான சிவபெருமான்

132-2 அலைந்ததுவை - அலைந்ததை, அனல் - காம அனல்

132-4. திருவாய் மொழிகள்-உனது பேச்சு, நம்மாழ்வாரின் அருளிச் சொல்.

ஒவ்வா துயிரைப் போலே சிங்கியாரே - எனக்
கொத்த நாட்டங் காட்டுவதார் சிங்கியாரே
சவ்வாது பூசிக்கொண்டு சிங்கியாரே - நீ
தாண்டவ மாடினையோ சிங்கியாரே 5

கண்டு பிடித்தே னுன்னைச் சிங்கியாரே - என்னைக்
கைவிட்டா லாகாது சிங்கியாரே
இன்றிங்கு நிற்ப தென்ன சிங்கியாரே - பாத
மேகவேணும் போகவாடி சிங்கியாரே 6

பாதம் பிரியாமல் சிங்கியாரே - சிவ
பாக்கியத்தைத் தாக்கி வாழ்வேன் சிங்கியாரே
கோகனகத் தாள் பணிவேன் சிங்கியாரே - குரு
கூட்டுசிவ யோகந்தாடி சிங்கியாரே 7

என்னாலே யாகாது சிங்கியாரே - காய
மிறுக்கக் குருக்கள் நீதான் சிங்கியாரே
பின்னாலே தேரவேணுஞ் சிங்கியாரே - இடை
பெற்ற சுழி மெத்த நன்று சிங்கியாரே 8

சாக்கிரத்தி லுன்னைப் போலே சிங்கியாரே - மென
தாரென்னக் காணுது காண் சிங்கியாரே
சீக்கிரத்தி லங்கே போக சிங்கியாரே - உற்ற
சேதிசொல்ல வேணுங்காண் சிங்கியாரே 9

சொப்பனத்தி லுன்னைப் போலே சிங்கியாரே - வந்து
தோற்றினதைப் பார்த்திருந்தேன் சிங்கியாரே
உற்பனச் சுழுத்தியிலே சிங்கியாரே - துரியத்
துன்னைப் போலே தோணுதுகாண் சிங்கியாரே. 10

அம்பலத்தில் நிற்பவளோ சிங்கியாரே - துரியா
தீதத்தில் போகவாடி சிங்கியாரே
வெம்பரத்தில் நிற்பவளோ சிங்கியாரே - உன்னை
வேண்டிக் கொண்டேன் தாண்டிக் காட்டுஞ் சிங்கியாரே. 11

---

132-7. கோகனம் - செந்தாமரை.

132-9. சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகளையும் சிங்கன் இங்குக் குறிப்பிடுகிறான்.

## 133. சிங்கன் அவள் அணிகளைப் பார்த்தல்

விருத்தம்

இப்படி வருத்தமாக இனிதுடன் சிங்கன் தானும்
செப்பிட வார்த்தை பேசிச் சிங்கியை வணங்கி யன்பாய்
மெய்ப்பட நண்பாய்க் கூடி விளங்கவே துலங்கும் மையில்
சொற்படி நகைகள் பார்த்துச் சொல்லுவான் சிங்கன் தானே.

## 134. இருவருக்கும் சம்வாதம்

தரு

உச்சியிலே குரு வட்டசுழி என்னசிங்கி - அது
உம்பருக்குச் சொன்ன குறிவழி கண்டாய் சிங்கா
தற்செயல் நெற்றிப் பிறைசுட்டி ஏதடி சிங்கி - அந்தத்
தாண்டவர் வெற்றி கண்டோ மென் றீந்தது சிங்கா 1

பச்சிலை போலே மேனி யிருப்பதேன் சிங்கி - அன்று
பற்றசிவ னஞ்சுண்ட பார்வையால் வந்தது சிங்கா
தச்சு புருவத் திடவழிப் பொட்டேது சிங்கி - முன்
சங்கர மூர்த்தி தழல் கோபம் கொண்டது சிங்கா 2

மூக்கிலே மணித்தொங்க லேதடி சிங்கி - திரு
மூலகுரு வீந்த மூக்குத்தி முத்தடா சிங்கா
நாக்கு நகையிதழ் முத்துஞ் சிவப்பதென் சிங்கி - அது
ஞாதாக்கள் மும்முறை நாடிப் பார்த்தது சிங்கா 3

பத்துநகை கண்டஞ் சுத்திக் கிடப்பதென் சிங்கி - அது
பண்டுள யோகிகள் பார்த்துப் புகழ்ந்தது சிங்கா
மெத்தக் கரியமணி பாச்சி ஏதடி சிங்கி - அது
மேன்மேலுஞ் சித்தர்கள் மெச்சி எனக்கீந்தார் சிங்கா 4

முற்கண்ட மார்பிலே பொற்கண்ட மேதடி சிங்கி - அது
மூத்தய்ய ரீந்த முன்மணித் தாவடம் சிங்கா
நற்கண்டத் துக்குமணித் தோற்பை ஏதடி சிங்கி - அது
நாதந்த வாசல் முனி நமக்கீந்தது சிங்கா 5

செகம்பு கழுங்கையில் பிரப்பங்கோ லேதடி சிங்கா - அது
சிட்டராஞ் சட்டைமுனி எனக்கீந்தது சிங்கா
மகம்புகழ் மாத்திரைக் கோல் தண்டு ஏதடி சிங்கி - அது
மாமா மலையாகு மவந்தியே கேளாதே சிங்கா 6

காதில் பின்னோலை ஒளியது ஏதடி சிங்கி - அது
காரணர் கொங்கணர்தா னெனக்கீந்தது சிங்கா
சிற்றிடை தன்னிலே செஞ்சிலை கண்டேன் சிங்கி - அது
தேவர்கள் சூரி விடைப்பட் டீந்தது சிங்கா 7

காலதைச் சுற்றியே பாம்பு கடிப்பதேன் சிங்கி - அது
காரணயோக மணிச்சிலம்ப மடா சிங்கா
நீலச்சிலம்பு பட்டமணி மேலென்ன சிங்கி - அது
நிர்மல வானந்த ரீந்திட்ட பாடகம் சிங்கா 8

சோதித் திருவடி மிஞ்சிய தேதடி சிங்கி - கணஞ்
சொல்லுயர் சத்தி சதாசிவ னீந்தது சிங்கா
பாதிக் கோவிந்தப் பதக்கத்தில் சுருளென்ன சிங்கி - மதி
பாற்கரன் பீலி பதஞ்சலி ஈந்தது சிங்கா 9

கோலத் திருவடி குந்துகா லிட்டதென் சிங்கி - அது
கோகுதீக ஆசனங் கோரக்க ரீந்தது சிங்கா
பீலி கழன்றிடப் பின்வாங்கி நிற்பதேன் சிங்கி - அது
பித்தர் சதாசிவனுற்ற சிவயோகஞ் சிங்கா 10

விண்ணிலே பால்நின்ற மேலதாய் நிற்பதேன் சிங்கி - அது
வேண்டிய சித்துக் கமுதூற லாமடா சிங்கா
என்னிலே நாலுமிணங்கும் விதமென்ன சிங்கி - அருள்
ஏகாந்தமாக இருப்பத னாலேகாண் சிங்கா 11

ஒட்டை தன்னிலே யிட்டிடு முட்டை யென்சிங்கி - அது
வும்மென்னும் யானை ஒடுங்கு மிடமடா சிங்கா
விட்டிடந் தன்னிலே தொட்டெழுத் தெங்கடி சிங்கி - அருள்
வேதச் சிரோமணிக் கேவல்செய் காட்டுவாள் சிங்கா 12

நற்புவனந்தனில் நானென்று நிற்பதார் சிங்கி - அது
நான்முகன் சத்தி சரசுவதி யாமடா சிங்கா
பொற்புவனமேல் மவ்விலே நிற்பதார் சிங்கி - அது
போற்றுமால் செல்வி புனல்பளிங் காமடா சிங்கா. 13

---

134-10. கோகு - புயம். கோரக்கர் - ஒரு சித்தர்.

நாயை விரட்ட நானென்று நின்றதார் சிங்கி - அது
    நல்லதோர் ருத்திரன் ருத்திரி யாமடா சிங்கா
பேயை விரட்ட அப்பாலில் வவ்வாலென் சிங்கி - அது
    பேசும் மயேசுரன் ஈசுபரியாமடா சிங்கா. 14

பாலமதிலே யகார மிருப்பதேன் சிங்கி - அதைப்
    பார்க்குஞ் சதாசிவன் பால்மணி யாமடா சிங்கா
கூலநிறத்தைக் குறியாக விள்ளடி சிங்கி - அதைக்
    கூறவும் வாயங் கூட்டு தில்லையடா சிங்கா 15

பார்த்த விடத்தி லதிசயம் ரொம்பவோ சிங்கி
ஏற்ற சதாசிவன் தன்னடி போற்றியே சிங்கா - அங்
கிணங்கி யிருக்க யிங்கித மோட்சமோ சிங்கி. 16

மோட்ச மெனக்காகச் சூட்ச முரையடி சிங்கி - கரு
    மூலத்தில் நித்தம் முயன்றுநீ பாரடா சிங்கா
மூச்சு முயன்றாக்கால் நீச்சு நிலைப்பெய்தே சிங்கி - சுருள்
    முத்திக்குச் சத்தி பதஞ் சத்தி யாமடா சிங்கா
பேச்சுப் பிறந்து பிறவாதிட மெங்கே சிங்கி - அருள்
    பெற்ற சதா சிவனுற்ற விடமடா சிங்கா
ஆச்சுப் பேச்சுச் சீவனென்ப தேதடி சிங்கி - உயிர்
    அனன்று போவ தறியாத மார்க்கங் காண் சிங்கா 17

தூங்கிய போதறி வெங்கே யொடுங் குங்காண் சிங்கி - அது
    சுத்த சைதன்ய நித்திரை யாமடா சிங்கா
தூங்கி விழித்தால் சுடரொளி காண்பதென் சிங்கி - அந்தச்
    சூட்சஞ் சதாசிவன் சொல்லுவார் கேளடா சிங்கா
ஓங்கிய சற்குரு எங்கே யிருப்பார் காண் சிங்கி - அது
    உற்பன மாச்சுது ஓரெழுத் தாமடா சிங்கா
ஓங்கிய நாதற் குறிவழி எங்கேடி சிங்கி - அருள்
    இரேசக பூரக கும்பக மேதடா சிங்கா 18

---

134-14. நாயை விரட்டநான் - சி என்ற மந்திர அட்சரம்.

134-15. இங்கு பிரமன் விஷ்ணு ருத்திரன் மகேசுவரன் முறையே சொல்லப் பட்டனர்.

134-16. இங்கு ஓரடி விடுபட்டுள்ளது,

17-18. மற்றவை ஈரடிக் கண்ணிகளாயிருக்க இவை நாலடிக் கண்ணி களாயுள்ளன; அல்லது இவை ஒவ்வொன்றையும் இரண்டு ஈரடிக் கண்ணி களாகவும் கொள்ளலாம்

அய்யர்பதம் போற்ற மெய்யது வாமோடி சிங்கி - அது
அச்சயம் நிச்சயம் பட்சமன முச்சஞ் சிங்கா
துய்யகலை ஞானம் செய்கை யறிவாரோ சிங்கி - சதாசிவன்
சொல்ல முத்தானந்தர் கேட்டுத்தொழில் செய்தார் சிங்கா

### 135. சிங்கன் சிங்கியை அழைத்தல்

விருத்தம்

எட்டெட்டுக் குள்ளா யுள்ள இயல்பெல்லாங் கேட்க நீயும்
மட்டிட்டுச் சொன்னாய் நன்றாய் மனமது தெளிந்து
கொண்டேன்
கட்டெட்டுத் திசைகள் தேடிக் கண்டுநான் பிடித்தே னுன்னை
ஒட்டெட்டு எழுத்துள் ளாடி ஒழிந்திட வாவா சிங்கி

### 136. சிங்கியின் மறுமொழி

ஒழிந்திட வாவா என்று உரைத்ததோர் சிங்கா கேளு
தெளிந்திடுங் கண்ணி குத்திச் சிக்கிய பட்சி சேர
அழிந்திட மெங்கே சொல்லு அவரவ ரீந்த தென்ன
மொழிந்திடு மென்று சொல்லி முயன்றவள் கேட்டா ளய்யே

### 137. சிங்கி வினவுதல்

வசனம்

என்னுடைய நகைகள் துகைகள் எல்லாம் கேட்டாய் போலே யாச்சுதே. நீ கண்ணி குத்தினதும் பறவைகளைப் பிடித்ததும் அவரவர் செய்த வெகுமதிகளையும் சொல்லு சிங்கா என்று குறத்தி கேட்க குறவன் சொல்லுவான்.

தரு

ஒக்குமாங் கண்ணியில் கொக்கது சிக்கிச்சுப் பாங்கி - அது
உற்ற சதாசிவ னுக்கென் றீந்தேன் காண் சிங்கி
தக்கும் பொருளது பார்க்க லாச்சடி அங்கி - அது
தந்தன னங்கு தலைப்பாயும் குண்டலி சிங்கி. 1

---

137. இங்கு இவ்வாறு சிங்கனைக் கேட்டல் பிற குறவஞ்சிகளில் காணப்படவில்லை.

தக்குங் கண்ணியில் நிற்குங் குரிச்சிக்குச்சுசிங்கி - என்னைத்
தானாண்டு கொண்ட தலைவனுக் கீந்தேன் காண் சிங்கி
திக்குந் திசைபத்து கண்ணியைக் குத்தினேன் வாங்கி - அதில்
செங்கால் நாரை யுள்ளானுமே சிக்கிச்சு சிங்கி

முக்குணச் சற்குரு மூலருக்கீந்தேன் நான் பொங்கி - உன்
முச்சந்தி தன்னில் முடுக்கிக் கிடந்தேன் நான் சிங்கி
பக்குவக் கண்ணியை ஒக்க நிறைத்தேன் காண் தங்கி - அதில்
பட்டுது கூழக் கிடா வோலத் தாராவும் சிங்கி. 3

நிற்கும் பதஞ்சலியார்க்கு முன்னீந்தேன்காணோங்கி - உண்டு
நேரானைத் தந்தான் நெருப்பாறு தாண்டினேன் சிங்கி
பக்கலைக் கண்ணியில் வக்காவுஞ் சிக்குச்சிச் சிங்கி - அதைப்
பராசருக் கீந்தேன் தராதலந் தந்தார் காண் சிங்கி. 4

அக்கோரைக் குள்ளே அகாரமாங் கண்ணியை வைத்தேன்
- அதில்
ஆடிப் பறவைகள் ஓடித் திரண்டுது மொய்த்தே
தக்கோரை வென்ற சதாசிவனுக்கு நினைத்தேன் - அவர்
தந்த சிவயோகக் கண்ணியைக் கொண்டு பிழைத்தேன் 5

நவ்விட்டுக் கண்ணியை ஒவ்விட்டு அங்கே பதித்தேன் - அதில்
நான்முகப் பட்சியும் மேல்முகமாய்க் கொண்டுதித்தேன்
ஒவ்விட்டுக் கொண்டு எடுத்து நமக்கென் றெதித்தேன் - இதை
உச்சிதமாய்ச் சமைத்தாலுண்டு மேலாசை பிணித்தேன் 6

பிரதாதி கேச முதலாயுடன் மையைப் பூட்டுவேன்
பாலுகத்தால் தினம் மேலுகத் தேலமு தூட்டுவேன்
பேதாதி பேதமா யெண்ணாம லெண்ணிக்கொள் சூட்சம் -
அண்ட
பேரண்டத் தந்தச் சதாசிவன் ஈகுவான் மோட்சம் 7

இந்தப் படியே அணுவக லாமலே வாழ்ந்து - சுழி
ஏகப் பரிபுசம் நாதத் திருப்போங் காண் போந்து
முந்தப்படி எனும் ஆற்றூரை வாழ்த்துறேன் கேளு - என்றும்
மோச வழியிது தீட்சை விதியிது வாமே

137-2. குரி - குருவி.

### 138. சிங்கன் சிங்கி வாழ்த்துதல்

கலிப்பா

அன்பு உகந்துவளர் ஆனந்த மாங்குறத்தி
இன்ப முகந்து இருதயத்தில் கால்வாசி
முன்பு மாற்றாரில் முதுமொழியாய் பாடியவள்
தெம்பு பெறஒன்றாய்த் தேசமதை வாழ்த்தினளே

**139.**

குருமுனிகோ ரக்கர்மச்சர் கொங்கணரும் காலாங்கி
உருமுனியாங் கமல போகரும் கயிலாசமுனி
திருமுனியாம் நந்திகன்னி சித்தருமாப் பிர்மமுனி
வருமுனியாம் வாசமுனி வாழிஎன்றும் வாழியதே

140.

ஆயிரத்திடைக் காடர்பிடி யானமுனி காக்கைரிஷி
பாயிரத்தெட் டாகுஞ்சித்தர் பாலகரும் அங்கமுனி
வேயுரைத்த வேடகத்தி லெண்ணலொண்ணா முனிரிஷியும்
வாயுரைத்த நாரதரும் வால்மிகரும் வாழியதே.

141.

மாலயனோ டுருத்திரனும்
மயேசுரனும் வாழியதே
ஆலயத்தில் மூன்றெழுத்துற்
றறிவில் வைத்தார்வாழியதே.

---

வாழ்த்து. இங்கு எல்லாச் சித்தரும் உரைக்கப் படுகின்றனர். - குருமுனி (அகத்தியர்போலும்), கோரக்கர், மச்சர், கொங்கணர், காலாங்கி, கமலமுனி, போகர், கயிலாசமுனி, நந்திமுனி, கன்னிசித்தர், பிரமமுனி, வாசமுனி, இடைக்காடர், காகபுசுண்டர், அங்கமுனி, நாரதர், வால்மீகர். திருமுனி என்பது திருமூலர் போலும், ஆக இங்கு 18 சித்தர் பெயர்கள் கிடைக்கின்றன. பின்னர் உருவமாயுள்ள பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன்.

### 142. வாழ்த்து

வேறு

வேதாந்த வஞ்சிதனை அய்யே - என்றும்
விரும்பினோ ரறிவில் மனமிக வாழி - மெய்யே
போதாந்த மாஞ்சீத மாயையே - கேட்கும்
புண்ணியர்கள் வாழிசிவ பூசைதின - மெய்யே
நீதாந்த மாகஇதைக் கற்றோர் - சித்து
நீடூழி வாழியருள் நேமமுறை யுற்றோர்
மாதாந்தம் பூவில் மனமுற்றோர் - சுற்றி
வருஷத்து வாழியென்றும் வாழியருள் பெற்றோர்.

### 143. வாழ்த்து

வெளி வளி யங்கிநீர் வாழி - பூமி
வேதத்தி லோங்கார மேல்பதம் வாழி
ஒளி சுழி குங்குமத் தாளி வஞ்சி
யோராறு ஆறுவரை யோங்க நீடு வாழி

### 144. குறவனும் குறத்தியும் சுகமுறுதல்

விருத்தம்

வாழவென் றுலகோ ரெல்லாம்
வாழ்த்துதல் தன்னைக் கேட்டு
நீளவெங் குறத்தி தன்னை
நிட்டையாஞ் சித்தர் மெச்சி
காளவெண் மேகம் போலக்
கனவெகு மதிகள் ஈயச்
சூழவே குறவ னோடு
சுகமதா னந்த முற்றே.

குறவஞ்சி முற்றும்

---

143. இங்கு பஞ்சபூதங்களுக்கும் முறையே வாழ்த்துச் சொல்லப்படுகிறது.
144. கேட்டு மெச்சி ஈய, ஆனந்த முற்றனர் என்று முடிக்க

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | | | |
|---|---|---|---|
| அக்குடனா | 101 | ஆயிவந்தாள் | 27 |
| அச்சமில்லா | 69 | ஆராய்ந்து | 38 |
| அசவைமந் | 46 | இடைக்காட | 84 |
| அஞ்சுமலை | 66 | இப்படிப் பாடி | 105 |
| அட்டசதா | 57 | இப்படி வருத்த | 133 |
| அண்டர் பதி | 36 | இழுக்குதய் | 124 |
| அண்டர் புகழ் | 28 | உச்சியிலே | 134 |
| அண்டர் மெச்சி | 104 | எங்கள் மலை | 41 |
| அத்தி யேறு | 5 | எங்களுட | 74 |
| அதிகமென்ற | 48 | எங்கே ஒளித்தி | 132 |
| அதி கொண்டு | 6 | எட்டெட்டு | 135 |
| அந்தப் புகழ் | 123 | எடுத்ததோர் | 126 |
| அப்பனே முத் | 29 | என்ற தோர் | 103 |
| அய்யர் தம் | 11 | என்று பல | 97, 128 |
| அய்ய னென்ற | 64 | ஐயமற்ற | 60 |
| அய்யனே | 92 | ஒக்குமாங் | 137 |
| அய்யாகூற | 54 | ஒருத்தனாலாக | 108 |
| அய்யே கூடல் | 77 | ஒழிந்திடவா | 136 |
| அரும்பும் | 7 | கண்டேன் | 111 |
| அருளும் சிவ | 90 | கண்ணி குத்த | 118 |
| அழைத்து நான் | 33 | கண்ணியை | 110 |
| அன்பு கந்து | 138 | கத்தர் சதா | 31 |
| அன்புடன் | 98 | களங்கமதில் | 106 |
| ஆசையுறுங் | 20 | காணுமிந்த | 67 |
| ஆடின குற | 102 | குத்தின பண்பு | 119 |
| ஆண்டவருக் | 75 | குருமுனி | 139 |
| ஆதிகயிலா | 8 | குருலாங்குயில் | 24 |
| ஆதிகுரு | 12 | குறம்பாடி | 76 |
| ஆதிசதா | 93 | கெம்பாரையே | 120 |
| ஆதிமன்ற | 51 | கொடுத்த மலை | 42 |
| ஆயிரத்தி | 140 | சத்தம் புகழ் | 43 |

| | | | |
|---|---|---|---|
| சத்தமுமுளர | 32 | நீங்காப்புன | 19 |
| சத்தி கணபதி | 89 | பட்சியைக் | 107 |
| சந்த தம்பரி | 16 | பத்திசிவ | 65 |
| சயமான | 49 | பார்க்குறவர் | 79 |
| சாதகுல | 80 | பாருபாரை | 113, 114 |
| சாந்து முறைபா | 72 | பூமகள் மேல் | 81 |
| சாந்து முறையா | 38 | பூமிதனில் நாள் | 86 |
| சித்தாதி சித்த | 85 | பூமிதனில் நாற் | 91 |
| சித்தாதி சீட | 17 | பொய்யுரை | 73 |
| சிக்கியபட்சி | 125 | பொருந்தும் | 26 |
| சிக்கினும் | 122 | மச்ச முனி | 82 |
| சிங்கியைக்க | 130 | மதிகதிர் | 1 |
| சிங்கியைக்கா | 127 | மதியே முன் | 23 |
| சிங்கியைத்தே | 129 | மருவுற்ற | 70 |
| சுக்லக்குற | 78 | மன்னிய குரு | 10 |
| செயமான | 55 | மனமே உனக் | 21 |
| சேர்ந்தவர் | 61 | மாமணி | 34 |
| சொல்லுகிறேன் | 30, 44 | மாலயனோ | 141 |
| சொன்னமொழி | 95 | முத்தென்ற | 94 |
| தரு விந்து | 96 | முள்ளூறு | 14 |
| தண்மைசிவ | 58 | மூலமாந் | 2 |
| தரித்ததோர் | 99 | மெய்யென்ற | 88 |
| தற்சொரூப | 112 | மேயுங்குளந் | 116 |
| தன்னை யறி | 18 | மேயுற | 121 |
| நாசர் புகழ் | 40 | மேயுதடை | 115 |
| தானவரை | 53 | மேலான | 56 |
| தானவனாய் | 59 | ரஞ்சிதமே | 71 |
| தானான | 52 | வஞ்சிவந்தாள் | 35 |
| தானென்ற வத | 50 | வடிவாகு | 45 |
| தானென்ற மேரு | 62 | வந்ததோர் | 131 |
| திங்கள்மும் | 67 | வாசலிது | 39 |
| திருத்தடையே | 109 | வாலை எழுத்து | 15 |
| திருமூல | 83 | வாழவென்று | 144 |
| தென்றலே | 25 | விந்துற்ற | 13 |
| தேடின | 100 | வெளிவளிய | 143 |
| நந்தியை | 3 | வேதம் பொரு | 64 |
| நாதமும் | 9 | வேதாந்த | 142 |